# மர்மப்பெண்



## திகில் சித்திரம்



கே.எஸ்.ஆனந்தன்

...தெரு விளக்குகள் அணைந்தன.

இருள் சூழ்ந்தது.

இடுகாட்டின் ஒரு பகுதியிலிருந்து விசில் சப்தம் மூன்று முறை தொடர்ந்து கேட்டது.

எதைக் கண்டோ தெரு நாய்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஊளையிட ஆரம்பித்தன.

கல்லறைகளுக்கு மத்தியில் நின்ற சுருளிக்கு தேக மெல்லாம் உதறலெடுத்தது.

கரங்கள் நடுங்கின.

வானத்தை நோக்கி ஒரு சிவப்பு வெளிச்சம்!...

...திடீரென்று அது மறைந்து, பச்சை நிற ஒளி தெரிந்தது. அதுவும் அணைந்து ஊதா நிறத்தில் ஒளி வெள்ளம் பாய்ந்து வந்தது.

...கிறீச்... கிறீச்... சப்பாத்துக் கால்களால் நடக்கும் ஒலி அமைதியைக் கிழித்துக் கொண்டு வந்தது.

சுருளி நெஞ்சம் படபடக்க, விழிகளை வெட்டி உற்று நோக்கினன்.

வர்ண ஒளிக்கிடையே ஓர் எலும்புக் கூடு அசைந்து அசைந்து அவனை நோக்கி வந்து கொண்டிருந்தது....

...மேலே படியுங்கள்

**JANA-MITHIRAN VELIYEEDU**

# "Marma Penn"


Written
by

**K. S. ANANDAN.**



Published by:

**EXPRESS NEWSPAPERS (CEYLON) LTD.**
185, GRANDPASS ROAD.
COLOMBO-14.



*COPY RIGHTS*
RESERVED WITH
THE PUBLISHERS


**PRICE Rs. 1/90**

ஜன-
மித்திரன்
வெளியீடு

# மர்மப் பெண்

## 1. எலும்புக் கூடு நகர்ந்தது!

அமாவாசைக் கரும் இருள் வெளியுலகை முற்றுகை யிட்டிருந்தது. மாசி மாதத்துப் பனி இருளோடு ஐக்கிய மாகி அதன் கருமைக்கு மெருகேற்றிக் குமைந்து கொண் டிருந்தது. ஊரெல்லாம் அமைதியாக உறங்கிக்கொண்டிருந் தது.

யாழ்ப்பாணத்தின் தென் கிழக்குப் பகுதியான கொழும்புத்துறையில் கிறிஸ்தவ இடுகாடு இருக்கும் வீதி யில் ஓர் உருவம் நடந்து கொண்டிருந்தது.

அமைதி நிறைந்த இரவில் அவ்வுருவம் அவசரமாகச் சென்று கொண்டிருந்ததால் ஏற்பட்ட காலரவம் கேட்டு, தெரு நாய் ஒன்று விழித்துக்கொண்டது. ஒரு சொறி நாய் மெல்ல உறுமத் தொடங்கியதும், அதைத் தொடர்ந்து அந்த ஊரே அமர்க்களப்பட்டது. ஆனால், இவைகளை அலட்சியம் செய்தவாறே நடந்து கொண்டிருந்தது அந்த உருவம்.

மின்சார விநியோகத்தில் கோளாறு காரணமாகத் தெரு விளக்குகள் அணைந்துபோயிருக்க வேண்டும். இருளில் சென்றுகொண்டிருந்த அவ்வுருவத்திற்கு அந்தச் சூழ்நிலை மிகவும் சந்தோஷத்தை அளித்தது.

''டேய் சுருளி! சாதகமான சூழ்நிலைதான். உன் தொழிலில் இன்று போதிய பலன் கிடைக்கப் போகின்றது'' என தனக்குத்தானே வாய்விட்டுக் கூறியதிலிருந்து, அவ் வுருவத்தின் பெயர் சுருளியப்பன் என்பது தெரிந்தது.

இருந்தாற்போல் தெரு விளக்குகள் பளிச்சிட்டு எரிய ஆரம்பித்தன. சுருளி இடுகாட்டுக்குள் பிரவேசித்து தெரு விளக்குகளின் ஒளியில் அந்தப் பிணக் குழியை அடையாளம் கண்டுகொண்டான். அவன் முகத்தில் ஓர் புன்சிரிப்பு நெளிந்தது.

மனைவி- மக்கள், ஊர்- உறவு இல்லாத ஓர் அனாதை யான சுருளி, கிட்டத்தட்ட மூன்று வருடங்களுக்கு மேல் இந்த ஊரில் வசித்துவருகிறான். பேய், பிசாசு என்பவற் றில் அவனுக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும் ஓரளவு பய மிருந்தது. இரவில் இடுகாட்டில் பிணக்குழி தோண்டி, அப் பிணத்துக்கு அணிவித்துள்ள விலையுள்ள பொருட்களை எடுத்து விற்று, வயிற்றை நிரப்பி வரும் அவனை, அவ்வூர் மக்கள் மந்திரவாதி என்றே நினைத்தனர். அவன் இடுகாடு செல்வதும், மயானத்தில் இருப்பதும் பலருக்கும் தெரியும். ஆனால், அவன் அங்கு ஏன் செல்கிறான் என்ற விடயம், எவ ருக்குமே தெரிந்திருக்க நியாயமில்லை.

அன்று அவனது அவசரத்துக்குக் காரணமுமிருந்தது. முதல் நாள் ஒரு பருவக் கன்னியின் சடலம் அந்தப் புதை குழியில் புதைக்கப்பட்டது! அதை நேரிலேயே பார்த்திருந் தான் சுருளி. அப்பெண்ணின் சிறிய தாயார் தன் மூத்தா ளின் மகளுக்குரிய ஆபரணங்கள் அத்தனையையும் அப் படியே போட்டுவிட்டிருந்தாள்.

அன்று நடுநிசி வரை சுருளியின் மனதில் அமைதியே இல்லை. அவனுடைய ஏழு வருட அனுபவத்தில் இப்படி அதிகமான நகையுடன் பிரேதத்தை புதை குழிக்குள் எவ ரும் வைத்ததை அவன் கண்டதில்லை. இளம் கன்னிப்

பெண், விஷப்பாம்பு கடித்ததால் ஏற்பட்ட அகால மரணத்தினுல் மனமுடைந்த சிற்றன்னேயார் அப்படியே நகைகளுடன் பிரேதத்தைப் புதைக்கச் சொன்ஞள் என்று பலரும் எண்ணினர். ஆனுல், இறந்துபோன கன்னிப் பெண் கீதாஞ்சலி உயிர்பெற்றெழுந்தால் சிற்றன்னே தனக்கிழைத்த கொடுமைகளே வரிசைக்கிரமமாகக் கூறுவாள்.

புதைகுழியைத் தோண்டிய சுருளி இடையில் செருகியிருந்த ரோச் விளக்கை அடித்துப் பார்த்தபோது பிரேதப் பெட்டி நன்கு தெரிந்தது. பின்பு ரோச்சை அணேத்து விட்டு குழிக்குள் இறங்கி பெட்டிக்கு மேலிருந்த மண்ணே நன்கு துடைத்துக்கொண்டான்.

பெட்டியைத் திறப்பதற்கு முன்பு தெய்வத்தை நன்கு வணங்கிக் கொண்டான். அதேவேளே, விஷக்கடிக்கு மருந்து செய்யும் டாக்டர் சிவகுமாரையும் மனமார வாழ்த்தினுன். அவர் மட்டும் வீட்டில் நின்றிருந்தால் அந்தப் பெண்ணே நிச்சயம் பிழைக்க வைத்திருப்பார். இப்படிப் பலரைச் சாவின் பிடியினின்றும், விஷக்கடிச் சிகிச்சையினுல் மீட்ட பெருமை அவருக்குண்டு. அன்று அவர் எங்கோ சென்றுவிட்டிருந்ததால், தனக்கு இப்படியொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இந்தப் பிணத்துக்குப் போடப்பட்டிருக்கும் நகைகளே ஆறுமாதகால சீவியத்துக்குப் போதுமானது என்று எண்ணிக்கொண்டே பிரேதப் பெட்டியின் மூடியை மெல்லக் கிளப்பினுன்.

அதேவேளே தெருவிளக்கு மீண்டும் அணேந்தது.

இருள் சூழ்ந்தது.

இடுகாட்டின் ஒரு பகுதியிலிருந்து விசில் சப்தம் மூன்று முறை தொடர்ந்து கேட்டது.

எதைக் கண்டோ தெருநாய்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஊளேயிட ஆரம்பித்தன.

சுருளியின் மனதில் அச்சம் தோன்றிற்று. உடல் வியர்த்துவிட்டது. மனதைத் தேற்றிக்கொண்டு பிரேதப் பெட்டியைத் திறந்தான். அப்பெட்டிக்குள் விறைத்துப் போன நிலையில் கிடந்த கீதாவின் பிணத்தைப் பார்த்த போது அவனுடைய மனதில் நிறைந்திருந்த அச்சம் சிறிது சிறிதாக மறைந்து, ஆபரணங்களின் மேல் ஏற்பட்ட மோகம் மேலோங்கிநின்றது.

கையில் வைத்திருந்த ரோச்சை வைத்துவிட்டு, பிரேத மாய்க் கிடந்த பெண்ணின் கரங்களைப் பற்றி, ஒரு கரத்தி லுள்ள வளையல்களை உருவிக் கழற்றினான்.

அதேவேளையில், முன்பு கேட்ட அதே விசில் சப்தம் மூன்றுமுறை தொடர்ந்து கேட்டது.

அடங்கிப் போயிருந்த நாய்களின் ஊளைச் சத்தம் மீண்டும் ஒலிக்கத்தொடங்கியது.

பிரேதத்தின் ஒரு கரத்திலிருந்த மூன்று வளையல்களை யும் கழற்றிய சுருளியின் மனதில் விபரீதமான யோசனை ஒன்று உதித்தது. அந்நினைவுக்கு மறுபடியும் இடம்வைக் காதவாறு மீண்டும் விசில் சப்தம் மும்முறை ஒலித்தது.

இடுகாட்டின் நடுவில், கல்லறைகளுக்கு மத்தியில், அவன் நின்றுகொண்டிருந்த இடத்திற்கு சமீபத்தில் அது ஒலித்தது. அதைக்கேட்டு உள்ளத்திலே உதறல் எடுத்தது. கரங்கள் நடுங்கின.

நிலத்தில் வைத்த ரோச்சை எடுப்பதற்காகக் கையை நீட்டிய சமயம், ஒரு கல்லறைக்குப் பின்புறமிருந்து வானை நோக்கி சிவப்பு நிற வெளிச்சம் தெரிந்தது.

திடீரென அவ்வொளி மறைந்து பச்சை நிற ஒளி தெரிந்தது.



அதுவும் அணைந்து ஊதா நிறத்தில் ஒளி வெள்ளம் பாய்ந்த போது, சுருளியின் இதயம் படக்படக் கென அடித்துக்கொண்டது. புதை குழியை விட்டு மேலே ஏற முயன்முன், முடியவில்லை. உடல் வியர்த்து விறுவிறுத்து நடுங்கிக் கொண்டிருந்தது. கையி லிருந்த வளையல்கள் திரும்பவும் பிரேதப் பெட்டிக்குள் விழுந்துவிட்டன.

இதுவரை காலமும் காணுத ஓர் அற்புதத்தை சுருளி நேருக்கு நேர் பார்த்தான்.

இப்படி ஒரு பயங்கர அனுபவம் அவனுடைய ஏழு வருட அனுபவத்தில் இதுதான் முதல் முறையாகும்.

மூவர்ணத்தில் மாறி மாறி ஒளி வானத்தை நோக்கி நிலத்திலிருந்து புறப்பட்டுக்கொண்டே இருந்தது.

திடீரென ஒளி அணைந்துவிட்டது. சுருளி ரோச்சை எடுத்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டு ஓடிவிட லாமென எண்ணினுன்.

அதே சமயம் மீண்டும் சிவப்புநிற ஒளி வானை நோக்கி பிரகாசித்து, திரும்பவும் மூவர்ண ஒளி மாறிமாறி வீசியது. அத்துடன் கிறீச்கிறீச் என்னும் ஒலி இடுகாட்டின் அமைதி யைக் கிழித்துக்கொண்டு ஒலித்தது.

ஒளி வந்த திசையில் இமைக்காது பார்வையைச் செல்லவிட்ட சுருளிக்கு கண்கள் மேலிமைக்குள் செருகிக் கொண்டன. உடல் கிடுகிடு என நடுங்கியது. மீண்டும் ஒரு முறை விழிகளை வெட்டி உற்றுநோக்கினுன்!

வர்ண ஒளிக்கிடையே ஓர் எலும்புக் கூடு அசைந்து அசைந்து அவனை நோக்கி வந்துகொண்டிருந்தது. அதைக் கண்டு சுருளி மயக்கமுற்று தடால் என புதைகுழிக்குள் விழுந்தான்.

## 2. பிணம் பேசியது!

இரவு இரண்டு மணி!

சுண்டிக்குளி வீதியிலுள்ள ஒரு தனியார் வைத்திய நிலையத்திற்கு, மயக்க நிலையில் உள்ள ஓர் பெண்ணுடன் ஒரு மனிதன் நுழைந்தான். வாசலில் கார் கோண் சப்தம் கேட்டதுமே துடித்துப் பாய்ந்து எழும்பிய டாக்டர் ரஞ்சிதம் தன் படுக்கையறை உடுப்பைச் சீர் செய்தவாறு முன் ஹோலுக்குள் நுழைந்தாள். அதே வேளையில் பெண்ணைத் தூக்கி வந்த மனிதனும், முன் ஹோலுள் நுழைந்தான். அவனைக் கண்டதும் புன் சிரிப்பொன்றை உதிர்த்தவாறு டாக்டர் ரஞ்சிதம் அவனுக்கு உதவ முற்பட்டாள்.

''டாக்டர் இந்தப் பெண் மயக்கமடைந்திருக்கிறாள். சுயநினைவு பெற்றவுடன் அவள் வீட்டுக்குப் போக விரும்பினால் தடுக்காமல் அனுப்பிவிடுங்கள். நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டு வெளியேறிச் சென்றான்.

அந்த மனிதனையும், அந்தப் பெண்ணையும் பார்த்துத் தன்னுள்ளேயே சிரித்துக்கொண்டாள் டாக்டர் ரஞ்சிதம்.

இது நடந்த சமயம், இடுகாட்டில் எலும்புருவத்தைக் கண்டு மயக்கமுற்று விழுந்த சுருளியப்பன் மயக்கம் நீங்கி விழித்தான்.

ஜில் என்ற குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. பிரேதத்திற்கு ஊற்றிய அத்தரின் நறுமணம் அந்தச் சீதளக் காற்றில் கலந்து ஓர் சுகந்த மணத்தைத் அளித்தது.

சுருளிக்கு தான் கண்ட காட்சி நினைவுக்கு வந்தது. தலையை நிமிர்த்தி நாலாபுறமும் பார்த்தான். எங்கும் ஒரே அமைதி! அணைந்திருந்த தெருவிளக்கு பளிச்சிட்டு எரிந்துகொண்டிருந்தது. சிறிது சிறிதாக அவன் உள்ளத்தைக் கவ்வியிருந்த பயம் தெளிவுற்றது. ஒரே ஓட்டமாய் அங்கிருந்து ஓடிவிட எண்ணினான்.

புறப்படுமுன், ரோச்சை அடித்து குழிக்குள்ளிருந்த பிணத்தைப் பார்த்தான்.

அதிர்ச்சி காத்திருந்தது.

அழகேயுருவாயிருந்த இளம் பெண்ணின் பிணம் எங்கே?

அழகிழந்த உருவமாய் மாறிவிட்டதா?

ரோச்சைப் பிடித்திருந்த கை நடுங்கிக் கொண்டிருந்தது. திறந்திருந்த பெட்டியின் மூடியை எடுத்து மூடிவிட முயன்றான்.

அதேவேளை, 'கொர் கொர்' என்ற சத்தமும், தொடர்ந்து ஏதோ இரைச்சலும் கேட்டன சுருளியனுக்கு.

பெட்டியின் மூடியை இறுக அமர்த்தினான்.

அப்படி அவன் அமர்த்தியதுதான் தாமதம், "டேய் சுருளியப்பா! பெட்டியை மூடி முன்புபோல மண்ணால் மூடிவிடு. இங்கே கண்ட காட்சிகளை எங்கேயும் சொல்லாதே. சொன்னால் மண்டை வெடித்து சுக்கல் சுக்கல் ஆகிவிடும். சொன்னபடி செய்துவிட்டு உடனே ஓடிவிடு" என்று பெட்டிக்குள்ளிருந்த பிணம் பேசியது.

சுருளியப்பனுடைய உடல் உறுப்பிலுள்ள தசைகள் வெடவெடவென்று நடுங்கின.

பெட்டிக்குள் கேட்ட குரல் ஆணுடையதா? பெண்ணுடையதா? என்று கூற முடியாதளவிற்கு, ஏதோ பயங்

கர உறுமலாக இருந்தது. சொன்னபடி செய்யாதுபோனுல் பெரும் அபாயம் விளையலாமெனப் பயந்து, சுருளி மின் சார இயந்திரம் போலச் சுறுசுறுப்பாகஇயங்கினுன்.

பிணக்குழி அவனுல் தோண்டப்படுவதற்கு முன்பு எப் படியிருந்ததோ அப்படியே மூடிவிட்டு ஓட்டமும் நடையு மாய் இடுகாட்டைவிட்டு வெளியேறினுன்.

★

டாக்டர் ரஞ்சிதத்தின் வைத்திய நிலையத்தில் மயக்க மடைந்திருந்த இளம் பெண் துயில் நீங்கி எழுந்தவள் போன்று சுற்றும் முற்றும் பார்த்தவாறே கட்டிலினின்றும் எழுந்து உட்கார்ந்தாள். அவள் அழகிய முகம் வெய்யிலின் கொடுமையால் வாடிய ரோஜா போன்று வாட்டமுற் றிருந்தது. தன்னேயே பார்த்துக்கொண்டிருக்கும் பெண் ணைப் பார்த்து, ''நீங்கள் யார்? நான் எப்படி இங்கு வந் தேன்?'' என்று கேட்டாள்.

''நீங்கள் இங்கு வரமுன்பு எங்கே இருந்தீர்கள்? உங் கள் பெயரென்ன? இவற்றிற்கு நீங்கள் முதல் பதில் கூறுங் கள்'' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் ரஞ்சிதம்.

''இரவு வீட்டில்தான் படுத்திருந்தேன். எப்படி இங்கு வந்தேன்? என் பெயர் கீதாஞ்சலி'' என்று அப்பெண் கூறியபோது சிரித்துக்கொண்டேயிருந்தாள் ரஞ்சிதம்.

''மிஸ் கீதா! என்னுடைய பெயர் டாக்டர் ரஞ்சிதம்.''

''கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்ருள் அப்பெண்.

''நல்லது, உங்களை ஒரு பெரியவர் மயக்க நிலையில் இங்கு கொண்டுவந்து சேர்த்தார். அவர் உங்களுக்கு வேண்டியவரா?''

''டாக்டர்! இது என்ன கேள்வி? நீங்கள் என்னை ஏமாற்றுகின்றீர்கள்.''

''மிஸ் கீதா! நான் உங்களை ஏமாற்ற வேண்டியதில்லை. விடிந்ததும் நீங்கள் உங்கள் வீட்டிற்குப் போகலாம். எனக்கு எதுவித ஆட்சேபனையும் கிடையாது'' என்று கூறிக்கொண்டே கடிகாரத்தைப் பார்த்தாள்.

''டாக்டர், தயவு செய்து உடனே என்னை வீட்டுக்குப் போக அனுமதியுங்கள். மணி மூன்றாகப் போகின்றது'' என்று கூறினாள் கீதா.

''ஆல்ரைட்! உங்கள் விருப்பப்படியே செய்கின்றேன்'' என்று கூறிவிட்டு அவள் எழுந்தபோது, அறையில் டெலிபோன் மணி ஒலித்தது. டாக்டர் ரஞ்சிதம் போனில் அழைத்தவர்களுக்குப் பதில் கூறிக்கொண்டிருக்கையில், அந்த ஹோலிலுள்ள பொருட்களையும், சுவரிலே மாட்டியிருந்த படங்களையும் பார்த்துக்கொண்டிருந்தாள் கீதா.

சுவரிலே தொங்கிக்கொண்டிருந்த நாள் காட்டியைப் பார்த்தபோது, கீதாவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ''நேற்று வெள்ளிக்கிழமைதானே. இந்த டாக்டர் வீட்டில் மட்டும் ஞாயிற்றுக்கிழமையா? சுத்தப் பயித்தியக்காரியாய் இருக்கிறாளே இந்த படித்த டாக்டர்'' என்று எண்ணிக்கொண்டாள். அதேவேளையில் டாக்டர் ரஞ்சிதம் அவளை வீட்டிற்குக் கூட்டிச் செல்வதற்காக, புறப்பட்டு வந்துகொண்டிருந்தாள்.

விலையுயர்ந்த மோட்டார் காரில் டாக்டர் ரஞ்சிதத்திற்கு அருகே அமர்ந்து செல்லும் பொழுது, கீதாவுக்கு உள்ளத்தில் பெருமிதமிருந்தாலும் படுக்கையில் முதல் நாளிரவு படுத்த தான், எப்படி அங்கு வர நேரிட்டது என்ற எண்ணமே மனதில் அலைமோதிக் கொண்டிருந்தது. டாக்டரும் அவளுடன் எதுவும் பேசவில்லை. கொழும்புத்

துறையிலுள்ள அவள் வீட்டு வாசலில் கீதாவை இறக்கி விட்டு, காரைத் திருப்பிக்கொண்டு சென்ருள் ரஞ்சிதம்.

டாக்டர் ரஞ்சிதத்தின் கார் மறைந்ததும் வெளி வாசற்கதவில் 'டக் டக்' என்று தட்டினுள் கீதா. உள்ளே யாரோ எழுந்து மின்விளக்கின் சுவிச்சைத் தட்டும் ஒலி. அதைத் தொடர்ந்து முன்ஹோலில் ஒளி வெள்ளமான வெளிச்சம். கதவைத் திறக்காமலே உள்ளேயிருந்து, 'யாரது?' என்று கேட்டாள் பார்வதி. அவள்தான் கீதா வின் சித்தி.

கீதாவின் அம்மா இறந்ததும், அவள் தந்தை பார் வதியை மணந்துகொண்டார். பார்வதிக்கு ஒரு மகளும், ஒரு பையனும். அவர்களுடன் கீதாவையும் விட்டுச் சென்று விட்டார் அவள் அப்பா. ஏகப்பட்ட சொத்து அத்தனைக் கும் கீதாவே உரிமையாளர். கீதாவிலும் அவள் சித்திக்கு அன்பில்லாமலில்லை. ஆனுலும் தன் பிள்ளைகள் போல வருமா?

பார்வதியின் குரலைக்கேட்டதும், "நான் தான் சித்தி-கீதா" என்ருள்.

"கீதாவா! அவள் இறந்து இன்ரேடு நாலுநாளாகப் போகுதே! நீ யாரடி மாயம் போடுகிருய்?" என்று கூறி விட்டு தன் மகளையும், வேலையாளையும் அழைத்தாள் பார்வதி.

"சித்தி! நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்? நான் படுக்கை யில் படுத்திருந்தேன். நீங்கள் மருத்துவமனையில் என்னைக் கொண்டுசென்று விட்டுவிட்டு, பின்பு ஏன் இப்படிப் பித்த லாட்டம் போடுகின்றீர்கள்?"

"நீ யாரடியம்மா? உண்மையில் எங்கள் கீதா படுக்கை யிலயே பாம்பு கடித்து இறந்து போனுள். அவளைப் புதைத்து இரண்டு நாட்களாகுது." உள்ளேயிருந்து வேறு யாரோ பேசினுர்கள்.

''அம்மா, சில சமயம் கீதாம்மா ஆவி வந்து இப்படிப் பேசினாலும் பேசும்.''

கீதாவுக்கு பேய் பிசாசின் கதை கேட்டதும், உட லெல்லாம் நடுங்க ஆரம்பித்துவிட்டது. ''சித்தி எனக்கு பயமாயிருக்கு சித்தி, கதவைத் திறவுங்கள்'' என்று மன் றாடினாள்.

''அடி பைத்தியமே! உண்மையான கீதாவே உயிர் பெற்று வருவதானாலும் இனி இங்கு வர முடியாது. அவ ளுக்கு இங்கே எந்த உரிமையும் கிடையாது. உடனே ஓடிவிடு. இல்லே, பொலிசுக்கு அறிவித்து உன்னைப் பிடித் துக்கொடுத்துவிடுவேன்'' என்று உள்ளே நின்ற பார்வதி மகன் ராஜா மிரட்டினான்.

''பொலிசா? என் வீட்டில் நான் நிற்பதற்கு பொலி சாரால் என்ன செய்ய முடியும்? முதலில் கதவைத் திறந்து நான் உண்மையான கீதாவா? அல்லவா? என்பதையாவது தெரிந்துகொள்ளக் கூடாதா தம்பி?'' பரிதாபமாக ஒலித் தது கீதாவின் குரல்.

அவன் கதவைத் திறக்க முயன்றிருக்க வேண்டும், ''வேண்டாமடா ராஜா. அவள் இளம் வயதிலே செத்த வள். மோகினிப் பிசாசாக உலாவுவாள். நீ வெளியே போனால்...'' பார்வதியின் குரல்.

''அம்மா! உண்மைக் கீதாவாயிருந்தாலும் இதோ இந்த ரிவால்வரால் சுட்டுவிட்டு எங்கள் வீட்டுத் தோட் டத்திலேயே புதைத்துவிடுகின்றேன். பேயும், பிசாசும் இந்தக் காலத்திலா? எல்லாம் சுத்தப் பயந்தாங்கொள்ளி கள். இது யாரோ 'பிளாக் மெயில்' விளையாட்டு நடத்த துணிந்திருக்கின்றார்கள்'' என்று கூறிவிட்டுக் கதவைத் திறந்தான். முன் ஹோலில் எரிந்துகொண்டிருந்த விளக் கின் வெளிச்சத்தில் கீதாவின் உருவம் தெரிந்தது. அவள் ஒரு அடி எடுத்து முன்வைத்தாள்.

“நீ யார்? நகர்ந்தால் சுட்டுவிடுவேன். மரியாதையாய் கூறிவிடு. இல்லையேல்...” என்று கூறி முடிப்பதற்குள் உள்ளே எரிந்துகொண்டிருந்த மின் விளக்குகள் திடீரென அணைந்துவிட்டன. எங்கும் ஓரே இருள், யாரும் எதிர் பாராத விதமாக அங்கே ஓர் அதிசயம் நடைபெற்றது.

முன் வாசல் கதவுக்குச் சமீபத்தில் நிலத்திலிருந்து வானை நோக்கி ஓர் சிவப்புநிற ஒளி புறப்பட்டது. திடீர் திடீரென மாறி மாறி பச்சை, ஊதா நிறங்களில் காட்சி யளித்தது. ஒரு விநாடிப் பொழுதுதான் அப்படித் தெரிந் திருக்கும். அவ்வொளிக்கு நடுவே எலும்புருவம் அசையத் தொடங்கியது. பார்வதியால் வாய்திறக்க முடியவில்லை. ராஜா உள்ளே பாய்ந்து கதவைப் பூட்டித் தாழ் போட்டுக் கொண்டான்.

இவ்வதிசய நிகழ்ச்சியால் மனம் தடுமாறிய சீதாவின் உடலில் நடுக்கம் ஏற்பட்டது. எலும்புருவம் அவளை நோக்கி முன்னேறி வந்தது. அவளால் சப்தம் போட முடிய வில்லை. அசைவற்ற சிலையாக நின்றாள். விழிகள் தாமா கவே மூடிக்கொண்டன! கிறீச் கிறீச் என்ற ஒலி மட்டும் அவளை நெருங்கி வந்துகொண்டிருந்தது. அவள் இருதயம் படபடவென வேகமாக அடித்துக் கொண்டது.

அவள் அருகில் வந்ததும் அவ்வொளி நின்றுவிட்டது விழிகளை வலிந்து திறந்து பார்த்தாள் சீதா. அளவுக்கதிக மான அபாயத்தின் போதும், உள்ளத்தில் ஓர் அசாதா ரண துணிவு பிறப்பது இயற்கை. அப்படித்தான் அவள் உள்ளத்திலும் துணிவு ஏற்பட்டது. விழிகளைத் திறந்து கொண்டாள். அங்கே வர்ண விளக்குகளுமில்லை, எலும்பு உரு வமும் இல்லை. ஆனால், அவளுக்கு சமீபத்தில் நின்று யாரோ அவள் கூந்தலை வருடிவிட்டனர். நிச்சயமாக அது மனி தக்கரமாக இருக்க முடியாது என்று மட்டும் உணர்ந்து கொண்டாள் சீதா.

# 3. ஆவி உலகம்!

கீதா கடவுளை எப்படி நம்பினளோ, அதேபோன்று பேய், பிசாசும் இருக்கவேண்டுமென நம்பிக்கைகொண்டிருந்தாள். தன் கண்ணெதிரே அற்புதமாய்க் காட்சியளித்த திடுக்கிடும் நிகழ்ச்சிகளும், தன் தலையைக் கோதும் இரும்புக் கரமும் உண்மையென்பதை உணர்ந்த போது அவளுக்குப் பேச நா எழவில்லை. உள்ளத்திலிருந்து எழுந்து வந்த ஒலி, தொண்டையுடன் அமுங்கிவிட்டது. கால்களும், கைகளும், உடலும் சேர்ந்து உதறிக்கொண்டிருந்தன. உயிரோட்டமுள்ள ஒரு சிலை போல நின்றிருந்தாள். அவள் மௌனம் அதிகநேரம் நீடிக்கு முன்பே, ''கீதா, பயந்துவிட்டாயா அம்மா'' என்ற பழக்கப்பட்ட குரல் அவள் பின்னே ஒலித்தது.

அவள் உள்ளத்தில் புத்துணர்வு ஏற்பட்டது. அவள் நரம்புகளில் வேகமாக ஓடிக்கொண்டிருந்த குருதி தணிந்து ஓட ஆரம்பித்தது. ''நீ... நீங்களா அப்பா?'' என்ருள் நடுங்கும் குரலில்.

''கீதா, உன்னை ஆபத்துச் சூழ்ந்திருக்கின்றது. நீ இனி இந்த வீட்டிலிருக்காதே, மகளே. இந்த ஊரில் நீ இருந்தாலே ஆபத்து. கல்லுண்டாய் வீதியில் டாக்டர் சிவகுமார் என்ற விஷக்கடி வைத்திய நிபுணர் ஒருவரிருக்கின்ருர். அவர் உனக்குப் பாதுகாப்பளிப்பார். பயப்படாதே.



அங்கே செல்'' என்று கூறியது அவளுடைய தந்தையின் ஆவி.

''அப்பா'' என்று கூறிவிட்டு அவள் திரும்பிய போது திடீரென ரோட்டு விளக்குகளும், வீட்டு விளக்குகளும் எரிய ஆரம்பித்தன. எங்கும் ஒளி வெள்ளம். அங்கே அவள் தலையை வருடிய இரும்புக் கரத்தையும், கரத்துக்குரிய குரலையும் காணவேயில்லை.

டாக்டர் சிவகுமாரைச் சென்று பார்க்க வேண்டும். அப்பாவின் நண்பராச்சே! எனக்கு எப்படியாவது உதவு வார். ஏழைகளுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் உதவி செய்யும் பெரும் குணம் படைத்த மனிதர் என்று அப்பா முன்பு கூறியிருக்கின்றார். அதனால் தன் மகளுக்கும், அப்பா வின் ஆவி பாதுகாப்புத் தேடியுள்ளது போலும் என்று நினைத்துக்கொண்டே அவ்விடம் விட்டகன்றாள்.

முன்பு கல்லூரியில் பல பேய், பிசாசுக் கதைகள் கேள் விப்பட்டிருக்கின்றாள். அப்போதெல்லாம் அவை மூடக்கதை களென நகைத்துவிட்டு வருவாள். 'பேய் அடித்து மூக்கா லும், வாயாலும் இரத்தம் போய் இறந்துவிட்டான் ஒரு வன்' என்று சக ஆசிரியை ஒருத்தி கூறியபோது, 'அவ னுக்கு இருதயம் வெடித்திறந்திருப்பான்' என அவளே கூறியுமிருக்கின்றாள். அப்படிப்பட்ட கீதாவின் மனதில் தன் கூந்தலை வருடிய கரத்தின் உணர்வு பளிச்சிட்டது. 'அந்தக் கரம்! அப்பாடா! அதனால் ஒரு அடி அடித்தாலே போதும். உடனே உயிர் உடலைவிட்டுப் பிரிந்துவிடும்' என்று தன் மனதிற்குள் கூறிக்கொண்டாள். இப்பொழுது அவள் உள்ளத்தில் பேயைப் பற்றிய பயமேயில்லை. ஏனெ னில் இறந்த தன் தந்தையின் பேய் உருவுடன் கதைத்து விட்டு வருகின்றாள். அது மட்டுமல்ல, தனக்கு ஆபத்து நேருமிடத்தில் அவள் தந்தை வந்து காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையுமிருந்தது.

கடற்கரையை அடுத்த பெருவெளிக்கு எல்லையாக கல்லுண்டாய் ரோட்டு காரைநகரையும், யாழ்நகர பட்டினத்தையும் இணைத்துக் கொண்டு, மலைப்பாம்பு போல வளைந்து வளைந்து, காட்சியளித்தது. நாவாந்துறை ரோட்டினல் சென்று கல்லுண்டாய் வீதியில் சேரும் சந்திக்கு எதிர்ப் புறமாக வடக்கே பெரிய தென்னந்தோப்பு! அதன் நடுவே கம்பீரமாகக் காட்சியளித்தது ஒரு பழைய காலத்து மாளிகை. யாழ்ப்பாணத்தை டச்சுக்காரர் கைப்பற்றிய காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனுல், உள்ளே துப்புரவாகவும், அழகாகவும் காட்சியளித்தது. கல்லுண்டாய் ரோட்டுக்கரையிலிருந்து வீட்டுக்கு முன் ஹோல் வரை சிறு தார் ரோட்டு. முன் காம்பவுண்டில் எல்லாம் தென்னங்கன்றுகள் நிறையக் குலைகளுடன் அழகுடன் விளங்கின. முன் வாசலுக்கு மேற்கே இருக்கும் கோயிலுக்கிடையில் ஓர் விளம்பரப் பலகையில் விஷக்கடி நிபுணர் டாக்டர் சிவகுமார் என அழகாக எழுதப்பட்டிருந்தது.

டாக்டர் சிவகுமார் அந்த இடத்தில் குடிவந்து மூன்று வருடங்கள்தானிருக்கும். அதற்கு முன்பு அவர் இந்தியாவில் சில காலமும், அமெரிக்காவில் நான்கு வருடமும் மருத்துவம் படித்தவர். இந்தியாவில் படித்தபோது, விசேடமாய் விஷக்கடி பற்றிய ஆராய்ச்சியிலீடுபட்டிருந்ததாகக் கூறுவர்.

சிவகுமாருடைய குடும்பத்தில் அவர் தாய், சகோதரி இருவரும் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறுவர். அதற்கான காரணம் யாருக்குமே தெரியாது. அவருடைய படிப்பு முடியு முன்பே அமெரிக்காவிலிருந்து திரும்பினுர். பின்னர் தான் இந்தியாவுக்குப் போய் வந்தார். தாயையும், சகோதரிகளையும் பறிகொடுத்த காரணத்திஞலோ என்னவோ ஒரே சோகமயமாய் காட்சியளிப்பார். வைத்தியம் செய்ய ஆரம்பித்த பின்புதான் ஓரளவு நிம்மதியுடன் வாழ்கின்ருர் என ஊர் மக்கள் கூறுவர்.

விடியற்காலை நேரம். தென்னங் கீற்றுக்களிலிருந்து பனி சொட்டுச் சொட்டாக விழுந்துகொண்டிருந்தது. சிவகுமார் வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரக் கிழவன் வெளிக் கதவைத் திறக்க வந்தபோது ஓர் அழகிய இளமங்கை வாசற் கதவில் சாய்ந்துகொண்டிருப்பதைக் கண்டான்.

''டாக்டர் இருக்கின்றாரா?'' என்று கேட்டாள் கீதா.

''ஆமாம்மா! இன்னும் தூங்கிக்கிட்டே கிடக்கின்றார்.''

''எழுந்திருக்க நேரமாகுமோ?''

''இல்லையே. யாராவது வந்தால் உடனே எழுந்துவிடுவார்.''

''அப்படியா? கொழும்புத்துறையைச் சேர்ந்த பிற்றர் சோமசுந்தரத்தின் மகள் கீதா வந்திருப்பதாக டாக்டரிடம் சொல்லுங்கள்'' என்று கூறிவிட்டு பின் தொடர்ந்து சென்றாள்.

முன்ஹோலிலுள்ள நாற்காலியில் அமரும்படி கூறிவிட்டு வேலைக்கார கிழவன் உள்ளே சென்ற, இரண்டு மூன்று நிமிடங்களுக்கிடையில் நித்திரை விழித்தெழுந்து கண்களைக் கசக்கியவாறே வெளியே வந்தார் சிவகுமார்.

கீதாவின் தந்தையான சோமசுந்தரம் இறப்பதற்கு முன்பு டாக்டர் சிவகுமாரைப் பற்றி அடிக்கடி வீட்டில் கூறுவார். அவர் கூறிய கதைகளிலிருந்து, சிவகுமார் நல்ல மனிதரென்று முடிவு செய்திருந்தாள் கீதா. அவள் முடிவு வீண்போகவில்லை. வைத்திய சேவையில் தன் தூக்கத்தைக் கெடுத்துக்கொண்டே எழுந்தோடிவரும் ஒரு டாக்டரை இன்றுதான் முதலில் சந்தித்தாள் கீதா.

துயில் நீங்கி எழுந்திருந்தாலும் புன் சிரிப்பு தவழும் முகத்துடன், ''வாருங்கள், வணக்கம்'' என்று கூறிக் கொண்டே வந்தார் சிவகுமார்.

''வணக்கம் டாக்டர்; நான்...''

''தெரியும் எனக்கு. சோமசுந்தரத்தின்மகள் கீதாஞ்சலி. அதுசரி நீங்கள் இறந்துவிட்டதாகவும் கூறினார்களே! வெள்ளிக்கிழமை இரவு பாம்பு கடித்து படுக்கையிலேயே இறந்துவிட்டதாகவும், இங்கே என்னைத் தேடி வந்தபோது நான் இல்லை என்றும், நேற்று உங்கள் சித்தி பார்வதி கூறினார்கள். ஆனால் நீங்கள்...'' என்று இழுத்தார் டாக்டர்.

''நீங்கள் என்னை நம்பவில்லையா டாக்டர்?'' ஏக்கப் பரிவுடன் கேட்டாள் கீதா.

''நம்புகிறேன் கீதா. ஆனால்?''

''ஆனால், என்ன டாக்டர்?''

''உங்கள் சித்தியை அழைத்து, உங்களையும் வைத்து முதலில் விசாரணை நடத்த வேண்டும். நீங்கள் இறந்துவிட்டதாக அவர்கள் ஏன் பொய்ப் பிரசாரஞ் செய்ய வேண்டும்? நான் வெள்ளிக் கிழமை கொழும்புக்குச்சென்று இரவு யாழ்தேவியில்தான் வந்தேன். இடையிலுள்ள இரண்டு நாட்களுக்கிடையில் எத்தனை பெரிய அதிசயிக்கத் தக்க விடயங்கள் நடந்திருக்கின்றன.''

''டாக்டர் அப்படியென்றால் இன்றுதிங்கட்கிழமையா?''

''ஆமாம்!''

''அப்படியானால் நான்...''

''சொல்லுங்கள் மிஸ் கீதா...''

இடையில் நடைபெற்ற விடயங்கள் அனைத்தையும் ஒன்றும் விடாமல் கூறி முடித்தாள் கீதா. கீதா கூறியவற்றைக் குழந்தைப்பிள்ளை போல கேட்டுக் கொண்டிருந்த டாக்டர் சிவகுமார் அவள் கூற்றை நம்பாதவர் போல் இருக்கவே, ''நீங்கள் நம்பமாட்டீர்கள் டாக்டர்'' என்று கூறிவிட்டு அவர் உள்ளத்தை அளவெடுக்கும் எண்ணத்தில் அவர் விழிகளைப் பார்த்தாள்.

அந்த விழிகளில் வைத்த தன் விழிகளை எடுக்க மனமின்றி அப்படியே பார்த்துக்கொண்டிருந்தாள் கீதா. பார்த்தவரைத் தன் வசமாக்கும் சக்தி அந்தக் கண்களுக்கிருக்கவேண்டும். இல்லையெனில் கீதா, அவர் கண்களை

உற்றுப் பார்த்த மாத்திரத்திலேயே அதன் வசப்பட்டிருக்க மாட்டாள்.

அவள் தன் மன ஆழங்காண விரும்புகிருள் என்பதை புரிந்துகொண்டார் சிவகுமார். உடனே நிலைமையைச் சமாளித்துக் கொண்டு, ''மிஸ் கீதா'' என்ருர்.

''என்ன டாக்டர்?'' என்று விழிப்புற்ருள் கீதா.

''உங்களுடன் கதைப்பதற்கே எனக்குப் பயமாக விருக்கின்றது. நீங்கள் ஆவியுலகத்துடன் தொடர்புடைய வராய் இருக்கின்றீர்கள். நீங்களும்...''

''பேய் பிசாசாக இருக்கலாமென எண்ணுகின்றீர்கள் போலும்.''

''கீதா, உங்களுக்கு உதவ நான் தயார். ஏன் தெரியுமா? உங்கள் தந்தை சோமசுந்தரம் எனக்கு எவ்வளவோ உதவி செய்துள்ளார். இந்தக் காணிகூட அவர்தான் வாங்கித்தந்தவர். அவர் ஆவி கூறியதாக நீங்கள் கூறியதால் தான்...''

''நீங்கள் அமெரிக்கா சென்று படித்தவராயிற்றே இவற்றில் எல்லாம் நம்பிக்கையுண்டா டாக்டர்?''

''நம்பிக்கையில்லையென்று நான் கூறுவதற்கில்லை. நன்மைக்கு எதிராக தீமையும், நல்லவர்களுக்கு எதிராகக் கெட்டவர்களும் இருக்கையில் கடவுளைப் போன்று அதற்கு ஓர் மாறுபட்ட சக்தியாக பேய், பிசாசு ஏன் இருக்க முடியாது.

உங்களுடன் கதைக்கவே எனக்குப் பயமாயிருக்கின்றது. இன்று புதை குழியெல்லாம் பரிசோதனை நடத்தி விட்டே உங்களுக்கு உதவி செய்வது பற்றி முடிவு செய்வேன். நீங்கள் இங்கேயிருக்கலாம்'' என்று கூறிவிட்டு குளிப்பதற்காக பின்பக்கம் சென்ருர். நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி உட்கார்ந்திருந்தாள் கீதா.

டாக்டர் சிவகுமார், காலை ஒன்பது மணியளவில் காலஞ்சென்ற பீற்றர் சோமசுந்தரத்தின் வீட்டிற்குச் சென்ற போது, வீட்டிற்கு முன்னே பெரும் சனக்கூட்டம் காணப்

பட்டது. பொலிஸ் ஜீப் பொன்றும் காணப்பட்டது. தன்னுடைய காரை ஓரமாக நிறுத்திவிட்டு, இறங்கி ஆட்களை விலக்கிக்கொண்டு, முன்னே சென்ருர் டாக்டர். அப்பொழுது இன்ஸ்பெக்டர், ''இந்தாப்பா! கையால் தொடாதே! ஏதாவது பிடித்துத் தூக்கு'' என்ருர். பொலிஸ் கான்ஸ்டபிள் ஒரு துணியைப் பிடித்து வாசலில் கிடந்த ஒரு வெண் மஞ்சள் நிற வஸ்துவைத் தூக்கிஞன். உடனே அது புஸ் என்ற சத்தத்துடன் பச்சை நிறத்தில் புகைந்தது. கான்ஸ்டபிள் திகைத்துவிட்டான். அவனுக்கு சமீபத்தில் இரண்டு மூன்று இடத்தில் இரத்தம் ஊற்றப்பட்டிருந்தது. கான்ஸ்டபிள் தூங்கியபோது புகைந்த வஸ்து, புகைந்த பின்பு சுருளாயிருந்த நிலையிலிருந்து மாறி மண் புழுப்போல நீண்டு கிடந்தது, அதை மிக அருகில் சென்று பார்த்தார் சிவகுமார்.

''என்ன டாக்டர் அப்படி அதிசயமாய் பார்க்கின்றீர்கள்?'' என்ருர் இன்ஸ்பெக்டர்!

''இன்ஸ்பெக்டர், இது நிச்சயமாக மனித உடலிலுள்ள இரத்த நரம்பாகத்தான் இருக்க வேண்டும். இதன் அமைப்பு அப்படித்தான் இருக்கின்றது. இறந்த பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட இரத்த நரம்பாக இருக்கலாம்'' என்று கூறியபோது இன்ஸ்பெக்டருக்கு உள்ளத்துள் உதறலெடுக்க ஆரம்பித்தது.

கீதா அன்று அதிகாலே வேளேயில் தகப்பனின் ஆவியுடன் அதே இடத்தில் கதைத்ததாகக் கூறிய செய்தி, அவரின் ஞாபகத்திற்கு வந்தது. பார்வதியைப் பார்ப்பதற்காக உள்ளே சென்ருர் டாக்டர். அங்கே அவளிருந்த நிலேயைக் கண்டதும் அதிர்ச்சியுற்ருர்.

## 4. மாயத் தீ!

டாக்டர் சிவகுமாரை, கீதாவின் சிறியதாய் பார்வதிக்கு ஏற்கனவே தெரியும். கணவன் சோமசுந்தரத்துடன் சிவகுமாரின் வைத்தியசாலைக்கு, முன்னர் சென்றிருக்கின்றாள். அவர் நல்ல குணம் படைத்தவரென்பதும், பிறருக்குதவும் மனம் படைத்தவரென்றும் அவள் கணவன் கூறக்கேட்டிருக்கின்றாள். வாசலில் அன்று அதிகாலை எலும் புருவத்தையும், வர்ண விளக்குகளையும் பார்த்த நேரந் தொடக்கம் அவள் சுய உணர்வை இழந்துவிட்டாள். இடைக்கிடையே பேய், பிசாசு என்று புலம்பினாள். அதை விட, காலையில் எழுந்து பார்த்த போது வாசலில் இரண்டு, மூன்று இடத்தில் இரத்தம் படிந்திருந்ததையும், அதற்கு முன் ஏதோ வஸ்து உருண்டையாக இருந்ததையும் பார்த்த போது அவளுக்கு உள்ளத்தில் நடுக்கமேற்பட்டது. என்ன செய்வதென்று அறியாதிருந்த நிலையில்தான் டாக்டர் சிவகுமார் அவளின் வீட்டுக்குள்ளே நுழைந்தார்.

அவர் அங்கு வருமுன்பு நடைபெற்ற விடயங்களைப் பொலிசிற்கு அறிவித்து, பொலிசை வரவழைத்திருந்தான் பார்வதியின் மகனான ராஜா. பொலிசாரும், சனக் கூட்டமும் வாசலில் அலைமோதிக்கொண்டிருந்தனர். பார்வதிக்கு ஆறுதல் கூறினார் டாக்டர் சிவகுமார்.

''டாக்டர் அந்த எலும்புக்கூட்டை நீங்கள் பார்த்திருந்தால் இப்படியெல்லாம் கூறமாட்டீர்கள்'' என்றாள் பார்வதி.

''உங்களுக்கு உதவி செய்வதற்காகவே வந்திருக்கின் றேன். அந்தப் பெண் கீதாகூட என்வீட்டில்தான் இருக்கின் ருள்'' என்ருர்.

''என்ன டாக்டர், உங்கள் வீட்டிலா இருக்கின்ருள்? அப்படியென்ருல் அவள் பிசாசில்லையா?'' என்று கூறிக் கொண்டே உள்ளே வந்தான் ராஜா. அவனைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் திருநாவுக்கரசனும் வந்தார்.

''டாக்டர் அந்தப் பெண்தான் பிசாசு. அவளை வீட் டில் வைத்திருக்காதீர்கள். அவள்தான் எலும்புக் கூடாக மாறினுள்'' என்று பயந்து நடுங்கிக் கொண்டே கூறினுள் பார்வதி.

''நீங்கள் பயப்படாதிருங்கள், அந்தப் பெண் எப்படி இறந்தாள் என்ற விபரங்களைக் கூறுவீர்களா? என்று கேட் டார் டாக்டர்.

''காலையில் நித்திரையால் எழும்பாது படுத்திருந்தாள் கீதா. பார்த்த பொழுது இறந்துகிடந்தாள். வைத்திய ரைக் கூட்டிக்கொண்டு வந்து காட்டினேம். அவர் பாம்பு கடித்துவிட்டதாகக் கூறினர். உங்களிடம் ஆள் அனுப்பிய போது, நீங்கள் அங்கு இல்லையென்று வேலையாள் வந்து கூறினுன். அவ்வளவுதான்'' என்று கூறினுன் ராஜா.

''வைத்தியர் யார்?'' எனக் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''டாக்டர் மோசஸ்.''

''இன்ஸ்பெக்டர் பிணவடக்கம் செய்த குழியைத் தோண்டிப் பிணத்தைப் பரிசிலனை செய்து பார்ப்போம்'' என்ருர் டாக்டர்.

''உங்களுக்கு இதிலே சந்தேகமா டாக்டர்'' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''நோ! நோ; ஏன் அப்படிக் கூறுகிறேனென்ருல் பாம்பு கடித்தவர்களுடைய உயிர் சிலவேளை அடக்கமாய் இருந்து திரும்புவதுண்டு. அப்படிச் சிலவேளை கீதா மீண் டிருந்தால்'' என்ருர்.

"அவள்தான் எலும்புக்கூடாக மாறியதாய் இவர்கள் கூறுகின்றார்கள். நீங்கள் என்னவென்றால், அவள் உங்கள் வீட்டிலிருப்பதாகக் கூறுகின்றீர்கள்! அதிசயமாயிருக் கிறதே" என்று இன்ஸ்பெக்டர் கூறிவிட்டு, "ஆல் ரைட் பிணக்குழியைத் தோண்டி பிணமிருக்கிறதா எனப் பார்த்து விட்டு, கீதா என்று உங்கள் வீட்டிலிருக்கும் பெண்ணைக் கைது செய்வோம்" என்றார்.

"சரி..." என்றார் டாக்டர்.

அன்று பதினொரு மணியளவில் பொலிஸ் இன்ஸ்பெக் டர், டாக்டர் சிவகுமார், ராஜா முதலியோர் இடுகாட் டிற்குச் சென்றனர். அங்கே பிணம்புதைக்கப்பட்டகுழியை அடையாளம் காட்டினன் ராஜா! இரு கூலியாட்களை விட்டு அக்குழியை வெட்டும்படி கூறினர் டாக்டர். பிணம் வைக்கப்பட்டிருந்த பெட்டியைத் திறந்த பொழுது, அதற் குள் பிணம் இருப்பது தெரிந்தது. ராஜாவை அழைத்துக் காட்டியபொழுது, அது கீதாவின் பிணம் என்பதை அவன் ஒப்புக்கொண்டான். நான்கு நாட்களுக்கிடையில் அவள் பிணம் சீர்குலைந்து காணப்பட்டது. அதைப் பார்ப் பதற்கே பயந்த ராஜா, அவள்தான் என்று நடுங்கிக் கொண்டே கூறிவிட்டு முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டான்.

"மிஸ்டர் பிணம் புதைக்கப்பட்டு மூன்று நாட்கள் தானுகின்றது. அதற்கிடையில் இப்படி மாற்றமடையுமென நினைக்கிறீர்களா?" என்றார் டாக்டர்.

"டாக்டர், நானும் மருத்துவம் படிக்கின்றேன். இதில் சந்தேகத்திற்கு இடமில்லை; நாங்கள் கீதாவுக்கு உடுத்தி விட்ட சேலை, நகை, திலகம் அத்தனையும் அப்படியே கிடக் கின்றன. தவிர இது விஷம் பாய்ந்த உடல் ஆகையினல் இத்தகைய மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்" என்றான் ராஜா.

"டாக்டர் இந்தப் பிணத்தில் உங்களுக்கு ஏதாவது சந்தேகமா? பிரேத பரிசோதனை நடத்த வேண்டுமென்றால் எடுத்துச் செல்லலாம்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"டாக்டர் பிணத்தை வெளியில் எடுத்து அலங்கோலப் படுத்திவிடாதீர்கள்" என்றான் ராஜா.

இவர்கள் வாக்குவாதப்படும் போது எங்கிருந்தோ ஒரு விசில் சப்தம் கேட்டது. தொடர்ந்து புதை குழிக்குள் இருந்த பிணம் தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. நின்றவர் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர். ஒரேயொரு வினாடி பெரும் சுவாலைவிட்டு எரிந்தபின் தீ அணைந்துவிட்டது. ஆனால், பிணத்திலோ அல்லது சுற்றுப்புறத்திலோ தீப்பற்றி எரிந்ததற்கான அடையாளம் எதுவும் இருக்கவில்லை. இன்ஸ்பெக்டர் டாக்டரிடம் கூறி பிணக்குழியை மூடிவிட்டுப் புறப்படலானார்.

"என்ன டாக்டர்! இது பேய் பிசாசின் விளையாட்டாகத்தானிருக்க வேண்டும். நான் மட்டக்களப்பிலிருக்கையில் இப்படிப் பலவற்றில் அனுபவப்பட்டவன். இது பற்றி யாராவது வேதாந்தியை கூட்டிவந்து சாந்தி ஏதாவது செய்தால் நல்லது" என்றார்.

"அது சரி இன்ஸ்பெக்டர், இதிலே நாங்கள் கவனிக்க வேண்டிய ஒரு பிரச்சினையுண்டு. என்னுடைய வீட்டிலே ஒரு பெண்ணிருக்கின்றாள். அவளும் கீதா போலவே இருக்கின்றாள். ஆகவே, இது தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை மட்டுமல்ல. அந்தப் பெண்தான் எலும்புருவமாக மாறியதாக பார்வதி கூறுவதைப் பார்க்கும் போது எனக்கே பயமாக இருக்கின்றது. அந்தப் பெண் என்னைத் தேடிவரக் காரணம் என்ன? இதுவும் பேய். பிசாசுவேலையா? அல்லது இறந்த கீதா போன்று உருவமைப்புள்ள வேறு பெண் அவள் சொத்துக்களைக் கையாடுவதற்காக நடிக்கின்றாளா? என்பதைப் பற்றி முடிவு கட்ட வேண்டும். கீதா இறந்து அடக்கம் செய்யப்பட்ட புதைகுழியில் பிணம் இருப்பது யாவும் நாம் நேரில் கண்டதே, டாக்டர் மோக

ஸிடம் ஒரு மரணச்சான்று பத்திரம் வாங்கிவிட்டால் போலிக் கீதாவை கைதுசெய்துவிடலாம். அல்லது போலிக் கீதாவாக நடிப்பது யாரென்ற உண்மையை ஆராயலாம்'' என்று கூறிவிட்டு பதிலுக்குக் காத்திருந்தார் டாக்டர் சிவகுமார்.

''ஆல்ரைட் டாக்டர்! இங்கிருந்து நேரே டாக்டர் மோசஸ் வீட்டிற்கே செல்வோம்.'' இன்ஸ்பெக்டர் கூறி விட்டு ஜீப்பில் ஏறிக்கொண்டார்.

யாழ்ப்பாணம் பிரதான வீதியிலிருந்து பிரிந்து செல் லும் நான்காம் குறுக்குத்தெருவில் இருபத்தைந்தாம் நம்பர் வீடுதான் டாக்டர் மோசஸின் டிஸ்பென்சரி. அவருக்கு வைத்தியத்துக்கு வருவோர் தொகை மிகக் குறைவு. புதுப் புது ஆராய்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தமையினுல் வைத் தியத்துறையில் அதிக நாட்டமில்லாதிருந்தார். அவருக்குப் பதில் வேறொரு பெண்டாக்டரே நோயாளிகளைக் கவனித்து வந்தார். குழந்தைப் பிள்ளைகளுக்கான அறுவைச் சிகிச்சை யிலும், மூளை, கழுத்துக்கு மேற்பட்ட பகுதிக்கான விசேட வைத்தியத்துறையில் பிரசித்தி பெற்றிருந்ததுடன் புதிய சாதனையை நிலைநாட்ட வேண்டுமென்று ஆராய்ச்சி நடத்து பவர். அவருடைய டிஸ்பென்சரி வாசலில் பொலிஸ் ஜீப் வந்து நின்றதும், உள்ளேயிருந்து வேலைக்காரப் பையன் ஓடிவந்தான். அவனிடம், தாங்கள் டாக்டரிடம் வந்திருப் பதை அறிவித்துவிட்டு உள்ளே சென்று அமர்ந்தனர்.

வேலைக்காரப் பையன் சென்று ஐந்து நிமிடங்களின் பின்பு சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டே வந்தார்! இன்ஸ்பெக்டரைக் கண்டதும், 'குட் மோனிங் இன்ஸ்பெக்டர், குட்மோனிங் டாக்டர், குட் மோனிங் தம்பி'' என்று எல்லோருக்கும் வணக்கம் தெரி வித்தார்.

''டாக்டர், இந்தப் பையனுடைய சகோதரி கீதா இறந் தது நிஜமாகவே பாம்பு கடித்துத்தானு?'' என்று நேரடி

யாகவே இன்ஸ்பெக்டர் விஷயத்திலிறங்கினுர். எதிர் பாராத கேள்வியினுல் சிலநிமிடம் மௌனமாயிருந்துவிட்டு, இன்ஸ்பெக்டரைப் பார்த்து புன்முறுவல் பூத்தார் டாக்டர் மோசஸ்.

"ஏன் இன்ஸ்பெக்டர்? நான் கூறியது தவறு என்று கருதுகின்றீர்களா?" எனக் கேட்டார் மோசஸ்.

"நோ! நோ!" என்று கூறிவிட்டு, நடைபெற்ற விடயங்களை விளக்கமாகக் கூறி, டாக்டரின் பதிலுக்குக் காத்திருந்தார் இன்ஸ்பெக்டர்.

"இன்ஸ்பெக்டர், அந்தப் பெண் விஷம் கடித்துத்தான் இறந்திருக்க வேண்டும். பாம்பு கடித்ததை நான் நேரில் கண்டேனு? காலில் பாம்புப் பல்லுக்கடியினுல் ஏற்பட்ட காயம் இருந்தது. அத்துறையில் எனக்கு மிஸ்டர் சிவகுமார் அளவு பழக்கமில்லேயாயினும், நிச்சயமாய் நான் அவளேப் பரிசோதித்த போது உடலில் உயிரோட்டம் நின்றுவிட்டிருந்தது. நீங்கள் கேட்டிருந்தபடி 'டெத் சேர்ட்டிபிகேட்' தருகிறேன்" என்று கொப்பிகளேப் புரட்டி எழுத ஆரம்பித்தார்.

டாக்டர் மோசஸிடம் மரணச் சான்றுப் பத்திரத்தைப் பெற்ற பின், நேரே டாக்டர் சிவகுமாரின் இல்லத்திற்குப் புறப்பட்டார்.

சிவகுமாரின் வீட்டு வேலேக்காரக் கிழவன் உள்ளே சமையலில் ஈடுபட்டிருந்தான்; உள்ளே ஆட்கள் வருவதைக் கண்டு வெளியே ஓடிவந்தான். சிவகுமார் அவனிடம், "கீதா சாப்பிட்டாளா?" என்று கேட்டார்.

"காலேயில் உங்களுடன் தேநீர் பருகிவிட்டு அறைக்குள் சென்று கதவைப் பூட்டின பின்பு, கதவை அவள் திறக்கவே இல்லீங்க" என்ருன்.

"கதவிலே தட்டி, டாக்டர் வந்துவிட்டாரென்று அழைத்து வா."

உள்ளே சென்ற கிழவன், "டாக்டர், டாக்டர்" என்று கத்தினுன். எல்லோரும் விழுந்தடித்துக்கொண்டு ஓடினர்.

அங்கே கீதா இருந்த அறை வாசலில் மூன்று, நான்கு இடத்தில் இரத்தத் துளிகளும், வெண் மஞ்சள் 'நிறமான வஸ்துவும் இருந்தது.

டாக்டர் சிவகுமார் கதவைத் தட்டி கீதாவை அழைத்தார். பதில் இல்லை. அறை உட்புறம் பூட்டப்பட்டிருந்தது. பின் புக்கமாகச் சென்று, ஜன்னல் வழியாகப் பார்க்கும் படி சிவகுமார் கிழவனிடம் கூறினுர். கிழவன் திரும்பி வந்து, ''கீதாவை அறையில் காணவில்லை'' என்ருன்.

நான்குபக்கமும் சுவர்! ஒரேயொரு கதவு. ஜன்னல்களுக்கு இரும்புக் கம்பிகள். கதவு உள்ளே பூட்டப்பட்டிருந்த படியேயிருக்கிறது. கதவுச் சாவிகூட உள்ளே பூட்டியபடி யிருக்கிறது. ஆனுல், கீதாவைக் காணவில்லை. அவள் எப் படி மறைந்தாள்? பார்வதி சொன்னது போல கீதா உரு வில் பிசாசு நடமாடுகிறதா? அங்கிருந்த அனைவரின் மன திலும் இதுபோன்ற கேள்விகள் தலைதூக்கி நின்றன.

# 5. மோகினிப் பேய்!

இதுவரை காலமும் கண்டும் கேட்டுமிருக்காத நிகழ்ச்சிகளை ராஜா இன்றைய தினத்தில்தான் கண்டிருக்கின்றான். கீதா இறந்து விட்டதால் அவளுடைய சொத்துக்களுக்கு தாங்களே உரிமையாளர்களாக மாறி விட்டதாக மகிழ்ந்திருந்தவனுடைய உள்ளத்தை கிலி பற்றிக் கொண்டது. வீட்டில் வேலைக்காரக் கிழவனைக் காவலுக்கு விட்டுவிட்டுப் புறப்பட ஆயத்தமானர் டாக்டர் சிவகுமார். அதற்கிடையில் வாசல் கதவடியில் உள்ள நரம்புச்சுருளை என்ன செய்வதென்று புரியாமலிருக்கும்போது இன்ஸ்பெக்டர் கேட்டார்:

''மிஸ்டர் சிவகுமார் இதுவும் மனித நரம்புதானா?''

''ஆமாம்இன்ஸ்பெக்டர்'' என்றுகூறிவிட்டு அந்த வஸ்துவை ஒரு இரும்புக் கம்பியினால் தட்டினார். அந்த வஸ்து பார்வதி வீட்டு வாசலிலிருந்தது போன்று புகைக்கவில்லை. நெளிந்து புரண்டது.

அதன் பின்பும் டாக்டர் அதை நன்றாக நசித்துபார்த்தார். ஆனால், அந்த நரம்புச் சுருளாலான வஸ்து புகைக்கவில்லை. உடனே இன்ஸ்பெக்டரைத் திரும்பிப்பார்த்து ''இன்ஸ்பெக்டர், இதை எடுத்து இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பி வைப்போமா?'' என்று கேட்டார். ''அப்படியே செய்வோம் டாக்டர்'' என்று இன்ஸ்பெக்டர் கூறியபொழுது, அறைக்குள் ஏதோ தொப்பென விழுந்த சப்தம் கேட்டது.

பின்புறமுள்ள ஜன்னலினூடாக அறைக்குள் பார்க்கும்படி டாக்டர் கூறவே வேலையாள் ஓடிச்சென்று பார்த்து

விட்டு வந்து கூறினன்: ''டாக்டர் ஒரு கொத்துமலர் விழுந்து கிடக்குங்க.''

''என்ன மலர்க்கொத்தா?'' ஏககாலத்தில் மூவரும் கேட்டு விட்டு பின்பக்கம் ஓடினர்.

அறையின் மத்தியில் ஓர் மலர்க்குவியல் காணப்பட்டது. சிவப்பு நிற மலர்களாகவே அத்தனையும் காணப்பட்டன. நிமிடத்துக்கு நிமிடம் அங்கே நடைபெறும் மாயாஜாலங்களைக் காணும்பொழுது, அடுத்தநிமிடமே என்ன நடைபெறுமோ என்ற பயம் ஒவ்வொருவருடைய மனதிலும் தோன்றவே, இன்ஸ்பெக்டர் டாக்டரின் கரங்களை பற்றிக்கொண்டு ''டாக்டர் உடனடியாக ஒரு வேதாந்தியை அழைத்து ஆவன செய்யுங்கள்'' என்று கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றார்.

டாக்டரும், ராஜாவும் முன் ஹோலிலிருந்து கதைத்துக்கொண்டிருந்தனர். போன் மணி ஒலிக்கவே, டாக்டர் சென்று றிசீவரை எடுத்து ''ஹலோ நான்தான் டாக்டர் சிவகுமார் பேசுகின்றேன்'' என்றார்.

''டாக்டர் நீங்களா? எங்க அண்ணா இருக்கின்றாரா?'' என்று கேட்டாள் பார்வதியின் மகள் சுலோசனா.

''ஆமாம்'' என்று கூறிவிட்டு இடுகாட்டிலும், தன் வீட்டிலும் நடைபெற்ற விடயங்களைக் கூறினார்.

''டாக்டர் ஓர் மந்திரவாதி இவ்விடம் வந்தார். எங்க மாமா கூட்டிவந்தார். அவர் சிறிது நேரம் ஏதோ எல்லாம் செய்துவிட்டு, இது மோகினிப் பேயின் விளையாட்டென்றும், அகால மரணமடைந்ததால் அந்தப் பெண்ணின் ஆவி இரத்தப்பசி கொண்டலையுதென்றும் கூறினார். இரத்தப்பிசாசாயிருக்கலாமென்றும் கூறுகின்றார்'' என்றாள் சுலோசனா.

அவள் குரல் பயத்தினால் மாறுபட்டு ஒலிப்பதையும், பயங்கரப் பெயர்களான பிசாசுகளின் பெயர்களைச் சொல்லும்போது, அவள் அச்சமடைவதையும் அவள் குரலிலிருந்து உணர்ந்துகொண்ட டாக்டர் சுலோசனாவுக்கு பதில் கூறிவிட்டு ராஜாவுக்கு விடயத்தை விளக்கினார்.

''மிஸ்டர் ராஜா உங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தி லேயே இவற்றை உணர்ந்திருக்க வேண்டும். எதைஎடுத்துக் கொண்டாலும், அவற்றில் பல்வேறு பிரிவுகள் உண்டென் பதை நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள். அப்படி ஏன் பிசாசுகளிலும் பல வகையிருக்கப்படாது? கடவுளுக்கு எதிரா ளியாக இப்பிசாசுகள் இயங்குகின்றன என்று கூற முடியா விட்டாலும் உலக ஆசாபாசங்களில் பற்றுள்ள இளம் கன்னிகள் அகால மரணமடைந்தால் அவர்களின் ஆவி களே இப்படி மோகினிப் பேய்களாக உலாவுவதாக முன்பு நான் கேள்விப்பட்டதுண்டு. ஆனல் இரத்தப்பிசாசு என்ருல் எமது சமயத்தில் அதை 'முனி' என்று கூறுவார் கள். அது தன்னை எதிர்ப்பவர்களை, தனக்கு எதிர்ப்பட்ட வர்களை அடித்துக்கொன்றுவிடும் என்றும் கூறுவர் நானும் படித்தவன், அமெரிக்காவிலும் சென்று படித்தனன். ஆனல் இவற்றை நம்பாமலிருக்க முடியவில்லை'' என்ருர்.

''மந்திரவாதி வந்து என்ன சொன்னராம்'' என்ருன் ராஜா.

''இங்கே வரும்படி கூறியிருக்கின்றேன்''.

அப்பொழுது வாசலில் கார் வந்து நின்றது. அதிலிரு ந்து சிலர் இறங்கிவந்தனர்.

அவர்களில் ஒருவர் கழுத்தில் உருத்திராட்சங்காய் அணிந் திருந்தார். இன்னெருவர் நெற்றியிலே சந்தனத்திலக மிட்டு, அதற்குமேல் குங்குமம் அணிந்து பார்ப்பதற்கே பயங்கரமாக விளங்கினர்.

''இவர்தான் டாக்டர், மந்திரவாதி மயில்வாகனம், எந்தப் பேய், பிசாசானலும் இவரிடம் சேட்டை பண்ண முடியாது'' என்ருர் வந்தவரில் ஒருவர்.

''வாருங்கள் பெரியவரே'' என்று கூறிவிட்டு அங்கிருந்த இரத்தக்கறைகளையும், நரம்பாலான வஸ்துவை யும் காட்டினர் டாக்டர்.

மாந்திரீகரான அந்தப் பெரியவர் டாக்டர் கூறியவற் றைக்கேட்டுவிட்டு, அந்த நரம்பாலானவஸ்துவை உற்று

நோக்கினர். ஒரு நிமிட நேரம் அப்படி அவர் பார்த்துக் கொண்டிருக்கையில், அந்தவஸ்து மெல்ல மெல்ல ஊர்ந்தது. பின்பு மேலே சிறிது தூரம் உயர்ந்தது. மாந்திரீகர் பின் வாங்க ஆரம்பித்தார். அவசரமாக தன் சீடனை உருத்திராட்சங்காய் அணிந்தவரைப் பார்த்து இரண்டு எலுமிச்சம் பழம்கேட்டார்.

எலுமிச்சம் பழம் கொடுத்ததும், அதை வாங்கி ஏதோ வாய்க்குள் முணுமுணுத்தபடி இரண்டாக வெட்டினர். அந்த நரம்பு வஸ்துவின் அசைவெல்லாம் உடனே நின்று விட்டது. டாக்டரைத் திரும்பிப்பார்த்தார் மாந்திரீகர். அந்தப் பார்வையில் வெற்றியின் பெருமிதம் தெரிந்தது.

''டாக்டர் இரண்டு நாளில் இதற்கொரு முடிவு கட்டி விடுகின்றேன். இரத்தப்பிசாசு என்ன, மோகினிப்பேயென்ன எதுவாயிருந்தாலும் பயப்படாதீர்கள்''. என்று கூறிவிட்டு அந்த இரத்தக் கறைபட்ட இடங்களைக்கழுவிவிட்டு நரம்பு வஸ்துவைத் தூக்கினர்.

உடனே அது புஸ்எனப்புகையத் தொடங்கியது. புகைந்து திடீரென பச்சைப்புகையாக மாறியது. மாந்திரீகர் சிறிது விபூதியை எடுத்து, ஏதோ மந்திர உச்சாடனம் செய்துவிட்டு ஊதினர். பின்பு டாக்டரிடம், ''நீங்கள் இப்படியான மாயா ஜாலங்களைக் கண்டிருக்கமாட்டீர்கள். இது போன்று எத்தனையோ பிசாசுகளை நான் விரட்டியிருக்கின்றேன்'' என்று கூறிவிட்டு புறப்பட ஆரம்பித்தார்.

மறு நாட் காலை வெளியான தினசரிகளிலெல்லாம் 'மோகினிப்பேய்' பற்றிய செய்தி முக்கியத்துவம் பெற்றிருந்தது.

## 6. கிதாவின் குரல்!

இரவு பத்து மணியிருக்கும். கடல் அலைகளின் இரைச்சல் சப்தத்தைத் தவிர வேறு ஒலி எதுவுமில்லை. கல்லுண்டாய் ரோட்டில் சன நடமாட்டம் குறைந்துவிட்டது. இடைக்கிடை மின்விளக்கின் ஒளியில் கடற்கரையில் நிற்கும் பாய்மரப் படகுகள் பெரிய பூத உருவம்போன்று காட்சியளித்தன. டாக்டரின் மனதில் பல்வேறு சிந்தனைகள் ஒன்றன்பின் ஒன்ருகச் சுழன்றுகொண்டிருந்ததினுல் இவற்றையெல்லாம் கவனிக்காது ரோட்டையே கவனித்தபடி காரைச் செலுத்திக்கொண்டிருந்தார்.

தென்னந்தோப்பின் நடுவேயிருக்கும் டாக்டர் சிவகுமாரின் பங்களாவில் மின்விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. டாக்டரின் கார் வாசலில் வந்துநின்றதும், வீட்டிற்குள்ளே இருந்து வேலைக்காரக் கிழவன் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். அவன் வெளிக் கதவைத் திறந்து, கார் உள்ளே சென்றதும் பூட்டிவிட்டான். டாக்டர், காரைக் கராச்சில் நிறுத்திவிட்டு உள்ளே சென்று தனது உடுப்புகளைக் கழற்றியபின்பு, குளிக்கும் அறைக்குச் சென்று முகம் கழுவிக்கொண்டு வந்து முன் ஹோலில் உட்கார்ந்தார்.

அவருக்கு முன்னுலிருந்த மேசையில் ஓர் நாட்குறிப்புப் புத்தகமிருந்தது. அன்ருட நிகழ்ச்சிகளையெல்லாம் அக் குறிப்புப் புத்தகத்தில் ஒன்றும் தவருது எழுதி வைப்பது அவர் வழக்கம். அன்றைய பயங்கர சம்பவங்களைப் பற்றிய குறிப்புகளையெல்லாம் அப் புத்தகத்தில் எழுதிவிட்டு பேனையை மூடியபோது, டாக்டருக்குத் தூக்கம் விழிகளை வலிந்து மூடச் செய்தது. குறிப்புப் புத்தகத்தைக் கொண்டு

சென்று வைத்துவிட்டுப் படுக்கை அறையில் படுத்துக் கொண்டார். உறக்கம் அவரைத் தழுவிக்கொண்டது.

ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்த டாக்டர் சிவகுமார், ஏதோ பயங்கரக் கனவு கண்டு விழித்துக்கொண்டார். உடல் முழுவதும் வியர்த்துவிட்டிருந்தது. படுக்கையில் படுத்துக் கிடந்தபடியே தன் வாழ்க்கையின் தெளிவற்ற நிலையைப் பற்றி நினைத்துக்கொண்டார்.

கடந்தகால வாழ்க்கையின் ரசமான நினைவுகள் அவர் எண்ணத்தில் சுழன்றுகொண்டிருந்தன. ஆனந்தமயமாக ஆரம்பித்த வாழ்க்கை முடிவில் சோகமாக மாறிவிட்டிருந்தது. அதை நினைத்துக்கொண்டபொழுது வேதனையும், வேதனையைத் தொடர்ந்து உள்ளத்தில் ஓர் ஆத்திர வெறியும் எழுந்தன.

தாயையும், சகோதரிகளிருவரையும் இழந்த டாக்டர், மல்லிகா என்ற பெண்ணை மணம் முடித்தார். மல்லிகாவின் பெற்றோரே வலிந்து அவரைக் கல்யாணப் பந்தத்தில் ஈடுபட வைத்தனர்.

தாயையும், சகோதரிகளையும் இழந்து, துன்பத்தை மறந்து ஒருமாதகாலம் வாழ்ந்திருப்பார். ஆனால் துரதிர்ஷ்டம் பிடித்தவனை தரித்திரம் தேடியலைவது போன்று அவரையும் துன்பம் தொடர்ந்து திரிந்தது. அதற்கும் ஒரு முடிவு கட்டிவிட வேண்டுமென்று தன் படிப்பறிவைக் கொண்டு நடாத்திய ஒரு பயங்கரப் பரிசோதனையில் டாக்டருக்கு வெற்றி கிடைத்தது.

அவர், மனைவியின்பால் செலுத்திய ஆழ்ந்த அன்பின் காரணமாக, அவளின் பிணத்தைக்கூட எரிக்கவோ, அடக்கம் செய்யவோ விரும்பாது, தன் வீட்டின் ஓர் அறையில் பக்குவமாக வைத்திருந்தார். அவளின் உடல் பதங்கெட்டுப் போகாத்வாறு வாசனைத் திரவியங்களால் பாதுகாத்து வைத்திருந்தார். மனைவியின் நினைவு வரும்பொழுதெல்லாம் அவளுடைய பிரேதத்தைப் பார்த்து அழுவார். ஆனால் வெளி உலகுக்கு அவள் எங்கே என்ற விபரம் தெரியாது. சட்டப்

படி வீட்டில் பிணத்தை வைத்துக்கொண்டிருப்பது குற்றம் என்பதை டாக்டர் தெரிந்துகொண்டதினாலேயே அப்படி ஓர் கதையைக் கட்டிவிட்டிருந்தார். அவர் மனைவி எங்கேயோ சென்றுவிட்டாள் என்றே எல்லோரும் கருதினர்.

மனைவியின் நினைவு இப்போ வந்ததும், அவர் பிணம் வைக்கப்பட்ட நிலவறைக்குச் செல்ல விரும்பி எழுந்தார். அதற்கிடையில் அடுத்த அறையில் யாரோ முனகுவது போன்ற சப்தம் கேட்டது.

அந்த அறையில்தான் கீதா முன்பு படுத்துக்கிடந்தாள். அந்த அறை திறக்கப்படாமலே இருந்தது. ஆட்கள் முனகுவது போன்ற சப்தத்தைக் கேட்டதும் டாக்டர் அப்படியே சில வினாடிகள் ஸ்தம்பித்துப்போய்விட்டார். அவரின் பிரமிப்பு நீங்குமுன்பு, ''டாக்டர், டாக்டர்'' என்ற குரல் வீணையின் ஒலிபோன்று டாக்டரின் செவிகளில் ரீங்காரமிட்டது.

டாக்டர் எதுவுமே பேசாமல் மௌனமாய் உட்கார்ந்திருந்தார்.

''டாக்டர்! தாகமாயிருக்கு டாக்டர். எனக்குப் பயமாயிருக்கு டாக்டர்'' என்று மீண்டும் அக்குரல் கூறிற்று. சந்தேகமில்லை. அது கீதாவின் குரல்தானென்பதை உணர்ந்துகொண்ட டாக்டர் எழுந்து மின்விளக்கைப் பற்றவைத்துவிட்டு, அறையைத் திறந்து அடுத்த அறையின் கதவடிக்குச் சென்று கதவில் தட்டி, ''கீதா, கீதா'' என்று அழைத்தார். ''நான்தான் டாக்டர் அழைத்தேன்'' என்று தெளிவாக ஒலித்தது கீதாவின் குரல்.

## 7. அறையில் கண்ட அதிசயம்!

சிலருக்கு சில விடயங்கள் ஆச்சரியமாகவும், அபூர்வ மாகவும் இருக்கலாம். ஏனெனில் ஏற்படும் வியப்புறு நிகழ்ச்சிகளே மனித மனத்தில் இத்தகைய உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கின்றன. ஆனல், டாக்டர் சிவகுமார் அமெரிக் காவில் பல அதிசயங்களைக் கண்டறிந்தவர். அதுமட்டுமின்றி, பழமையில் மிகுந்த நம்பிக்கையுடையவர். ஆகவே, அறை யில் திரும்பவும் கீதாவின் குரலைக் கேட்டபோது அவர் எது வித அதிர்ச்சியுமடையவில்லை.

கெட்டவனுடன் நாசமாக மோதிக்கொண்டாலொழிய, அவனுக வலிந்து எம்மை உபத்திரவம் செய்யமாட்டான் என்ற நம்பிக்கை டாக்டரின் மனதிலிருந்தது. ஆகவே பேய், பிசாசாயிருப்பினும் அவற்றிற்கு மாருக நாம் சென்று லன்றி நம்மை அவை தொல்லைப்படுத்த மாட்டா என்று எண்ணிய சிவகுமார், கீதாவின் அறைக் கதவைத் தட்டி ஞர். அவள் உள்ளே இருந்து குரல் கொடுத்ததும், ''கதவு உள்ளேதான் பூட்டப்பட்டிருக்கிறது. திறந்து வெளியே வாருங்களேன்'' என்ருர்.

அவர் கூறிய ஒருசில விஞடிகளில் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் கீதா. அவள் உடல் மிகவும் களைப்புற்றிருந்தது.

''டாக்டர் தாகமாயிருக்கு. ஏதாவது...''

உடனே டாக்டர் பிளாஸ்கிலிருந்து சுடச் சுடக் காப்பி ஊற்றிக் கொடுத்தார். கொடுத்துவிட்டு, ''கீதா உனக்குப் பசிக்கவில்லையா?'' என்ருர்.

''டாக்டர், உடலெல்லாம் ஒரே அசதியாய் இருக்கு. குளிக்கவேண்டும் போலிருக்கு'' என்ருள்.

''என்ன இந்த நேரத்திலா? இப்ப இரவு இரண்டுமணி வரையிருக்குமே கீதா'' என்றார் டாக்டர்.

''அடேயப்பா இவ்வளவு நேரமும் தூங்கிவிட்டேன்'' என்று அவள் கூறியபொழுது, டாக்டர் அவள் உண்மையை கூறுகின்றாளா அல்லது தனக்காக நடிக்கின்றாளா என்று தெரியாமல் திணறினார்.

''என்ன டாக்டர் ஒரேயடியாய் சிந்தனையிலாழ்ந்துவிட்டீர்கள்?''

''கீதா! இங்கே நடப்பவை யாவும் ஒரே வியப்பாக வும், திகைப்பாகவுமிருக்கின்றன. எனக்குப் பயமில்லையா யினும் உன்னை இங்கே வைத்திருப்பது மிக...''

''டாக்டர், என்ன! என்னை வைத்திருப்பது உங்கட்கு உபத்திரவமாக இருக்கின்றது இல்லையா?'' என்றாள். அவள் அழகிய விழிகளில் நீர்த் திவலைகள் ததும்பி வழிந்தன.

''கீதா இங்கே நடந்த விடயம் உனக்குத் தெரியாதா? நீதான் உண்மையில் கீதாவா? அல்லது பிசாசா? என்று சந்தேகப்படவேண்டியிருப்பதாக எல்லோரும் பேசிக்கொள் கின்றார்கள்.''

''டாக்டர், யார் எதைப் பேசினாலும் எனக்கு நீங்கள் தஞ்சமளிப்பீர்களல்லவா? என் போதாத காலம், நான் ஒரு பெண்ணுக்குச் செய்த துரோகம் என்னை இப்படி வாட்டி வதைக்கின்றது'' என்று டாக்டரின் கரங்களை இறுகப் பற்றிக்கொண்டாள்.

அந்த அன்புப் பிடியில் உயிரே போவதாயிருந்தாலும் டாக்டர் அவளை உதறி விட்டுவிடமாட்டார். அபயம் என்று அவள் வேண்டிநிற்கும் பொழுது, அவள் உண்மையில் பிசா சாக இருந்தாலும் டாக்டர் கைவிடமாட்டார்.

டாக்டரின் உள்ளம் அத்தனை உறுதிவாய்ந்தது. ஒன் றைத் திட்டமிட்டுச் செய்யவேண்டுமென்றால் அது எத்தனை பயமானதென்றாலும் நிறைவேற்றாது விடமாட்டார். அப் படிப்பட்ட வைராக்கிய குணமிருந்ததாலேயே மனைவியை பயங்கரப் பரிசோதனைக்கு ஆளாக்கினார்.

கீதாவின் பூதவுடல் லேசாக நடுங்கியது. அவள் அழகு விழிகள் பனியில் நனைந்த ரோஜாக்கள் போன்று படபடத்தன. டாக்டரையே பார்த்துக்கொண்டிருந்தவள், அவர் பதிலேதும் கூறாததைக் கண்டபோது, அவர் கரங்களில் நின்றும் தன்னை விடுவித்துக்கொண்டு எழுந்தாள்.

''கீதா! எங்கே புறப்படுகிறாய்?''

''இந்த அனாதைக்கு எங்காவது ஒரு இடம் கிடைக்குமிடத்திற்கு'' என்றாள் கீதா வருத்தம் தோய்ந்த குரலில்.

''கீதா! நான் உன்னைக் காப்பாற்றுகின்றேன். ஆனால், சில நிபந்தனைகளுக்கு நீ கீழ்ப்படிய வேண்டும். அத்துடன் நேற்றுப் பூரா நீ அறையில் இல்லை. இங்கே பொலிஸ் மூதற்கொண்டு வந்து தேடிவிட்டுப் போகின்றனர்'' என்று நடந்த விபரங்களை டாக்டர் சிவகுமார் விளக்கியபொழுது கீதாவால் எதுவும் பேச முடியவில்லை.

அவளுக்குத் தெரியாமல் திடீர் திடீரென அவள் மறைந்துவிடுகின்றாள், அதற்குக் காரணம்? அவளை அறியாத ஒரு சக்தி அவளை ஆட்டிப்படைக்கின்றதா?

கீதாவுக்கு எதுவுமே புரியவில்லை. ''சுமதி, சுமதி, உன் ஆவிதான் என்னை ஆட்டிப் படைக்கின்றதா? உன் காதலைக் கைகூடவிடாது தடுத்தேன். அந்தக் காதகன் என்னையும் ஏமாற்றிவிட்டான்! சுமதி, நீ யார் என்றே எனக்குத் தெரியாது. உன் பெயரைமட்டும் அவன் சொல்லக் கேட்டது உண்டு. அவன் பெரும் பணக்காரன். உன்னைப்போல என்னையும் ஏமாற்றிவிட்டான். ஆனால், நீ என்னைப் பழிவாங்குகின்றாயா?'' என்று புலம்பினாள்.

அவள் அழும்பொழுது கூறிய விடயங்களிலிருந்து டாக்டர், அவளது கடந்தகாலம்பற்றி ஓரளவு புரிந்துகொண்டார். அது மட்டுமன்றி டாக்டரின் கண்களிலும் நீர்த்திவலைகள் அரும்பிநின்றன. டாக்டர் அவள் கரங்களைப் பற்றி, ''இங்கே என்னோடு இரு கீதா'' என்றார்.

அவருடைய கனிவான பார்வையில், அவள் உள்ளத்தில் நம்பிக்கை பிறந்தது. டாக்டர் தன்னைக் காப்பாற்று

வார் என்ற எண்ணம் வேரூன்றியது. அவர் கண்களைப் பார்த்தவள் அதையே பார்த்தபடி நின்றாள்.

அவருடைய கண்களில் ஏதோ அபூர்வமான கவர்ச்சி இருப்பதாக அவளுக்குத் தோன்றியது. யானையின் கண் எவ்வளவு சிறிதாகவும், கவர்ச்சியாகவும், ஒளியுடையதாகவும் விளங்குகின்றதோ, அதேபோன்று அவருடைய சிறிய விழிகளின் உள்ளேயும் ஏதோ கவர்ச்சியிருந்திருக்க வேண்டும். ''டாக்டர்'' என்று அழைத்தவாறு அவர் அருகில் நெருங்கி அமர்ந்தாள் கீதா.

''கீதா! என்னை நம்புகின்றீரா?'' என்றார் டாக்டர்.

''ஆமாம் டாக்டர். உங்களை மனப்பூர்வமாக நம்புகிறேன்'' என்றாள்.

அவளுடைய பேரெழில் டாக்டர் சிவகுமாரின் உள்ளத்தில் கிளர்ச்சியை உண்டுபண்ணியிருக்க வேண்டும். ஏனெனில் அவள் கரத்தைப் பற்றியவாறு அவளையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்.

''டாக்டர், என்னை யாருமே நம்பமுடியாத நிலையிலிருக்கின்றனர் என்று நீங்கள் கூறுகிறீர்கள். அதே வேளையில் என்னை நம்பி எனக்குப் புகலிடமளிக்கிறீர்கள். உங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டவள்'' என்றாள்.

''கீதா, உன்னை நான் நம்புகிறேனோ இல்லையோ அது என்னைப் பொறுத்த விடயம். ஆனால் எனக்குத் தொல்லை தராதிருந்தால் அதுவே போதும். உன்னை நான் காட்டிக்கொடுக்கமாட்டேன். இனி அடிக்கடி காணாமல் போய்விடமாட்டியே?'' என்று கூறிவிட்டு, அவளோடு சேர்ந்து அவளிருந்த அறைக்குச் சென்றார். அங்கு அவருக்கு ஒரு அதிசயம் காத்திருந்தது.

## 8. கதவைத் தட்டிய கை!

டாக்டர் சிவகுமார், கீதாவுடன் அறைக்குள் சென்ற போது, அந்த அறையில் கிடந்த மலர்க் கொத்தைக் காணவில்லை.

அதுபற்றிக் கீதாவிடம் கேட்டபோது டாக்டரை அவள் அணைத்துப் பிடித்துக்கொண்டாள். அந்த அணைப்பின் ஸ்பரிசம் டாக்டரின் உள்ளத்திலும், உடலிலும் உணர்ச்சி அலைகளைத் தூண்டிவிட்டது.

பல காலமாகக் கட்டுப்பட்டிருந்த உணர்ச்சி வெள்ளம் கரை குமுறிப்பாயும் நிலைக்கு வந்துவிட்டது. ''கீதா'' என்று அழைத்தவாறே அவள் முகத்தை நிமிர்த்தியவருக்கு பரிதாப உணர்வே மேலோங்கி நின்றது.

அழகு குலையாத கீதாவின் முகம் வெளுத்துவிட்டிருந்தது. அவள் முகத்தில் சுழலும் இரு கருவிழிகளிலும் கண்ணீர் கரைபுரண்டோடியது!

''அழாதே கீதா'' என்று கண்ணீரைத் துடைத்துவிட்டார் டாக்டர். அவள் விம்மி அழுதாள்.

அந்த நிலையில் அவள்தான் இரத்தப் பிசாசு அல்லது மோகினிப்பேய் என்று யாராவது கூறியிருந்தால் அவர்களை டாக்டர் நம்பவே மாட்டார்.

விடியற்காலையாகிவிட்டதை அறிவித்து சேவல் கூவியது. கோயில் மணியும் ஒலித்தது.

டாக்டர் வீட்டு வேலைக்காரக் கிழவன் விழித்தெழுந்த போது, கீதா முன்பிருந்த அறையில் வெளிச்சம் தெரியவே ஓடிச்சென்று பார்த்தான். அவன் கண்களை அவனாலேயே நம்ப முடியவில்லை. கீதாவை அணைத்தபடி உரையாடிக் கொண்டு நிற்கும் மனிதன் டாக்டர்தானா? என்று எண்ண

மிட்டவாறு மீண்டும் விழிகளைக் கசக்கிவிட்டுப் பார்த் தான். சந்தேகமில்லாமல் டாக்டராயிருக்கவே ''ஐயா'' என்ருன்.

''கந்தசாமி இங்கே வா. உன்னிடம் பல முக்கியமான செய்திகள் கூறவேண்டும்'' என விடயங்கள் யாவற்றை யும் விளக்கமாகக் கூறினர். கீதாவைப்பற்றிய செய்திகளை யாருக்கும் வெளியிடக்கூடாதென்று கட்டளையிட்டார்.

பின்பு டாக்டர் கீதாவை அவள் அறையிலேயே சென்று படுக்கும்படி கூறினர். ஆனல், அவள் மறுத்துவிட் டாள். டாக்டருடனே அவரது அறையில் தான் தங்கப் போவதாக மன்ருடினுள்.

வாழ்க்கையில் விருப்புடனே விருப்பின்றியோ ஏதோ பிறவி எடுத்துவிட்டதற்காக வாழவேண்டும் என்பவர் போல வாழ்ந்துகொண்டிருந்த டாக்டர் சிவகுமாருக்கு மன திலே எந்தவிதமான ஆசையோ, அன்றி அச்சமோ ஏற்பட வில்லை. அவள் ஸ்பரிசத்தில் சில நிமிட நேரம் நிலைகுலைந் திருந்தாலும் அவள் ஒரு பரிதாபத்துக்குரியவளாகக் காட்சி கொடுத்தாள். ''சரி கீதா, என் படுக்கையிலேயே நீங்கள் படுத்துக்கொள்ளுங்கள். நான் வெளியிலேயே படுத்துக் கொள்கின்றேன்'' என்ருர்.

பரிதாபத்துடன் அவள் டாக்டரை நிமிர்ந்து பார்த் தாள். அந்தப் பார்வையின் பின்னே, பீதியோ அன்றி அச் சப்படுபவள் போன்ற நடிப்போ துலங்கியது. டாக்டருக்கு தர்மசங்கடமாகிவிட்டது.

''கீதா, நான் உங்களோடு அறையில் தூங்குவது நல்லதல்ல'' என்ருர்.

''டாக்டர், நடைபெற்ற நிகழ்ச்சிகளால் என்னுள்ளம் துடித்துக்கொண்டிருக்கின்றது. சித்தியும் மற்றவர்களும் நான் இறந்து விட்டதாகக் கூறுகின்றனர். நான் அடிக்கடி மறைந்துபோய் விடுவதாக நீங்கள் வேறு கூறுகின்றீர்கள். என்னை இப்படி எல்லோரும் சித்திரவதை செய்கின்றனர். நான் ஏற்கனவே ஒருவனல் ஏமாற்றப்பட்ட வள். உங்களை நம்பிய பின்பு — நீங்களே தஞ்சமென்

றடைந்தபின்பு உங்கள் அருகிலேயே படுத்துத் தூங்கினுலும் பரவாயில்லை;''

''நோ நோ. அப்படி இல்லை கீதா. நான் ஒரு ஆண். நீங்கள் பெண். இரவும் தனிமையும் எவரையும்...''

''டாக்டர், எனக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்களால் பயந்து செத்துக்கொண்டிருக்கின்றேன். அப்படிப் பட்ட நான் உங்கள் அரவணைப்பிலேயே தூங்க விரும்புகின்றேன். அதைப் பெரிதும் விரும்புகின்றேன் டாக்டர்'' என்று அவள் கூறியபொழுது, டாக்டரின் முகத்தில் ஒரு புதுப் பொலிவு தென்பட்டது. அவர் நினைவில் கீதாவை அடைய வேண்டுமென்ற எண்ணம் தோன்றிற்றோ இல்லையோ ஆனுல், அவளாகவே வலிந்துவரும்பொழுது அவர் உள்ளத்தில் பலகாலமாகத் தூங்கிக்கிடந்த ஆண்மை விழித்துக் கொண்டது. ஆனுலும் அதற்கு முன்பு அவரது பகுத்தறிவு விழித்துக்கொண்டது. அந்த நினைவை மாற்றிக்கொண்டார்.

''கீதா, நீங்கள் அளவுக்குமீறிய அச்சத்திற்கு ஆளாகியிருக்கின்றீர்கள். அதுமட்டுமல்ல, உங்கள் உள்ளச்சோர்வுடன் உணவில்லாமல் உடலிலும் சோர்வு ஏற்பட்டுள்ளது. நீங்கள் படுத்துத் தூங்குங்கள்; உங்கள் அருகிலேயே நான் துணையாகவிருக்கின்றேன்'' என்று அவளைத் தன் கட்டிலில் படுக்க வைத்தார்.

கீதாவின் கரம் டாக்டரின் கரத்தைப் பற்றிக்கொண்டது.

''டாக்டர், இந்தக் கரம் என்றும் என்னைப் பாதுகாக்குமா?'' என்றுள் ஏக்கம் தோய்ந்த குரலில்.

''பாதுகாக்கும் கீதா. ஆனுல்...! சில நிபந்தனைகள்: உன் வாழ்வில் உன்னை ஏமாற்றியவனை மறந்துவிட்டாயா?'' டாக்டரின் குரலில் ஒலித்த பயங்கரம் கீதாவை நடுங்க வைத்தது.

''அவன் என்னை மட்டுமல்ல, எத்தனையோ பெண்களைக் கெடுத்த பாவி. அவன் என் விரோதி'' என்று அவள் கூறி முடிக்கும்பொழுது, வெளிக் கதவை யாரோ பலமாகத் தட்டும் சப்தம் கேட்டது. டாக்டர் கட்டிலைவிட்டுத் திடீரென எழுந்தார். அந்த அறையின் விளக்கும் திடீரென அணைந்தது.

# 9. சுருளி வந்தான்!

அறையில் விளக்கு அணைந்ததும் கீதா பயந்துவிட்டாள். பரபரப்புடன் எழுந்து டாக்டரை அணைத்துக் கொண்டாள். அவள் உள்ளம் படபடவென அடித்துக் கொண்டது. சில விநாடிகளின் பின்பு கதவு திறக்கப்படும் ஓசையும், அதைத் தொடர்ந்து வேலைக்காரக் கிழவன் கந்தசாமி யாரோ ஒருவனுடன் பேசும் குரலும் கேட்டது.

''பயப்படாதே கீதா. யாரோ நம்மைத்தேடி வந்திருக்கிறார்கள் போலிருக்கு'' என்றார் டாக்டர்.

''டாக்டர் ஐயா, யாரோ ஒருத்தன் பாம்பு கடித்துப் போட்டதென்று அவதிப்படுகின்றான்'' என்றான் கந்தசாமி.

''சரி, சரி. உட்காரவை; இதோ வந்துவிடுகிறேன்'' என்று அவனுக்குக் கூறிவிட்டு, ''கீதா, பயப்படவேண்டாம்! விடியும் சமயமாகிவிட்டது. பயப்படாது தூங்குங்கள். அந்த மனிதனைக் கவனித்துவிட்டு வருகின்றேன்'' என்று அவளைத் தேற்றிப் படுக்க வைத்துவிட்டுச் சென்றார்.


முன் ஹாலில் டாக்டரை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான் ஒரு நடுத்தரவயது மனிதன். ''ஐயா, காலிலே ஒரு நாகம் தீண்டிவிட்டதுங்க. அதுவும் படுக்கைப் பாயிலே'' என்றான்.

அவன் கடிவாய்க்கு மேலே கட்டுப்போட்டிருந்தான்.

விஷத்தை இறக்குவதற்கான மூலிகைகள், மருந்து வகைகளுடன் வைத்தியத்தை ஆரம்பித்த டாக்டர், ''உன் பெயரென்ன?'' என்றார்.

''என் பெயருங்களா? சுருளியப்பன்'' என்றான்.

''என்ன தொழில் செய்கின்றாய்?''



''ஒரு தொழிலுமில்லையுங்க'' என்று இழுத்த சுருளிய னுடைய முகத்தில் பீதி படர்வதை டாக்டர் உணர்ந்து கொண்டார்.

''சுருளியப்பா! நான் வைத்தியன் என்பது ஞாபக மிருக்கட்டும். உண்மையிலேயே உனக்குத் தொழில் ஏதும் இல்லைத்தானா?''

''ஆமாங்க. தற்போது எந்தத் தொழிலுமில்லை.''

அவன் குரலில் கலவர உணர்வைக் கண்டுகொண்ட டாக்டர், ''சுருளி நீ பயப்படாதே. இதற்கு முன்பு என்ன தொழில் செய்தாய்?'' என்றார்.

''அது சொல்லக்கூடிய தொழில் இல்லீங்க.''

''ஏன் திருட்டு நடத்தினியா?''

''இல்லையிங்க. ஆனால், ஒருவழியில் திருட்டுத்தானுங்க. ஆனால், மக்களுக்கு உதவாது அநியாயமாக நிலத்துக்குள் புதையுண்டு போவதைத் தானுங்க திருடினேன். உண்மை யைச் சொல்லுறேனுங்க, என்னைப் பொலிஸிலோ, பொது மக்களிடமோ பிடித்துக் கொடுத்துவிடமாட்டீங்களே'' என் றான் நடுங்கும் குரலில்.

''உண்மையைக் கூறு. உனக்கு ஏற்ற தொழிலும் நான் தருகிறேன்'' என்று டாக்டர் கூறினார்.

அவருடைய ஆறுதல் வார்த்தையும், கனிவான பேச் சும் சுருளியப்பனைக் கவர்ந்துகொண்டது.

''ஐயா! உங்களை நான் பூரணமாக நம்புகிறேனுங்க'' என்று கூறித் தன் தொழில் பற்றிய பூரா விபரங்களையும் கூறினான்.

''உன்னைத் துரத்திய எலும்புக்கூடு பலருக்கும் தொல்லை கொடுத்துள்ளது. ஏன்...?'' என்று ஆரம்பித்தவர், சொல்ல வந்ததைச் சொல்லாமல் நிறுத்திவிட்டார். அவனிடம் மிகுதி விடயத்தைச் சொன்னால், கீதா பற்றிய விபரங்களை யும் கூறவேண்டும். அத்துடன் அவன் அங்கிருக்கப் பயந்து ஓடிவிட்டாலும் என்று எண்ணினார்.

''சரி, உனக்குப் புதைகுழி வெட்டிய பழக்கமும் உண்டு. தென்னங்கன்றுகளுக்குப் பாத்திவெட்டித் தண்ணீர் விடுவ

தற்கும், சில மூலிகைகள் வெட்டி வருவதற்கும் முடியுமா உன்னுல்?''

''கட்டாயம் செய்கிறேன் ஐயா.''

''வேறு என்ன தொழில் தெரியும்?''

''பாம்பு பிடிப்பேனுங்க.!''

''என்ன'' என ஆச்சரியத்துடன் வினவினுர் டாக்டர் சிவகுமார்.

''ஐயா, முன்பு இத் தொழில்தான் செய்தேனுங்க. ஆனல் இப்போ எல்லாம் கைவிட்டாச்சு, அதற்கேற்ற வழி வகைகள் கிடையாதுங்க. எனக்குக் கடித்த நாகத்தைப் பிடிச்சு வைச்சிருக்கேன்'' என்ருன்.

''வெரிகுட். அதை இங்கே கொண்டுவா, ஒரு பரிசோதனை நடத்தவேண்டும்'' என்று கூறிவிட்டு, வேலைக்காரக் கிழவன் கந்தசாமியை அழைத்து சுருளியப்பனை வேலைக்கு சேர்த்த விபரத்தைக் கூறினுர்.

காலை ஒன்பது மணியளவில் எழுந்தாள் கீதா. துயில் நீங்கி எழுந்தவளுக்கு, டாக்டர் இரவு கூறிய விடயங்கள் ஒன்றன்பின் ஒன்ருக நினைவுக்கு வந்தன அறையில் அவளுக்குத் தேவையான யாவும் வைக்கப்பட்டிருந்தன. சுவரிலே அழகான படங்கள் மாட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. டாக்டருடைய மனைவியும், டாக்டரும் சேர்ந்து எடுத்த படமொன்று அறையின் மத்தியில் தொங்கியது. அதையே பார்த்துக்கொண்டு நின்ருள் கீதா. அதே வேளையில் கதவு திறக்கப்பட்டது திடீரெனத் திரும்பிய கீதாவின் எதிரே டாக்டர் புன்சிரிப்புத் தவழ நின்ருர்.

''இது யார் டாக்டர்?'' என்ருள் கீதா படத்தைச் சுட்டிக் காட்டியபடி.

''இது என் மனைவி.''

''அவள் எங்கே டாக்டர்?''

''இறந்துவிட்டாள் என்று கூறிவிட்டு மௌனமாகி நின்ருர். தான் அப்படிக் கேட்டது சரியல்ல என எண்ணினுள் கீதா. மனைவியின் ஞாபகத்தைத் தான் நினைவுபடுத்

தியதால் அவர் மௌனமாகிவிட்டதை எண்ணிய கீதா பேச்சை வேறு திசையில் திருப்ப எண்ணிஞள்.

''ஏன் டாக்டர் விடியற்காலையில் வந்தவன் நிலை என் ஞயிற்று?'' என்று கேள்வியைப் போட்டதும், டாக்டரின் முகத்தில் மாறுதல் ஏற்பட்டது. கீதாவை உற்று நோக் கிஞர். அவர் கண்களின் கவர்ச்சி கீதாவை நிலைகுலையச் செய்தது. டாக்டரின் கரங்களைப் பற்றிக்கொண்டு அவர் மார்பில் சாய்ந்தாள்.

''கீதா குளித்துவிட்டு வா. மிகுதியைப் பின்பு கவனிப் போம்'' என்ருர்.

அவர் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து ஒழுகும் குழந்தையைப் போலத் தலையாட்டிவிட்டு நடந்தாள் கீதா.

# 10. டாக்டர் மனிதனா?

அதிகாலையிலேயே விழித்து விட்ட ராஜா அன்று இரவு எதுவும் நடைபெறாத காரணத்தால் மிகவும் உற்சாகமாகக் காணப்பட்டான். பார்வதியும், சுலோசனாவும் நிம்மதியாக உறக்கம் நீங்கி எழுந்தனர். மறுபடியும் அப்படியொரு பயங்கர சம்பவம் தங்கள் வீட்டில் நடந்து விடக்கூடாது எனப் பயந்து இறைவனை வேண்டிக் கொண்டான் ராஜா. தங்களுக்காக உதவி செய்ய வந்த டாக்டரின் வீட்டில் கீதா சென்று மறைந்ததும், அங்கே இரத்தமும், நரம்புச் சுருளும் காணப்பட்டதும் என்னவாய் முடிந்தது என அறிய ஆவல் கொண்டவனாய் போனில் டாக்டரை அழைத்தான். அப்படியெதுவும் நடைபெறவில்லையென டாக்டரிடம் அறிந்து மகிழ்வுடன் போனை வைத்தான்.

அன்று இரவு மாந்திரீகர் மயில்வாகனம் வந்தார். கோழிச் சேவல் பலிகொடுத்து கழிப்பு நடாத்தினார். டாக்டரும் வந்திருந்தார். அன்றிரவு எதுவிதமான அசம்பாவிதமும் நடைபெறவில்லை. டாக்டரைத் தினமும் வரும்படி ராஜா அழைத்தான். அவர் வீடு திரும்பும்போது நேரம் பத்து மணியாகிவிட்டது.

முன் நிலவு காலம். ஆனால் பிறை நிலா மறைந்து விட்டிருந்தது. தெரு நாய்களின் ஊளைச் சப்தம் பயங்கரமாக ஒலித்தது. டாக்டரின் உள்ளத்தில் கீதாபற்றிய நினைவே சுழன்று கொண்டிருந்தது. கீதாவின் அழகு உருவம் அவர் உள்ளத்தில் ஓர் சிந்தனை வித்தாகி விட்டது. அவர் மனோ வேகம் கார் வேகத்தை முந்திக் கொண்டு கீதாவைத் தேடி ஓடியது.

அறையெங்கும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. சுருளி மறுநாள் வருவதாகக் கூறிப்போய் விட்டான் என வேலைக்காரக் கிழவன் கந்தசாமி கூறினன். டாக்டர் உடுப்புகளைக் கழற்றி விட்டு, கீதாவின் அறைக்குச் சென்ருர். அவருடைய ஆர்வம் எல்லாம் அறை வாசலில் வந்ததும் மறைந்து விட்டது. அங்கே..........? அறையில் கீதாவைக் காணவில்லை. மறுபடியும் மாயமாய் மறைந்து விட்டாளோ என்று எண்ணினுர். அவர் உள்ளத்தில் கீதாவைப்பற்றிய இனிய நினைவுகள் திடீரென அறுந்து சூனியமாயின. மனம் சோர்ந்து கதிரையில் அமர்ந்தார். 'டாக்டர்' என அழைத்தவாறே பின்புறமிருந்து ஒலித்தது கீதாவின் குரல். டாக்டர் அவளை பிரமிப்புடன் திரும்பிப் பார்த்தார். அவரின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன.

'கீதா' என்ருர்.

'பயந்து விட்டீர்களா டாக்டர்?'

'நீ மறுபடியும்.........'

அவள் ஓடி வந்து டாக்டரின் வாயில் கையை வைத்து மேலே பேச விடாமல் அமத்தினுள்.

அவளைப் பார்த்துக் கொண்டு நின்ற டாக்டர் அசை வற்ற சிலையாகி விட்டார். வேண்டுமென்றே ஆடம்பர மாக அலங்காரம் செய்திருந்தாள் கீதா. மறுமுறையும் பார்க்கத் தூண்டும் பேரெழில். அழகுக்கு அழகு செய் திருந்தால் கேட்கவா வேண்டும்? உணர்ச்சிகளைக் கட்டி யாளும் வல்லமை படைத்த உறுதியான டாக்டரின் நெஞ் சத்தை தன் வசமாக்கிவிட வேண்டுமென்றே கீதா விரும் பினுள். அவள் உள்ளத்தில் இப்போ எந்த நினைவும் கிடையாது. தான் ஒருவனுல் ஏமாற்றப்பட்டவளென்ருே, தகப்பனை இழந்து சிற்றன்னையால் வெறுத்து விடப்பட்ட வளென்ருே, இறந்தவளென்ருே அவள் எள்ளளவும் நினைத்துப் பார்க்கவில்லை. வாழ வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் டாக்டரை மயக்கிவிட முயன்ருள்.

'கீதா உன் மனதிலுள்ளதைக் கூறட்டுமா' என்றார் டாக்டர்.

'கூறுங்களேன்' என்றாள் கீதா செல்லமாக.

'டாக்டரை உன்னுடையவராக்க வேண்டுமென நினைக்கின்றாய். இல்லையா கீதா'

அவர் கூறியதைக் கேட்டு பிரமிப்படைந்த கீதா, அவர் மார்பில் முகம் புதைத்துக் கொண்டு விம்மினாள்.

குழந்தையை அணைப்பது போன்று கீதாவை அணைத்த டாக்டர், அவள் அழகு முகத்தை அன்புடனும், ஆதரவுடனும் வருடியபடியே 'கீதா நீ என்னை விரும்புகின்றாய். உன்னை நான் அறிந்தளவு என்னை நீ அறியவில்லை கீதா. என் வாழ்வுடன் மறைந்துள்ள பயங்கர இரகசியமொன்றை நீ கேட்க வேண்டும். கேட்டபின் என்னை விரும்புகின்றாயா எனக் கூறு. அதன்பின் உன்னை ஏற்கின்றேன்' என்றார்.

அப்பொழுது அவர் முகத்தைப் பார்க்கவே கீதாவுக்கு பயமாக இருந்தது. டாக்டர் பயங்கர மனிதனா? இவர் தான் இந்தப் பிசாசு வேலைக்கெல்லாம் காரணகர்த்தாவாக இருப்பாரோ என்றெல்லாம் சிந்தித்தாள் கீதா. அவள் உடலில் நடுக்கமேற்பட்டது. அதே வேளையில் கீதாவை அணைத்திருந்த டாக்டரின் பிடியும் இறுகியது. டாக்டரின் கண்களை நிமிர்ந்து பார்த்தாள் கீதா. அவை நெருப்புக் குகை போன்று மின்னின. கீதாவின் உள்ளமெல்லாம் பயத்தினால் குலுங்கியது. டாக்டரின் முகத்தில் நிலவிய வெறி நிலையால் அவரைப் பார்க்கவே பயமாகவிருந்தது. புலியின் கையில் அகப்பட்ட புள்ளிமான்போலத் துடித்தாள் கீதா. அவரை மயக்க வேண்டுமென சற்று முன் தன்னை அலங்கரித்தவள், அவரிடமிருந்து தப்ப முயன்றாள்; மேலும் டாக்டரின் பிடி இறுகியது. பயத்தினால் வீல் என்று கத்தினாள் கீதா.

## 11. நாய்கள் ஓலமிட்டன!

மனித மனம் விசித்திரமான குகை. என்ன நேரம் என்ன நடக்குமென்று சொல்ல முடியாத விந்தைகள் அங்கே விநாடிக்கு விநாடி நடந்து கொண்டிருக்கும். டாக்டர் சிவகுமாருடைய உள்ளம் சாதாரண மனித இதயங்களினின்றும் வேறுபட்டதென்றே கூற வேண்டும். இனித் துன்பம் வேறு அனுபவிக்க இடமில்லையென்றளவிற்கு அவரது உள்ளத்தை வேதனைத் தீ வாட்டி இருந்தது. அந்தத் துன்ப நிகழ்ச்சிகள் மாறு முன்பே அவரை மணம் முடிக்கும்படி பலர் வற்புறுத்தினர். அவர் எதையும் லட்சியம் செய்யவில்லை. இந்தியாவுக்குச் சென்றார். சில வருடங்களின் பின்பு திரும்பினார். அதன் பின்புதான் தென்னந் தோப்பு வாங்கினார். அங்கே விஷக்கடி நிபுணராக தனது வைத்தியத் தொழிலை ஆரம்பித்தார். அமெரிக்காவுக்குப் படிக்கச் சென்றவர், முடிவில் விஷக்கடி நிபுணர் வேலை பார்க்க வேண்டி ஏற்பட்டு விட்டதை நினைத்து வருந்தினார். அவருடைய உறவினர்கள் சிலர் வற்புறுத்தி மல்லிகாவை அவருக்கு மணம் முடித்து வைத்தனர். துன்பத்தின் மேல் துன்பம் அனுபவித்த டாக்டருக்கு மனைவியோ மேலும் பேரதிர்ச்சி தரும் துன்பத்தைக் கொடுத்தாள். அதனால் அவர் தன் மனித உணர்வை இழந்தார், அந்த நினைவு அவர் மனதில் எழும் பொழுதெல்லாம் டாக்டருடைய உள்ளத்தில் அவ்வெறியுணர்வு ஏற்படும். அந்நிலையிலேயே கீதாவும் அவர் கைப்பிடியில் அவதியுற நேர்ந்தது.

கீதாவின் அலறல் சப்தம் டாக்டருடைய வெறியுணர்வைத் தடுத்தாட் கொண்டிருக்க வேண்டும். நெருப்பாகக் கனன்று எழுந்தவர் பனிக்கட்டியாகக் குளிர்ந்தார். தன்

பிடியினின்றும் திமிறி ஓட முயன்ற கீதாவை மார்புடன் தழுவிக் கொண்டார்.

அவள் பயந்தபடியே அவர் கழுத்தைக் கட்டிப் பிடித்தாள். ரோஜா இதழ்களால் தொடுத்த மலர் மாலை போன்று அவள் கரங்கள், அவர் கழுத்தைத் தழுவி இருந்தன.

'கீதா என் மனைவியைப்பற்றிய நினைவு வந்ததும் அந்தத் துரோகியை அழித்த நினைவுதான் எனக்கு வருகின்றது. அப்போது நான் மனிதத் தன்மையையே இழந்துவிடுகின்றேன். அவள் மீது நான் கொண்டிருந்த தூய அன்பை உணராமல் நொந்துபோன என் மனதை மேலும் நோகச் செய்தாள். அதன் காரணமாக அவளைக் கொன்றுவிட்டேன்'.

'டாக்டர்.........!' கீதா அதிர்ச்சியுடன் அலறினள். அவளை அணைத்துக் கொண்டு தேற்றினர் டாக்டர்.

'கீதா என் கதையைக் கூறவா? விடவா? என்று சிந்திக்கின்றேன். ஏனெனில் நான் இறந்ததிலிருந்து ஒவ்வொரு வினடியும் பயங்கரம் நிறைந்ததாகவே இருக்கும். உன் இதயம் மிக மென்மையானது. ஆகவே இரவில் பயங்கரமான இக்கதையைச் சொல்வதும் சரியன்று. ஆகவே பேசாமல் படுத்துத் தூங்கு. நாளைக் காலையில் கூறுகின்றேன்' என்று அவளைச் சமாதானம் செய்து படுக்க வைத்தார்.

இரவு பன்னிரண்டு மணி. எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. சுருளியப்பன் தன் படுக்கையில் புரண்டு படுத்துக் கொண்டான். பழைய தொழிலுக்குப் புறப்படும் நேரம். அந்த நேரத்தில் விழித்துக் கொள்ளும் சுபாவத்தை நீக்க முடியவில்லை. தன் தனிக் குடிசையிலே படுக்கையில் புரண்டு படுத்த சுருளியப்பனுக்குத் தூக்கம் கலைந்துவிட்டது.

வெகு தூரத்துக்கு அப்பால் நாய் ஊளையிடும் சப்தம் கேட்டது. சுருளியன் வீட்டுக்கு வரும் ஒழுங்கைத் திருப்பத்தில் ஓர் நாய் பலத்த சப்தமிட்டுக் குலைத்துக்

கொண்டு ஓடிவரும் சப்தமும் கேட்டது. அதைத் தொடர்ந்து ஒழுங்கை பூராவும் நாய்களின் ஊளை பயங் கரமாக ஒலித்தது.

இடுகாட்டில் எலும்புருவம் தோன்றிய அன்றும் இப் படித்தான் நாய்கள் ஊளையிட்டன. அந்த ஞாபகத்தை சுருளியனுல் மறக்க முடியவில்லை. அவன் இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. அவன் குடிசைக்கு முன்னுல் நின்று நாய்கள் குரைத்தன. பின்பு படிப்படியாக சப்தம் ஓய்ந்து விட்டது. இரண்டொரு நிமிடங்கள் பூரண அமைதி. மீண்டும் நாய்கள் குரைக்க ஆரம்பித்தன. பேய், பிசாசு களைக் கண்டாலே நாய்கள் இப்படியாக ஊளையிட்டுக் குரைப்பதெனச் சிலர் கூறக் கேட்டிருந்தான் சுருளி. அவ னுக்கு ஏன் தான் அங்கு தங்கினேம் என்ருகி விட்டது. இவற்றிற்கிடையே மனதிலே ஓர் வைராக்கியம் பிறந்தது. இப்ப என்னதான் நடந்து விட்டது? என்று எண்ணிய படியே சுருளி படுக்கையில் சாய்ந்தான். அடுத்த கணம் அவன் ஏற்றி வைத்த விளக்கு திடீரென அணைந்து விட்டது. சுருளி கண்களை இறுக மூடிக் கொண்டான். தீப்பெட்டியை எடுத்து மறுபடியும் விளக்கை பற்ற வைக்க நினைத்தான் ஆனுல், கைகள் இயங்க மறுத்தன.

வெளியே 'கிறீச் கிறீச்' என்னும் ஓசை எழுந்தது. அவ்வோசை சுருளியப்பனுடைய மனதில் மேலும் அச் சத்தை விளைவித்தது. அதே ஓசையை முன்பு இடுகாட் டில் கேட்ட ஞாபகம்! திரும்பவும் 'கிறீச் கிறீச்' ஒலி. சுருளிக்கு அதற்கு மேலும் அதிர்ச்சியைத் தாங்கும் பலம் இருக்கவில்லை. மயங்கி விட்டான். அதன் பின்பு அங்கு நடந்ததெதுவும் சுருளியப்பனுக்குத் தெரியாது.

# 12. நிர்வாணப் பெண்

யாழ்ப்பாணம் கச்சேரியடியிலிருந்து கிழக்கே செல்லும் வீதியில், நான்காவது குறுக்கு வீதியில், மூன்றும் நம்பர் வீடு, அவ்வீட்டைத் தொடர்ந்து பல வீடுகள். வீதி எங்கும் பட்டப்பகல் போன்று மின் விளக்குகள் ஒளி வீசிக் கொண்டிருந்தன. மூன்றும் நம்பர் வீட்டிற்கு சமீபத்தில்தான் புதிதாகக் குடி வந்திருந்தது சுகுமாரின் குடும்பம். அவனுக்கு இரு சகோதரிகள். ஒருத்தி ஏற்கனவே மணம் முடித்து விட்டாள். இரண்டாவது சகோதரி மட்டும் சுகுமாருடன் இருந்தாள். சுகுமார் திருமணம் செய்து ஒரு வருடம்தானிருக்கும். பதுளைக் கச்சேரியில் வேலை பார்த்து வந்தான். இப்போதுதான் ஊருடன் மாற்றம் பெற்று வந்திருந்தான். நல்ல வசதியுடைய குடும்பத்தில்தான் சுகுமார் மணம் முடித்து இருந்தான். அவன் சகோதரி சுகந்தி, அவன் இஷ்டப்படி எல்லாம் நடந்து கொண்டதால் அவள்மீது அவனுக்கு நிறைய அன்பிருந்தது. சுகுமாரின் அறைக்கு இரண்டாவது அறையில், சுகந்தி படுத்திருந்தாள். அவளுக்கு ஒரு காதலன் யாழ்ப்பாணத்தில் இருந்தான். அவன் அன்றிரவு சந்திப்பதாகச் சுகந்திக்கு எழுதி இருந்தான். சுகந்தியின் அண்ணன் சுகுமாருக்கும் அது தெரிந்துதான் இருந்தது. அவன், அவளுடைய இஷ்டத்துக்கு விரோதமாக எதுவும் செய்யமாட்டான்.

சுகந்தி படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். காதலன் சுந்தரம் எப்படியும் குறிப்பிட்டபடி இரண்டாவது காட்சி சினிமா முடிந்ததும் வந்து விடுவான் என்ற நம்பிக்கையில் கதவுகளைப் பூட்டாமல் விட்டிருந்தாள்.



அவளுக்கு தூக்கமே வரவில்லை, அறையில் 'பெட்ரூம் லைட்' மட்டும் மினுங்கிக் கொண்டிருந்தது. அந்த விளக்கின் ஒளியில் அறை ஒரே சிவப்பு மயமாய்க் காட்சியளித்தது.

மணி ஒன்றரையாகி விட்டது. அவள் தூங்காமல் எதிர்பார்த்திருந்தாள். வெளியே கதவு லேசாக திறக்கப் படும் ஓசை கேட்டது. முன் கதவைத் திறந்து உள்ளே வந்தால் அவள் படுத்திருக்கும் அறைதானே தென்படும், அவள் மனதில் இன்ப உணர்வுகள் ஒருங்கே எழுந்து ஓர் தவிப்பை உண்டாக்கின. மேனியில் அதிகம் ஆடைகளை அணியாது மெல்லிய சில்க் துணியிலுலான ஒரு கவுண் மட்டும் அணிந்திருந்தாள். அவள் உடலின் ஒவ்வொரு அங்கமும் இன்ப கீதம் இசைத்துக் கொண்டிருந்தது. அவள் எண்ணம், தன் காதலன் அறையில் நுழைந்ததும் ஏற்படவிருக்கும் நிகழ்ச்சி பற்றிய கற்பனையில் திளைத்திருந் தது. காலடியோசை மெதுவாக அறைவாயிலை நெருங்கு வது கேட்டது. அவள் உள்ளத்தில் பெரும் துடிப்பு. வாசற் கதவு எப்போது திறக்கும் என்ற ஆவலில் கட்டி லிலிருந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கதவு லேசாக திறந்தது. உள்ளே யாரும் வரவில்லை. ஒரு நிமிட நேரம் திறந்த கதவையே பார்த்துக் கொண்டி ருந்தாள் சுகந்தி. திடீரென உள்ளே ஓர் பெண் உருவம் நுழைந்தது. உடலில் ஒரு சிறு துணிகூட இல்லாமல் பிறந்த கோலத்திலேயே இருந்தாள். பற்கள் இரத்தக் கறை ஏறிக் காட்சி அளித்தன. சிவப்பு நிற ஒளியில் அவளைப் பார்க்கவே சுகந்திக்கு உள்ளம் நடுங்கியது. அவள் அறையில் நுழைந்ததும் முதலில் ஓர் அபூர்வ வாசனை வீசிற்று. சில விநாடிக்குள் அவ் வாசனை துர்நாற்றமாக மாறி விட்டது. அடிமேல் அடி வைத்து அப்பெண் அவளை நெருங்கினாள்.

# 13. மர்ம மரணம்!

நிர்வாணமாய் வந்த பெண்ணுருவம், நெருங்க நெருங்க சுகந்தியால் மூச்சுக்கூடவிடமுடியவில்லை. அப் பெண்ணுருவத்தை பார்ப்பதற்கே கண்கள் கூசின.

நெருப்புக் கோளங்களாகப் பிரகாசித்தன கண்கள். உடலில் ஆங்காங்கு புண்கள். அப் புண்களிலிருந்து சீழ் வடிந்து கொண்டிருந்தது. சீழ்வடிந்ததால் துர்நாற்றம் வீசியிருக்கவேண்டும்.

அந்த உருவம் சுகந்தியை நெருங்கியது. தன் இரு கரங்களையும் நீட்டி தன்னிடம் அழைத்தது. சுகந்தியால் மறுக்க முடியவில்லை. மந்திரத்தால் கட்டுண்டவள்போல எழுந்து, அதனிடம் சென்றாள். சுகந்தி அணிந்திருந்த ஆடையைக் களைந்து விட்டு அவளை இறுக அணைத்துக்கொண்டது அவ்வுருவம். இரு நிமிடம் கழிந்தது. சுகந்தி தடாலென நிலத்தில் விழுந்தாள்.

அவள் விழுந்த ஓசை அடங்குவதற்குள் வெளிவாசற் கதவு திறக்கப்படும் ஓசை மீண்டும் கேட்டது. பதுங்கிப் பதுங்கி உள்ளே வந்தான் சுகந்தியின் காதலன் சுந்தரம்.

சுகந்தியின் அறைக் கதவை தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தவன், நிர்வாணமாய் நிற்கும் அப்பெண்ணுருவைப் பார்த்தான். அப் பெண்ணின் கண்கள் நெருப்புக் கோளங்களாய்க்காட்சியளிப்பதைக் கண்டு, பயந்து கீழே நோக்கிய போது-

சுகந்தி ஆடையின்றி பேச்சுமூச்சின்றிக் கிடப்பதைக் கண்டு திடுக்குற்றான். வாயைத் திறந்து பலம் கொண்ட

மட்டும் கத்தினுன். அவன் கத்திய சத்தம் தொண்டையை விட்டு வெளியே வரவில்லை.

வெளியே 'கிறீச் கிறீச்' என்ற சத்தம் கேட்டது. அந்த ஒலி சுகந்தியின் அறையை நெருங்கி வந்து கொண்டிருந்தது. யாரோ வருகிறுர்கள் என்றுநினைத்துத் திரும்பினுன் சுந்தரம். அவன் பார்வையிலே வர்ண விளக்குகளின் ஒளி வெள்ளந் தான் காட்சியளித்தது. அதைத் தொடர்ந்து எலும்புக் கூட்டின் நடனம். திடீரென நிர்வாணப்பெண்ணைப் பார்க்கத் திரும்பினுன். அவளைக் காணவில்லை. அதிர்ச்சி தாங்காது தொப்பென நிலத்தில் வீழ்ந்தான் சுந்தரம்.

விடியற்காலை வேளை சுகந்தியின் அறையில் யாரோ முனகும் சத்தம் கேட்டு, சுகுமார் படுக்கையிலிருந்து குதித்தெழுந்தான். அவன் அப்படி எழுந்து ஓடுவதைப் பார்த்துவிட்டு, அவன் மனைவி பத்மாவும் பின்னுல் ஓடினுள். வெளிக்கதவு திறந்தபடியே கிடந்தது. சுகந்தி அறையில் எரிந்துகொண்டிருந்த 'பெட்றூம் லைட்'டையும் இப்போது காணவில்லை. பயந்து சென்று சுவீட்சைப் போட்டான்.

அறைக்குள் பார்த்துவிட்டு, 'வீல்' எனக் கத்திவிட்டாள் பத்மா. தங்கை நிர்வாணக் கோலத்தில் நிலத்திலே கிடப்பதையும், அவள் சமீபத்தில் சுந்தரம் கிடப்பதையும், சேர்த்துப்பார்த்தபோது,சுகுமாரின் உள்ளம்கொந்தளித்தது. தங்கையின் அருகில் சென்று அவளைத் தூக்கிப்பார்த்தான்.

சுகந்தியின் மூச்சு நின்றுவிட்டிருந்தது. உடல் விறைத்திருந்தது. கண்களின் வெள்ளை விழி, கரு நீல நிறமாக மாறியிருந்தது. அவள் எப்படி இறந்திருப்பாள் என்ற எண்ணமே அவன் மனதில் எழுந்தது. அந்தச் சில நிமிட நேரத்தில் சுகுமாரின் உள்ளம் அடைந்த வேதனை சொல்லுந்தரமன்று. அவன் கண்கள் நீரை உகுத்த வண்ணமிருந்தன.

'பேய்...பிசாசு...ஐயோ அம்மா பேய், பேய்' என்று முனகினுன் சுந்தரம்.

சுகுமாரின் கவனம் சுந்தரத்தின் பக்கம் திரும்பியது. அவன் உள்ளத்திலுள்ள ஆவேசமெல்லாம் சுந்தரம் மீது

திரும்பிய அதே வேளையில், பத்மாவின் விழிகளும் கவனமும் அவனை நோக்கியே திரும்பின.

சுகுமார் எழுந்து கூசாவிலிருந்த தண்ணீரைத் தூக்கி அவன் தலையில் கொட்டினான். அவன் சேட்காலரைச் சேர்த்துப்பிடித்து, 'டேய் சுந்தரம் என் தங்கையை என்னடா செய்தாய்' என்றான்.

'பேய்...பேய்...எலும்...புக்கூடு' எனப் பிதற்றினான் சுந்தரம்.

'டேய் மடையா என்னடா பிதற்றுகிறாய்' என்று அவன் கன்னத்தில் ஒரு அறை வைத்தான்.

'அம்மா' என்று வீரிட்டலறினான் சுந்தரம்.

'அத்தான்! பாவம் அடியாதீர்கள். ஏதோ நடந்திருக்க வேண்டும். அவன் சுய நினைவின்றிப் பிதற்றுகிறான்' என்று கூறித்தடுத்தாள் பத்மா.

வீட்டிற்குள் நடந்த நிகழ்ச்சிகளினால் எழுந்த சத்தங் கேட்டுப் பக்கத்து வீட்டுக்காரர்கள் ஓடிவந்தனர். ஓடிவந்தவர்களில் ஒருவர், வாசல் கதவருகில் வட்டமாக இரத்தம் இருப்பதையும், அதன் நடுவில் ஒரு வஸ்து சுருண்டு கிடப்பதையும் பார்த்து, 'மிஸ்டர் சுகுமார் இங்கே வாருங்கள்' என்று அழைத்தார்.

சுகுமார் வந்து பார்த்ததும் திகைத்து விட்டான். அவன் உள்ளத்தில் சுந்தரம் கூறிய பேய்—பிசாசு இப்பொழுது தான் கிலியை உண்டாக்கியது. உடனே பக்கத்து வீட்டுக்காரரிடம் கூறிப் பொலிசுக்குப் போன் செய்தான்.

சுகுமாரின் வீடு அமளி துமளிப்பட்டது. விடிந்ததும் ஜனத்திரள் அவன் வீட்டை முற்றுகையிட ஆரம்பித்தது. பொலிசாரால் ஜனங்களைக் கட்டுப்படுத்துவது பெரும் பிரச்சினையாகிவிட்டது.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் அருள்நாதனுக்கு ஒன்றுமே புரியவில்லை. சோமசுந்தரம் பங்களாவில் நடைபெற்றதும், டாக்டர் சிவகுமாரின் வீட்டில் நடந்ததும் ஒரே விதமாயிருந்தது. ஆனால் சுகுமார் வீட்டில் நடந்திருப்பதோ ஒரு கொலை.

நினைக்கவே இன்ஸ்பெக்டர் அருள்நாதனின் உள்ளம் நடுங்கியது. அவரால் எதுவும் பேச முடியவில்லை. டாக்டர் பிரேத பரிசோதனைக்காக அழைக்கப்பட்டிருந்தார். புகைப் பட நிபுணர்கள் படங்களைப் பல கோணத்திலிருந்தும் எடுத்தார்கள்.

டாக்டர், பிரேதத்தை பார்த்தவுடன் அவள் எப்படி இறந்திருப்பாள் என்று அறிய ஆவல்பட்டார். ஆகவே தான் பெண்ணின் பிணத்தைப் பரிசோதனைக்காக எடுத்துச் செல்ல வேண்டுமென்று கூறினார். அவர் வேண்டுகோள் படியே சுகந்தியின் பிணத்தை எடுத்துச் சென்றனர்.

வீட்டுக் கதவுக்கு முன்பாக இருந்த இரத்தத்தின் நடுவிலிருந்து வஸ்துவை மிகவும் அவதானமாக டாக்டர் எடுத்த போதும் அது 'புஸ்' எனப் புகைந்து விட்டது.

மயக்கம் நீங்கிய சுந்தரம், சம்பந்தமற்ற விடயங்களைப் பேசினான். தொடர்பற்ற சொற்களுக்கிடையில் பேய்-பிசாசு என்று ஏதோவெல்லாம் கூறினான். அவன் புத்தி பேதலித்து விட்டதாக இன்ஸ்பெக்டர் அருள்நாதன் கருதினார். ஆகவே, அவனை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற அனுமதித்தார்.

மணி பத்து அடித்து பத்து நிமிடம் கழிந்திருந்தது. மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று இன்ஸ்பெக்டர் அருள்நாதன் சிந்தித்தார். கொலையாளி பற்றிய எந்தத் தகவலும் பிரேத பரிசோதனை அறிக்கையில் இல்லை. 'முள்ளந்தண்டில் பல்லுப் போன்ற வஸ்துவினால் குத்தப்பட்டிருக்க வேண்டும். இரு துவாரங்கள் காணப்படுகின்றன. உடலெல்லாம் இன்னதென்று சொல்ல முடியாத நஞ்சு கலந்துள்ளது. என்ன நஞ்சாகவிருக்குமென்று பரிசோதனை மூலம் அறிய முடியாதிருக்கிறது. கற்பழிக்கப்படவில்லை. ஏக்கத்தினால் இருதயத் துடிப்புப் பலமாக ஓடிநின்றிருக்கிறது. இருதயத்துடிப்புப் பலமாக இருந்த காரணத்தால் இரத்தம் பூராவும் நஞ்சு பரவிக் கலந்திருக்கிறது. பிணத்தின் மீது இன்னதென்று கூற முடியாத துர்நாற்றம்

வீசுகிறது. ஆனல் அது பிணத்தின் மணமல்ல. முடிவாகக் கூறுமிடத்தில் இப்பெண்ணின் மர்ம மரணம் பற்றி எதுவுமே கூற முடியாதிருக்கிறது, என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் டாக்டர் சிவப்பிரகாசம் கூறியிருந்தார்.

''சுந்தரம் அங்கு ஏன் வந்தான்? அவன்தான் அவள் மரணத்திற்கு காரணமாயிருப்பானே? சுகுமார் அவனைப் பற்றி ஏதும் கூற மறுக்கின்றாரே'' இவற்றையெல்லாம் எண்ணிக் குழம்பினர் இன்ஸ்பெக்டர்.

★

டாக்டர் சிவகுமார் வீட்டில் சுருளியப்பன் டாக்டருக்கு யாவற்றையும் விளக்கமாகக் கூறிக்கொண்டிருந்தான். அவன் கூறிய கதைகளைக் கேட்டுக்கொண்டிருந்த கீதாவின் நெஞ்சம், 'படக் படக்' என அடித்துக்கொண்டது. டாக்டர் ஏதோ மர்மக்கதை கேட்கும் பள்ளி மாணவன் போல மிக ஆவலுடன் கேட்டுக்கொண்டிருந்தார்.

சுகுமாரின் வீட்டில் நடந்ததாகக் கூறிய கதைகளைக் கேட்ட கீதா, அறைக்குள்ளிருந்தே டாக்டரை அழைத்தாள். கீதா அறையை விட்டே வெளிவரவில்லை. சுருளியப்பன் எதிரில் போகக் கூடாது என்று டாக்டர் கூறியிருந்தார். ஆனல், சுருளியப்பன் கூறிய கதைகளைக் கேட்ட கீதாவிற்கு பகற் பொழுதானலும் தனியே இருக்கப்பயமாக இருந்தது. அவள் பூவுடல் படபடவென நடுங்கியது. டாக்டர் உள்ளே எழுந்து சென்று கீதாவுக்கு ஆறுதல் கூறி விட்டு வெளியே வந்தார். சுருளியன் தன் வீட்டில் நடந்த கதையை ஆரம்பிப்பதற்கு ஆயத்தமாகவிருந்தான்.

'சுருளி! உன்னுடைய கதையைக் கேட்பதற்கே பயமாக இருக்கே' என்றார்.

'என் கதையில்லீங்க டாக்டர், உண்மையாய் நடந்ததுங்க. ஒரே அமர்க்களமாயிருக்குங்க கச்சேரியடியில். பொலிஸ்காரர்களே பயந்து நடுங்கிருர்கள். எங்க மாந்திரீகர்

ஐயா கூறினர், இந்தப் பிசாசு தான் இதெல்லாம் செய்யு தென்று'

'சுருளி உன்னையும் இந்தப் பிசாசுதான் மிரட்டிச்சுதோ நீ உன் கதையை மறந்து விட்டாய் போலிருக்கே சுருளி! இங்கே மட்டும் இப்படியான கதைகளைக் கதைத்து விடாதே! இங்கே நம்ம அம்மா மிகவும் பயந்தவங்க' என்று கூறி விட்டு, 'அது சரி சுருளி உன் விடயத்தை மிகவும் இரகசிய மாகவே கூறு' என்ருர் டாக்டர்.

'நாய்களின் சத்தத்தைத் தொடர்ந்து என் வீட்டு விளக்குத் திடீரென அணைஞ்சுதுங்க. உடனே 'கிறீச் கிறீச்' என்ற ஒலி. அன்று இடுகாட்டிலே கேட்டுதுங்க என்று சொன்னேனே அதே மாதிரிக் கேட்டுதுங்க. நான் பயத் துலே மயங்கி விட்டேனுங்க. அப்புறமாகக் கண் விழிச் சேனு எனக்கு ஒரே திகைப்பாயிருந்துதுங்க. நான் படுத்த இடத்திலே கிடக்கலீங்க. என் குடிசையிருந்த இடமே தெரியலேயுங்க. எல்லாம் ஒரு மாயமாயிருக்குங்க' என்ருன் சுருளி.

அவனுல் மேற்கொண்டு எதுவும் பேச முடியவில்லே. டாக் டரையே பார்த்துக் கொண்டிருந்தான். இரண்டு மூன்று நிமிடம் அப்படி இருந்திருப்பான். டாக்டருக்குப் பின் புறமாக எதையோ உற்றுப்பார்த்துவிட்டு, 'எசமான் மோகினிப் பேயுங்க.........' என்று கத்திக்கொண்டே தடால் என நிலத்தில் விழுந்தான்.

# 14. கீதாவின் குழப்பம்

டாக்டர் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார். அவருக்குப் பின்னே ஏக்கம் நிரம்பிய பார்வையுடன் நின்றுகொண்டிருந்தாள் கீதா. 'கீதா! நீயா?' என்று கூறிக்கொண்டே எழுந்து சென்று அவளை அணைத்துக்கொண்டார் டாக்டர்.

'எனக்கு என்னவோ பயமாயிருக்கு டாக்டர்' என்று குழம்பினுள் கீதா.

'பயப்படாதே கீதா. நாம் கோழையாக மாறிவிடக் கூடாது' என்று கூறிவிட்டுத் தண்ணீர்க் கூசாவிலிருந்து குளிர்ந்த நீரெடுத்துச் சுருளியின் முகத்தில் தெளித்தார். சுருளி மயக்கம் நீங்கி ஒருவாறு எழுந்தான். எழுந்து நாலாபுறமும் பார்த்தான். அவன் கண்கள் கீதாவைக் கண்டதும் நிலை குத்தி நின்றன.

'ஏன் அப்படிப் பார்க்கிறுய்?' என்றுர் டாக்டர்.

'டாக்டர் அன்று புதைகுழி கிளறிய கதை சொன்னேன் அல்லவா?'

'ஆமாம் அதற்கும் இந்தப் பெண்ணுக்கும் என்ன சம்பந்தம்?'

'இவங்க மாதிரியே அந்தப் புதைகுழியில் இருந்த பெண்ணும்............மன்னிச்சுடுங்க எஜமான் இது எஜமானி அம்மாளுங்களா?'

'ஆமாம் எஜமானி அம்மாள் தான். மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்ற கதை உன்னைப் பொறுத்தவரையில் சரியாய்த்தானிருக்கிறது என்று கூறிய டாக்டர் 'சரி நீ வா கீதா!' என்று அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றுர்.

என்னை எல்லோரும் இறந்து போனதாகக் கூறுகின்றனர். சுருளியன் என்னைப் போலப் பெண்ணைப் புதைகுழியில் கண்டதாகக் கூறுகிறான். அப்படியாயின் நான் எப்படி உயிருடன் இருக்க முடியும்? எனக்குப் பைத்தியமா? அல்லது சொல்பவர்களுக்குப் பைத்தியமா? அல்லது ஏதாவது ஆள் மாறாட்டமா? என்று தனக்குள் எண்ணிக் குழம்பினாள் கீதா. கீதா குழப்பம் அடைவதைக் கண்ட டாக்டர் அவள் நடிக்கின்றாளா? அல்லது உண்மையிலேயே பயந்துவிட்டாளா? என்று எண்ணித் தயக்க முற்றார்.

'என்ன டாக்டர் சுருளியன் சொன்னது உண்மைதானா?' என்றாள் கீதா.

'அவன் அப்படித்தான் கூறுகிறான். நாங்களும் புதைகுழிக்குச் சென்று பார்த்தோம். அங்கேயுள்ள புதைகுழியில் பிணம் கிடக்கிறது. ஒன்றுமே புரியவில்லை. எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கிறது' என்றார்.

'என்னமோ டாக்டர் எனக்குச் சித்தப்பிரமை ஏற்படவில்லையே' என்று அவள் கண் கலங்கியபோது, அவளைப் பரிவுடன் அணைத்துக்கொண்டார் டாக்டர்.

கீதாவின் உள்ளத்தில் டாக்டர் சிவகுமார் நிறைந்துவிட்டார் என்றே கூறவேண்டும். அவள் உள்ளத்தில் துன்ப நிகழ்ச்சியினால் ஏற்பட்ட ரணம், காதலினால் ஏற்பட்ட ஏமாற்றம் அத்தனையும் ஒருங்கே சேர்ந்து அவள் வாழ்வு முடிந்து போன ஒன்றாகி விட்டது. அதன் பின்பு வாழ வேண்டும் என்ற அவசியமற்று வாழ்ந்த அவளுக்கு இந்நிலையில் ஒரு துணை வேண்டியிருந்தது. அதற்குற்றவராக இருந்தார் டாக்டர் சிவகுமார். ஆகவே அவரைத் தன் வாழ்க்கைத் துணைவராக ஏற்கவும் சித்தமாயிருந்தாள்.

டாக்டர் தன் வாழ்க்கையில் ஏதோ பயங்கர மர்மம் நிறைந்திருப்பதாகக் கூறியதை கேட்ட நேரந் தொடக்கம், அவள் உள்ளத்தில் ஊன்றியிருந்த நம்பிக்கை தளர்ந்து விட்டது. ஆனால் மனித மனத்தில் தோன்றும் விருப்பு வெறுப்பு உணர்ச்சி ஒருங்கே அவள் உள்ளத்தில் தோன்றி

விட்டது. ஒரு நாணயத்தின் ஒரு பக்கம் விருப்பும் மறு பக்கம் வெறுப்பும் என்றால் நாணயத்தை வீச மனம் வருமா? இரண்டு பக்கம் உடையதுதானே நாணயம். அதே போன்று விருப்பும் வெறுப்பும் சேர்ந்து விளங்கியது அவள் மனம். இது காரணமாக டாக்டரின் ரகசியம் பற்றி அறிந்து கொள்ள ஆவல் உந்தியது அவள் உள்ளத்தில். 'டாக்டர் இரவு கூறிய கதை என்னவென்று அறியலாமா;' என்றாள்.

'கூறுவதில் எனக்கு ஆட்சேபனையில்லை. பயந்துவிடமாட்டியே' என்று கேட்டவாறு அவளைத் தன்னுடன் அணைத்து அருகே உட்கார வைத்தார்.

'கீதா! நான் சொல்லப்போவது ஒரு கதை போலிருக்கலாம், ஆனல் நடந்தது ஏதோ உண்மை. அதுவும் என் சொந்த வாழ்வில் இரண்டு வருடங்களுக்குள் நடந்தது. நீ இக்கதையைக் கேட்ட பின் என்னை வெறுக்கலாம். அதற்காக நான் உன்னைக் கோபிக்கவோ' வெறுக்கவோ, உனக்கு ஆதரவு தர மறுக்கவோ, மாட்டேன். நீ சுதந்திரப் பறவையாக இங்கு வாழலாம்' என்று கூறிவிட்டு நெற்றியில் அரும்பிய வியர்வையைத் துடைத்து கொண்டு எழுந்தார்.

'நான் டாக்டருக்குப் படிக்க அமெரிக்காவிற்குச் சென்றேன். என் எண்ணம் கைகூடவில்லை. குடும்பத்தில் நடந்த சில அசம்பாவிதங்களால் என் படிப்புக் குழம்பியது. வீட்டுச் செய்திகளைக் கேட்ட பின்பு எனக்குப் படிக்கவேண்டும் என்ற அவசியமில்லாது போய்விட்டது. வீடு வந்தேன். ஆனல் என் எண்ணத்தை நிறைவுபடுத்தமுடியாது போன படியால் இந்தியா சென்றேன். அங்கு சுதேச வைத்தியம் கற்றுத் திரும்பினேன். வந்ததும் வராததுமாக மல்லிகாவின் பெற்றோர் எனக்கு அவளை மணம் முடித்துவைத்தனர். மணம் முடிக்கும் மன நிலையில் நான் இருக்கவில்லை. இருந்தும் பெரியோர் பலரின் வற்புறுத்தலுக்கிணங்க மணம் செய்துகொண்டேன், எனக்

குப் பெண்ணுக வந்த மல்லிகா மிகவும் நல்லவள். சிறந்த அழகி. அவளுடன் இன்பமாகவே வாழ்ந்து வந்தேன்.

அவளுக்கு எந்தக் குறையும் நான் வைக்கவில்லை. அப்படிக் குறையுடன் அவள் வாழ நான் விடவும் இல்லை. ஒரு நாள் நான் கொழும்புக்கு என் நண்பர் ஒருவரிடம் செல்ல வேண்டியிருந்தது.

முக்கியமான சில தகவல்களை அந்த நண்பரிடம் பெற வேண்டியிருந்ததாக அவசரமாகப் புறப்பட்டு விட்டேன். அதனுல் மல்லிகாவை அழைத்துச் செல்ல முடியவில்லை. தனித்தே சென்றேன். கொழும்பில் மூன்றே மூன்று நாள் தங்கியிருந்தேன்.

மல்லிகாவைத் தனியேவிட்டு வந்தோமே என்ற ஏக்கத்தால் ஓடோடியும் வீடு வந்தேன். வந்ததும் வேலையாள் கூறினுன்.

'ஐயா உங்களைத் தேடி ஒருவர் தினமும் இங்கே வந்து இராப் பகலாக காவலிருந்தாருங்க. அம்மாவுடன் பேசிக்கிட்டு இருந்துவிட்டுப் போவாங்க' என்று.

நான் என் மனைவியிடம் 'யாராவது என்னைத் தேடி வந்தாங்களா மல்லிகா?' என்று கேட்ட போது 'யாரும் வரவில்லை. ஒரு சில நோயாளிகள் மட்டும் வந்தனர்' என்று கூறினுள். என்மனதில் சந்தேகக் கேள்வி முளைத்தது. ஆனுல் மனைவியை வற்புறுத்தவில்லை. மீண்டும் வேலையாள் சொன்னதைக் கேட்கவில்லை.

'வேலையாள் பொய் சொல்லியிருக்கலாம் அல்லவா' என்று இடைமறித்தாள் கீதா.

'கீதா! அவன் எங்கள் வீட்டிலே நெடுங்காலமாக வேலை செய்து வருபவன் விசுவாசமானவன். பொய் சொல்ல மாட்டான். அவன் சொல்வது உண்மையோ' பொய்யோ எனத் தீர்மானிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன். ஆகவே அன்று ஒரு நாள் மனைவியிடம் கூறினேன்: 'இனிப்பத்து மணி தொடக்கம் மூன்று மணிவரை எனக்கு வேறு இடத்தில் வேலை செய்ய வேண்டியிருக்கு' என்று.

அவள் முகத்தில் உடனே சிந்தனைக் கோடுகள் படர்ந்து மகிழ்ச்சி பொங்கியது.

அவள் நடிப்பில் எத்தகைய கைதேர்ந்தவள் என்பது அடுத்த ஒரு வாரத்திற்குள் எனக்கு வெளிச்சமாகிவிட்டது. ஒரு நாள் பதினொரு மணிபோல நான் வீடு வந்தேன். இந்த அறைக்குள் அவளும் ஒரு இளைஞனும்......... கீதா! அந்த நிலை பற்றி எப்படிக் கூறுவேன்' என்று டாக்டர் கூறிய போது அவர் அழகான விழிகளிலிருந்து நீர் துளி துளியாக விழுந்து கொண்டிருந்தது.

# 15. கீதாவின் மூளை குழம்பியது!

டாக்டரின் கண்களிலிருந்து சிந்தும் நீர்த் துளிகளைப் பார்த்து. 'இந்த மனிதனுக்கும் அழத் தெரியுமா!' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள் கீதா.

டாக்டரின் அழகான விழிகளிலிருந்து வழிந்தோடிய நீரைத் துடைத்து விடவேண்டும் போலிருந்தது கீதாவுக்கு. டாக்டரே தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மேலும் கூற முற்பட்டார்.

'என் மனைவி மீது நான் வைத்த மதிப்பும், நம்பிக்கையும் என்னைப் புத்திபேதலிக்கச் செய்து விட்டது. என்னை ஏமாற்றும் என் மனைவியைப் பழிக்குப் பழிவாங்க வேண்டும் என்ற வெறி என்னுள்ளத்தில் மேலோங்கி நின்றது. மானமுள்ள எவனுக்கும் தன் மனைவி மாற்றான் ஒருவனுடன்...... அதுவுந் தன் படுக்கையறையில் களியாட்டம் நடத்துவதைப் பொறுத்துக்கொள்ளும் சக்தியிருக்காது. அந்த இடத்திலேயே இருவரையும் கண்ட துண்டமாக வெட்டிப்போட வேண்டும் என்ற வெறி. ஆனால் நான் அப்படிச் செய்யவில்லை. வந்த சுவடு தெரியாமலே வெளியேறிவிட்டேன்.

' அன்று பகல் பூராவும் வீட்டுக்கு வரவில்லை. கார் என் மனம் போன போக்கில் திசை திரும்பிக்கொண்டிருந்தது. காரின் பெட்ரோல் தீர்ந்த போதுதான் எனக்கும் மனதில் எங்கோ நிற்கிறோம் என்ற நினைவு எழுந்தது. இரவு வீட்டிற்கு வந்தேன். எப்போதும் போல இன் முகத்துடனேயே வரவேற்று உபசரித்தாள் மல்லிகா.

இரவு சாப்பாடு வேண்டாம் என்று கூறி படுக்கையில் படுத்தேன். மனம் நிம்மதிப்படவில்லை. திட்டம் ஒன்று

என்னுள்ளத்தில் உருவாகியது. நான் மேலூடு சென்று படித்தது வீணாகவில்லை. என்படிப்பும், தந்திரமும் ஒன்று சேர்ந்து ஒரு திட்டம் உருவாகியது. கட்டிய கணவனிருக்க மாற்றான் ஒருவனுடன் பட்டப்பகலில் கணவனுக்குத் துரோகம் இழைப்பவள் தன் கணவனைக் கொலை செய்யத் தயங்கவும் மாட்டாள் தானே? அப்படிப்பட்டவளுடன் கூடி வாழ்வது எப்படி? உடனேயே அதற்கோர் பரிசோதனைத் திட்டம் உருவாகியது,' என்று கூறி விட்டுச் சிறிது நேரம் மௌனமாய் நின்றார் டாக்டர்.

'மேலே சொல்வது துன்பமென்றால் நிறுத்தி விடுங்கள்' என்றாள் கீதா!

'இல்லைக் கீதா. சொல்லியே முடிக்க வேண்டும். இல்லையென்றால் என்னிதயம் வெடித்து விடும் போலிருக்கு. ஆகவேதான் இன்று இதற்கு முடிவு காணவேண்டும்' என்று கூறிவிட்டுக் கதையைத் தொடர்ந்தார்.

'என்னருகே கட்டிலில் படுத்திருந்தாள் மல்லிகா, என் முடிவைச் செயலாக்க வேண்டும் என்பதால் மனதைத் திடப்படுத்திக்கொண்டு அவளை அணைத்தேன். அவளும் ஏன் நீங்கள் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்' என்றாள். அப்பொழுது என் மூளை சுறுசுறுப்பாக இயங்கியது. 'மல்லிகா எனக்குப் புகழ்வருவதை நீ விரும்புகிறாயா?' என்றேன். 'எந்தப் பெண்தான் தன் கணவனுக்குப் புகழ் கிடைப்பதை விரும்பமாட்டாள்' என்றாள்.

'அப்படியானால் என்னைப் பிரிந்து ஒரு நாள் இருக்க வேண்டும். என்னுயிர் போய்விடும். உடல் உன்னிடம் இருக்கும் அதற்கு மீண்டும் உயிர் கொடுப்பது உன் பொறுப்பு நீ விரும்பினால் என்னைச் சாகடிக்கலாம்' என்றேன்.

'அப்படிச் செய்வேனா? நீங்களின்றி நானில்லை. எனக்கு உங்கள் நினைவின்றி வேறு என்ன இருக்கு? அத்தான் நீங்கள் சொல்வதைக் கேட்டால் எனக்குப் பயமாக இருக்கு' என்றாள்.

அவள் நடிப்பில் கைதேர்ந்தவளாயிருந்தாள். இல்லையெனில் இவ்வளவு சாமர்த்தியமாய் நடித்திருக்க முடியாது. 'மல்லிகா! இந்தப் பரிசோதனையில் என்னதான் திறமையிருந்தாலும் நீதான் முடிவை நிர்ணயிக்க வேண்டியவள். பரிசோதனை நடக்கும் பொழுது இங்கே உன்னையும் என்னையுந்தவிர யாரும் இருக்கக்கூடாது. உன்னுள்ளம் ஒவ்வொரு விநாடியும் இதே நினைவாக இருக்க வேண்டும். நான் குறிப்பிடும் நேரத்தில் ஒரு நிமிடம் பிந்தியும் என்னை உயிருடன் பார்க்க முடியாது. ஆகவே இதில் நீ பூரண வெற்றியடைவாயோ என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது என்றேன்.

'அப்படிச் சொல்லாதீர்கள். என்னவென்று விடயத்தைக் கூறுங்கள்' என்று என் கன்னத்தில் முத்தமிட்டாள்.

அவள் செயல் எனக்கு அருவருப்பை மூட்டினாலும் பொறுத்துக்கொண்டேன். 'இன்றிலிருந்து மூன்றாம் நாள் நான் இறக்க வேண்டும். ஆமாம் நான் கட்டாயம் இறந்தேயாக வேண்டும் என்றேன். அவள் எதுவும் பேசவில்லை. 'பின்பு' என்று மட்டும் கேட்டாள்' என்று நிறுத்திய டாக்டர் நெற்றியில் அரும்பிய வியர்வைத் துளியைத் துடைத்துவிட்டுக்கொண்டார்.

குழப்பம் நிறைந்த மனத்துடன் டாக்டர் என்ன கூறப் போகிறாரோ என்று எதிர்பார்த்திருந்தாள் கீதா.

'பின்பு' என்று மல்லிகா கேட்டதைக் கூறிய டாக்டர் மீண்டும் மௌனமாயிருந்தார். அவர் கூறப்போவது பெரும் அதிசயமாய்த்தானிருக்கும் என ஊகித்துக்கொண்ட கீதா அவர் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள்.

'அவள் அப்படிக் கேட்டதும் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மனதைத் திடப்படுத்திக்கொண்டே கூறினேன். மல்லிகா நாளை மறுநாள் சரியாக ஒன்பது

மணிக்கு நான் இறந்து விடுவேன். அதற்கு முன் சில ஆயத்தங்கள் செய்து வைப்பேன். நான் இறந்ததும் அடிக்கடி செய்ய வேண்டிய விடயம் பற்றி என் குரல் பேசும்' என்று டாக்டர் கூறியதைக் கேட்ட பொழுது கீதாவுக்கு பெரும் குழப்பமாகத் தோன்றிற்று. அவள் மூளையே குழம்பி விடும் போலிருந்தது.

# 16. உயிர்ப் பரீட்சை!

எதிர்பாராத சில சம்பவங்களைக் கேட்டுக்கொண்டிருக்கும் எவருடைய சித்தமும் குழப்பமடையவே செய்யும். டாக்டர் சிவகுமார் கூறுவது கற்பனைக் கதையா? நடந்த கதையா? அல்லது பைத்தியக் கதையா என்ற கேள்வியே கீதாவின் உள்ளத்தை உறுத்திக்கொண்டிருந்தது.

டாக்டர் கதையைக் கூறும்பொழுது திறமைசாலியான ஒரு நாடகக் கலைஞன் மேடையில் தோன்றி நடிப்பது போன்றிருந்தது. டாக்டர் எதையோ சிந்தித்துவிட்டு மீண்டும் தொடர்ந்து கூறினார்.

''அன்றிரவு என் மனைவி ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தாள். மறுநாள் விடிந்தெழுந்ததும் எனது பரிசோதனைக்குரிய சில பொருட்கள் வாங்கவேண்டியிருந்ததால் வெளியே சென்றுவிட்டேன். மாலையில் வீடு திரும்பியபொழுது மல்லிகா மிகவும் மகிழ்வுடன் காணப்பட்டாள். அவள் முகத்தில் என்றுமில்லாத மகிழ்ச்சி ரேகை படர்ந்தது. அவளின் முகத்தைப் பார்த்தவுடன் உள்ளக் கருத்தைப் புரிந்துகொள்ள முடிந்தபோதிலும் என் உயிருக்கு உலை வைக்கும் முயற்சியில் அவள் இறங்கமாட்டாள் என்றே எண்ணினேன். அன்றிரவு அவள் மிகுந்த வேதனை அடைபவள்போல் நடித்தாள்! ஆமாம். சுத்த நடிப்பு என்பது எனக்குப் புரிந்திருந்தது. எல்லாவற்றுக்கும் விடியட்டும் என்று பொறுத்திருந்தேன்.

அடுத்தநாள் காலை வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. என் உள்ளத்தில் இருள் சூழ்ந்தது போன்று வானம் கறுத்திருந்தது. எங்கள் படுக்கையறையை அடுத்

திருந்த அறையில், அதாவது நீ படுத்திருந்த அறையில் உபகரணங்கள் சிலவற்றைப் பொருத்திவிட்டு ஒலிப் பதிவுக் கருவியொன்றையும் வைத்தேன். அப்போது மணி ஏழு அடித்தது. மல்லிகா புன்சிரிப்புடன் என் முன் வந்து நின்ருள். அவள் கண்களில் ஒரு புத்தொளி பிரகாசிப்பதை அவதானித்தேன். அந்தக் கண்கள் ஒரு பெண்ணின் கண்களாகவே எனக்குத் தோன்றவில்லை. எவரையும் மயக்கும் அழகு அவள் கண்களுக்கிருந்தது, அவளைப் பார்க்கும் பொழுது, இவள் எனக்குத் துரோகம் செய்வாளா என்றே எண்ணத் தோன்றியது. ஆனால் என் மனதை வைரமாக்கிக் கொண்டேன். மல்லிகா அடிக்கடி மணியைப் பார்த்துக் கொண்டாள். என்னுடைய பயங்கர பரிசோதனைக்கான பலவும் ஆயத்தம் செய்துவிட்டு, மல்லிகாவைப் பார்த்தேன். அப்பொழுது அவள் கண்கள் கலங்கியிருந்தன. 'மல்லிகா' என்றேன். எனக்குத் துரோகம் செய்யப் போவதை எண்ணியோ என்னவோ அவள் அழ ஆரம்பித்து விட்டாள்.

''அழாதே மல்லிகா. எல்லாம் உன் கையில்தான். உன் கண்கள் கலங்குவதை என்னல் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. நீ ஏன் அழவேண்டும். நீ விரும்பினல் மீண்டும் என்னை உயிருடன் எழுப்பலாம். புகழ் பெறச் செய்யலாம், இதோ இந்தப் போத்தலில் இரண்டு குளிகைகள் உள்ளன. ஒன்று சிவப்பு நிறமுடையது. மற்றது பச்சை நிறமுடையது. பச்சை பெண்களுக்குரியது. சிவப்பு ஆண்களுக்குரியது. இந்தக் குளிகைகளை வெளியில் எடுத்துக் கையில் அதிக நேரம் வைத்திருக்கப்படாது. எடுத்ததும் வாயில் போட்டு விடவேண்டும். இக் குளிகைகளை நான் இந்தியாவில் இருந்தபொழுது ஒரு சித்தரிடம் பெற்றுக்கொண்டேன். இவற்றை உண்டால் நாம் இளமை மாருது இருப்பதுடன் அதிக காலம் உயிர் வாழலாம். மல்லிகா இந்தப் பரிசோதனைக்காகவே காத்திருந்தேன். பரிசோதனையில் வெற்றி கிடைத்தால்தான் வெற்றிவிழாப் பரிசாக நாம் இருவரும்


இதை உண்போம். என்றும் இளமை மாருது இன்புற்று வாழ்வோம்.''

நான் இவ்வளவும் கூறுகையில் அவள் மூளை சிந்தனைப் பிரயாணத்திலீடுபட்டிருந்தது.

''மல்லிகா! மல்லிகா!! என்று மீண்டும் அவளை அழைத்து அவள் கன்னத்தில் முத்தமிட்டேன். பின்பு ஒலிப் பதிவுக் கருவியைத் தட்டிவிடவேண்டிய முறைகளைக் காட்டினேன். மணி ஒன்பது அடிக்க ஐந்து நிமிடமே இருந்தது. மல்லிகா, நான் படுத்துக்கொண்டதும் பதி னைந்து நிமிடத்தால் இறந்துவிடுவேன். அதன்பின்பு சரியாக ஐந்து நிமிடங்கள் கழித்து ஒலிப்பதிவுக் கருவியை முடுக்கி விடு. மிகுதியை அக் கருவியில் பதிவு செய்யப்பட்ட என் குரல் உனக்கு அறிவித்துக்கொண்டே இருக்கும். சரியாகப் பன்னிரண்டு மணிக்கு இந்தப் போத்தலிலுள்ள நீரை என் வாய்க்குள் ஊற்றிவிட வேண்டும். நான் மீண்டும் உயிர் பெறுவேன். இல்லையெனில் அதுவே என் கடைசியாகி விடும். மல்லிகா, இந்தக் காம்பவுண்டுக்குள் வேலைக்கார னையே வரக்கூடாதென்று உத்தரவிட்டிருக்கிறேன். ஏன் தெரியுமா? யாராவது இருந்தால் நீ மறந்து ஒரு நிமிட மாவது எங்கேயாயினும் பார்த்துக்கொண்டு இருந்துவிட் டாலும் எல்லாம் முடிந்துவிடும். நீ என் அருகிலேயே இருக்க வேண்டும். என்னதான் அவசரமாய் யாராவது கூப்பிட்டாலும் நீ இவ்விடம்விட்டு அகலப்படாது. ஞாபக மிருக்கட்டும். என் உயிர் உன் கையில்தான்'' என்று கூறி விட்டு கட்டிலில் ஏறிப் படுத்துக்கொண்டேன்.

நான் படுத்துக்கொண்டு சரியாகப் பத்துநிமிடந்தான் இருக்கும். வெளிக் கதவை யாரோ தட்டினர். மல்லிகா எனக்குச் சமீபமாக எழுந்து வந்தாள். நான் யோகப் பயிற்சி பெற்றிருந்தபடியால் மூச்சை உள்ளடக்கிப் பிணம் போலக் கிடந்தேன்.

மல்லிகா நம்பிவிட்டாள், நான் செத்துவிட்டேனென்று அவள் உள்ளத்தில் மற்றவன்மேல் வைத்த ஆசை வெறி



''தொலைந்தான் டாக்டர்'' என்று பாஸ்கர் கூறியதும், மல்லிகாவும் சேர்ந்து சிரித்தாள்.

என் சொல்லைப் பொருட்படுத்தவில்லை. ஓடிச்சென்று கதவைத் திறந்தாள். ஒரு நிமிடத்துக்கிடையில் அந்த வாலிபனுடன் அறையினுள் வந்தாள். எனக்கு உடம்பு பற்றி எரிவது போன்றிருந்தது. அவர்களைப் பார்த்ததும் கண்களை மூடிக்கொண்டேன். எதுவுமே கதைத்ததாகத் தெரியவில்லை. மணி ஒன்பது பதினைந்து அடித்தது. இருவரும் என்னருகே நடந்துவரும் ஒலி கேட்டது.

மூச்சை உள்ளடக்கிப் பிணம்போல் கிடந்தேன். ''தொலைந்தான் டாக்டர்'' என்று அந்த வாலிபன் கூறியதும், மல்லிகாவும் சேர்ந்து சிரித்தாள். அடுத்த ஐந்து நிமிடம் கழியும்வரை மூச்சை அடக்கியிருக்க வேண்டுமென்று தீர்மானித்தேன். சில நிமிட நேரம் மௌனமாகவே கழிந்தது. பின்பு மல்லிகா கதைக்கும் குரல் கேட்டது.

''பாஸ்கர், ஒன்பது இருபதுக்கு ரேப்ரிக்காடரை முடுக்கிவிடவேண்டும்'' என்றாள்.

''இன்னும் ஒருநிமிடம் இருக்கே'' என்றான் அந்த வாலிபன்.

''ஒரு நிமிடம் முந்தித்தான் போட்டுப் பார்ப்போமே'' என்று சிரித்தபடி கூறினாள் மல்லிகா.

அதைத் தொடர்ந்து மல்லிகா ஒலிப்பதிவுக் கருவியை நோக்கிச் செல்லும் காலடி ஓசை கேட்டது காலடி ஓசை நின்றதும் ஒலிப்பதிவுக் கருவியை முடுக்கிவிடும் ஓசையும், தொடர்ந்து அது இரையும் ஓசையும் கேட்டது. ஒரு நிமிடம் வரை எந்தவித ஓசையுமில்லை.

''என்ன மல்லிகா ஒன்றும் கேட்கவில்லையே'' என்று பாஸ்கர் கூறினான். அவன் அப்படிச் சொல்லி முடிப்பதற்குள் ஒலிப்பதிவுக் கருவியில் என் குரல் ஒலிக்கத் தொடங்கியது'' என்று கூறிவிட்டு கீதாவின் முகத்தைப் பார்த்தார் டாக்டர்.

## 17. பதியைக் கொன்ற பாதகி!

கீதாவின் முகத்தை டாக்டர் பார்த்தபோது, மேலே சொல்லுங்கள் என்ருள் ஆவலுடன் கீதா.

டாக்டர் தொடர்ந்தார்.

''மல்லிகா. நீ என்னை ஏமாற்றிவிடமாட்டாயே. நான் உன் கணவன். கணவனின் உயிருக்காகக் காலனுடன் போராடிய சாவித்திரி பரம்பரையில் வந்த பெண்ணல்லவா நீ. நீ என்னை ஏமாற்றமாட்டாய். ஆனல் ... சில சந்தர்ப்பங்களில் பெண்ணுனவள் சிறு ஆசைக்கு அடிமையாகிப் பெரும் வெகுமதிகளைக்கூட இழந்துவிடுகிருள். அதுபோல நீயும் நடந்துவிட்டால் உன் வாழ்க்கையில் அளப்பரிய வாழ்வையே இழந்துவிடுவாய். கணவனில்லாத வாழ்வும் ஒரு வாழ்வா? ஆனல்...ஆனல்... என்று சுற்றிவிட்டுப் பின்பு எதுவித ஓசையுமின்றிச் சுழன்றுகொண்டிருந்தது ஒலிப்பதிவுக் கருவி.

''சுத்த மடையன்; உயிர் போய்க் கொண்டிருக்கிறது. இந்நேரம் வேதாந்தம் பேசி வைத்துவிட்டுச் சென்றுள்ளான் மல்லிகா! நாமிருவரும் நட்பு வைத்திருப்பது அவனுக்குத் தெரியாது போலும். தெரிந்தால் இந்தப் பயங்கர பரிசோதனையைத் தொடங்கியிரான். அப்படிச் செய்தாலும் இந்தக் குளிகையின் மர்மத்தை உனக்குக் கூறியிருக்கவே மாட்டான்'' என்று பாஸ்கர் கூறினுன்.

''பாஸ்கர்! அவர் ஒரு அப்பாவி! எனக்கு உண்மையைக் கூறிவிட்டார். அதேவேளையில் என்மீது நிறைந்த நம்பிக்கை உடையவர். இதுவரை நமக்கிடையே இருந்த உறவு அவருக்குத் தெரிந்திருக்க முடியாதுதான்'' என அவள் கூறினுள்.

''மல்லிகா, டாக்டரின் ஏராளமான சொத்து இனி நமக்குத்தான். டாக்டரின் பயங்கரப் பரிசோதனை அவர் உயிருக்கே உலைவைத்துவிட்டது. எங்கே அந்தக் குளிகைகள்? எடுத்துவா. நாமிருவரும் இளமை மாறாது இன்புற்றிருக்க உன் கணவனால் கொடுக்கப்பட்ட சஞ்சீவி மாத்திரைகளைக் கொண்டுவா'' என்றான் பாஸ்கர்.

மல்லிகா குளிகைப் போத்தலுடன் என் அருகே வந்தாள். என் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். அவள் இதழ்களிலிருந்து, ''டாக்டர்! உங்கள் உடைமைகளை வெறுக்கவில்லை; உங்களையும் வெறுக்கவில்லை. ஆனால், உங்களைவிட பாஸ்கரிடம் அளவற்ற அன்புண்டு. நீங்கள் இல்லாவிட்டால் பூரணமாக அவருடன் இன்பம் அனுபவிக்கலாம் அல்லவா?'' என்ற நச்சு வார்த்தைகள் உதிர்ந்தன.

என்னால் பேசமுடியாத நிலை. உடல் பிணம்போன்று காட்சியளித்தாலும், புற உணர்வுகளைக் கிரகிக்கும் சக்தி இருந்தது.

அவள் அப்படிச் சொன்ன சில நிமிடங்களில் பாஸ்கரைத் தழுவி முத்தமிட்டிருக்கவேண்டும். அவர்களின் உரையாடலும், இடையிடையே எழுந்த ஓசையும் அவர்கள் நிலையை எனக்கு உணர்த்தின. அவர்கள் பேசுவதை ரேப் ரிக்காட்டின் வேறு ஒரு நாடா பதிவு செய்துகொண்டிருந்தது. அதேவேளையில் நான் படுத்துக்கிடந்த அறையில் நடந்த விடயங்கள் அனைத்தையும் ஒரு புகைப்படக் கருவி படம் பிடித்துக்கொண்டிருந்தது.

மக்களுடைய எத்தனையோ தில்லு முல்லுகளை ஆண்டவன் படம் பிடித்துக்கொண்டிருப்பதைப்போல, மல்லிகா—பாஸ்கர் நடத்திய திருவிளையாடல்களை அவர்களுக்குத் தெரியாமல் ஒரு கருவி படம் பிடித்துக்கொண்டிருப்பதை உணர்ச்சி வெறிகொண்ட அவர்கள் உணரவில்லை.

அவர்கள் துரித கதியில் முன்னேற நானே திட்டம் வகுத்தேன். ஏன் வகுத்தேன்? ஒருவழியில் நானும் குற்றவாளியென நீர் நினைக்கலாம். ஆனால் என் நிலையில் இருக்

கும் எவனும் மல்லிகாவைக் கொலையே செய்திருப்பான். ஆனால்...ஆனால்... ஆராய்ச்சியிலேயே பலநாள் சிந்தித்துச் சிந்தித்துச் செயலாற்றிய என் சிந்தனை, கணவனுக்கு அதுவும் தன்மீது அன்பும், உயிரும் வைத்திருக்கும் கணவனுக்குத் துரோகம் செய்தவளை என்னென்னவோ செய்ய வேண்டுமென்று துடித்தது.

ஆனால், அவள்மீது நான் வைத்திருந்த பாசம் போலியாகவோ அன்றி நடிப்பாகவோ இருந்திருந்தால் அப்படி நடந்திருப்பேன். அதுமட்டுமல்ல கீதா, பல வழியாலும் நான் நொந்துபோயிருந்தபோதே பலரது முயற்சியால் மல்லிகா என் மனைவியானாள். அவள் நல்லவளாக நடித்தாள். சொந்தக் கணவனான எனக்குப் பகலில் தன் அழகு மேனியைக் காட்ட வெட்கினாள்.

ஆராய்ச்சி ஆவல் கொண்ட என்னுள்ளம் அவள் அழகைக்காணத் துடித்தன. அதற்கெல்லாம் மறுத்துவிடுவாள். அப்படிப்பட்டவள், பட்டப் பகலில் பிறந்த கோலத்துடன் பாஸ்கருடன் அந்த அறையில் இருந்ததை ஒருநாள் கண்டேன்.

''இதெல்லாம் எனது கற்பனையாயிருக்குமென்று நினைக்காதே கீதா. என் வாழ்க்கையில் வீசிய புயற்காற்றின் பற்பல வடிவங்களை நீ நம்பமாட்டாய். ஆனால் யாவும் உண்மை. இதோ பார் இந்த ஒலிப்பதிவுக் கருவியை'' என்று கூறி, அலுமாரியில் பாதுகாப்பாக வைத்திருந்த ஒரு பெட்டியைத் தூக்கி வந்து சில பகுதிகளைச் சுற்றிவிட்டு, ஒலிப் பதிவுக் கருவியின் சுவிட்சை முடுக்கிவிட்டார். அது பேசியது:

''மல்லிகா! குளிகைகள் எமக்கு டாக்டர் வெகுமதியாகக் கொடுத்த செல்வம். சாகும்பொழுதும் மனிதன் நல்லதையே செய்துவிட்டுச் சாகிறான். சரி, சிவப்பு எனக்காகச் செய்யப்பட்டது. மடையன்; தான் இளமை மாறாதிருந்து என் மல்லிகாவைக் கொத்தித் தின்ன நினைத்தான். மல்லிகா அப்படியே உன் செல்லக் கையால் என்

வாயில் போட்டுவிடு'' என்று கூறியது ஓர் ஆண் குரல். அது பாஸ்கருடைய குரல் என்பதைக் கீதா உணர்ந்து கொண்டாள்.

''பாஸ்கர், குளிகைகளை உட்கொண்டுவிட்டோம். என்னை என்றும் கைவிடமாட்டீர்களே'' என்று கெஞ்சியது பெண்குரல்.

''பைத்தியக்காரி; நான் கைவிடமாட்டேன். நீ டாக்டரை ஏமாற்றிய மாதிரி என்னையும் ஏமாற்றிவிடமாட்டாயே. ஆனால், அவன் பைத்தியக்கார டாக்டர். நான் இப்படிப் பயங்கரப் பரிசோதனை செய்யேன், ஒரு பெண்ணை நம்பி'' என்றுகூறி முடிக்கும் தறுவாயில், ''ஹ...ஹ...ஹ'' என்ற பேய்ச் சிரிப்புக் கேட்டது. அது டாக்டரின் சிரிப்பு என்பதைப் புரிந்துகொண்ட கீதா அவரைப் பார்த்தாள்.

''என் குரல்தான் கீதா. நான் ஒரு ஒலிப்பதிவுக் கருவியில் என் குரலைப் பதிவு செய்து வைத்திருந்தேனல்லவா? அது வேலையை ஆரம்பித்துவிட்டது.''

டாக்டரின் குரல் கூறியது:

''மல்லிகா! ஏமாற்றி விட்டியேடி வஞ்சகி. நீ ஒரு கொலைகாரி! உன் பக்கத்தில் நிற்பவன் ஒரு கொலைகாரன். அவன் படப்போகும் கதியைப் பார்'' டாக்டரின் குரல் ஓயுமுன்...

''ஆ...ஆ... ஐயோ... ம...ல்லி...கா'' என்று பாஸ்கரின் குரல் பரிதாபமாக ஒலித்தது.

## 18. மாயக் குளிகைகள்!

எதிர் பாராத வேளையில் இன்பமோ, துன்பமோ மனிதனைக் குழப்பமடையச் செய்யும் அசுர சக்தி படைத்தவை. அந்தவகையில் பாஸ்கருக்கு ஏற்பட்ட விபத்து என்னவாயிருக்கலாமெனக் குழம்பினாள் கீதா. அவளின் மனம் துடித்தது. டாக்டருடைய கையை இறுகப் பிடித்துக்கொண்டாள். டாக்டர் ஒலிப்பதிவுக் கருவியின் சுவிட்சைத் திருகி நிறுத்தினார். கீதாவை அணைத்துக்கொண்டார். ''பயந்து விட்டாயா? கீதா, தன்னைக் கொல்லவரும் பசுவையும் கொல்லலாந்தானே?'' என்றார்.

''ஆமாம்'' என்றாள் கீதா. அவள் குரல் வரண்டு போயிருந்தது. பயங்கரம் நிறைந்த ஆங்கிலப் படம் பார்க்கும் குழந்தைப் பிள்ளைபோல மிரண்டுகொண்டிருந்தாள்.

டாக்டர் கூறினார்:

''நான் தயாரித்து வைத்த குளிகைகள் உண்மையில் அசுரகுணம் வாய்ந்தவை. அது எனக்கு ரிஷி ஒருவரால் கொடுக்கப்பட்டதென்பது முழுப் பொய். அவைகளை நானே தயாரித்தேன். ஆனால், அவர்களை நான் கொலைசெய்யவில்லை. தாங்களே விரும்பி உண்டு தற்கொலை செய்தார்கள்.

பச்சைக் குளிகை கொஞ்சம் கொஞ்சமாகவே அவளை வதைக்கும். சிவப்புக் குளிகை உடனடியாகப் பலன் கொடுக்கும். உடம்பு முழுதும் உள்ள நரம்புகளைச் சுண்டி இழுத்து வலிக்கச் செய்யும். நிமிடத்துக்கு நிமிடம் உட்கொண்டவனைச் சித்திரவதை செய்யும். அதுமட்டுமல்ல, உட்கொண்டவனைப் பேசும் சக்தி இழக்கச் செய்துவிடும்.

அதே கதிதான் பாஸ்கருக்கு நடந்தது'' என்று கூறிவிட்டு முகத்தைத் துடைத்துக்கொண்டார்.

''மிகுதியையும் கேள் கீதா'' என்று ஒலிப்பதிவுக் கருவியை முடுக்கிவிட்டபோது, ''பாஸ்கர் என்ன நடந்தது?'' என்று மல்லிகாவின் குரல் ஒலித்தது.

''நாம்புகளை வலிக்கிறது, மோசக்காரன் டாக்டர்'' என்று பதறும் பாஸ்கரின் குரல். அதையடுத்து டாக்டரின் குரல் ஒலித்தது:

''முட்டாள்களே! என்னைக் கொலை செய்துவிட்டு இளமை மாறுதிருக்க முயல்கிறீர்களா? கனவு! வெறும் பகற்கனவு!! மோசக்காரி! கட்டிய கணவனுக்குத் துரோகம் செய்தாய். கொலைசெய்ய மாட்டாயென நினைத்தேன். நீ கொலைகாரி! கொலைக்கு நீ மட்டுமல்ல, உன் கள்ளக் காதலன்கூட உடந்தை! என்னை எதிர்த்து உயிர்வாழ முடியாது. உன் கள்ளக் காதலன் சொரிந்த அன்பு வார்த்தைகள் முடிந்துவிட்டன. அவனுக்கு இன்று அல்லது நாளை! ஆனல், உனக்கு...? ஆரம்பத்தில் உன்னை எச்சரித்தும் என்னைக் கொலை செய்ய முயன்ருய். இருவருமே தற்கொலை செய்துகொண்டீர்கள்' மல்லிகா! டாக்டர் நான். ஹ... ஹ... ஹ.'' அறையே அதிரும்வண்ணம் பேய்ச்சிரிப்பு. ஒலிப்பதிவுக் கருவியை நிறுத்தி வைத்தார் டாக்டர்.

''பின்பு மல்லிகா எதுவும் பேசவில்லையா டாக்டர்?'' என்று ஆவலுடன் கேட்டாள் கீதா.

''பேசினுள். அவள் உள்ளம் துடித்தது. உடலும் துடித்தது. ''பாஸ்கர்'' என்ருள். பாஸ்கர் பேசும் சக்தியை இழந்து ''பேப்பே...'' என்ருன். கை, கால்களை முறுக்கிக் குழறினுன்.''ஐயோ பாவி''என்று என்னை ஏசினுள் மல்லிகா. அதற்கு மேலும் பொறுமையைக் கடைப்பிடிக்க விரும்பாத நான் எழுந்தேன். இருவரும் திகைப்புற்றனர். பாஸ்கர் ஓட முயன்ருன். கதவுச் சாவியை நான் எடுத்துக்கொண்டேன். அதன்பின்பு ஒலிப்பதிவுக் கருவியை நிறுத்திவிட்டேன். அதற்கு இணைத்த சுவிட்சுடன் மற்ற ஒலிப்பதிவுக் கருவி, புகைப்படக் கருவி யாவும் இணைக்கப்பட்டிருந்தன.

''மல்லிகா! நன்றிகெட்ட நாயே! என்னைக் கொலை செய்ய முயற்சித்தாயே'' என்று உள்ளத்தில் கொதித்தெழுந்த அசுர உணர்வினுல் அவள் கன்னத்தில் 'பளீர்' என அறைந்தேன். அவள் நிலத்தில் 'தடார்' என விழுந்தாள். அதே வேளையில் என் உள்ளத்தில் விசித்திரமான ஒரு ஆசை தோன்றியது. பாஸ்கருக்குக் கொடுத்த நஞ்சுக் குளிகை உடனடியாய் அவனைக் கொலைசெய்யாதிருக்க ஒரு மாற்று மருந்து கொடுத்தேன். அவன் உடலில் ஏற்பட்ட வலிப்பு அப்படியேதானிருந்தது.

மல்லிகா மயக்கம் தீர்ந்து எழுந்தாள். அவள் தன் பொன்னுடலை வெளிச்சத்தில் எனக்கு என்றுமே காட்டியதில்லை. அப்படிப்பட்டவள் பாஸ்கரோடு பகலில் நிர்வாணமாய் நின்றதைப் பார்த்தநாள்முதல் அவளை அவமானப் படுத்தவேண்டுமென்று எண்ணினேன்.

உடனே அவளது ஆடைகளையெல்லாம் களைந்து பிறந்த கோலத்துடனேயே விட்டேன். நான் அப்போது மனிதனுக நிற்கவில்லை. என் உணர்ச்சிகள் ஒரு பயங்கர ஓநாயின் உணர்ச்சிபோல வெறிபிடித்திருந்தன. மல்லிகா கெஞ்சினுள். என் காலைப் பிடித்தாள். ஆனுல், திட்டத்தின் ஆரம்பப்படிதானே அது. அதன்பின்புதான் அவள் என் சொற்படி நடக்க முனைந்தாள். சிலநாட்களில் பாஸ்கரும் இறந்துவிட்டான். மல்லிகாவும் இறந்துவிட்டாள். ஆனுல், அவ் விடயத்தை வெளியிடவில்லை. சும்மா கதை கட்டி விட்டேன். அவளை ஓர் பாதாள அறையில் பூட்டிவிட்டேன். சிலவேளை அவர்களின் ஆவிதான் இப்படியான ஜாலங்கள் செய்கின்றனவோ தெரியவில்லை'' என்று கூறி நிறுத்திய போது கீதாவின் பூவுடல் நடுங்கியது.

# 19. காதல் மயக்கம்

'கீதா! நான் கொலைகாரன் என்று நீ என்னை வெறுத்தால் கூறி விடு. இல்லையென்றால் நான் உன்னை ஏற்றுக் கொள்கிறேன்.'—பயந்து நடுங்கியபடியே நின்றிருந்த கீதாவிடம் இப்படிக்கூறி நிறுத்தினார் டாக்டர்.

'நீங்கள் நல்லவர் டாக்டர். சாதாரணமாக எந்த மனிதனும் உங்களைப் போன்று நடந்திருக்க முடியாது தான். நீங்கள் உங்கள் திறமையைப் பரிசோதனையாக்கி இருக்கிறீர்கள்' என்று கூறி அவர் மார்பில் சாய்ந்தாள் கீதா.

அவளை இறுக அணைத்துக் கொண்டார் டாக்டர். அந்த அணைப்பில்தான் எத்தனை சுகம். எத்தனை இன்பம். கீதாவின் உள்ளத்தில் பயத்திற்குப் பதில் இன்ப வெறி கிளர்ந்தெழுந்தது. உள்ளத்தில் கட்டுண்டு உறங்கிக் கிடந்த உணர்ச்சிகள் படமெடுக்கும் நாகம்போலச் சீறின. டாக்டரும் அவள் மனமறிந்து நடக்கும் கருவியானார். பல காலத்தின் பின் அவ்வறை இன்ப விளையாட்டின் இரகசியங்களைக் கண்டு மெய் சிலிர்த்து மௌனியாய் நின்றது.

ஆசை, உணர்ச்சிக்கு வெறியாகி விட்டால் வெட்கம் வருவதில்லை. பெண்மைக்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு அத்தனையும் பதுங்கி ஒழிந்து விடும். ஆண்மைக்கும் பெண்மைக்குமே போட்டி. அப்போட்டியின் வெற்றி தோல்வி அவரவர் உடலமைப்பைப் பொறுத்தது. ஆனால் டாக்டர் சிவகுமார் உடலியல் பற்றிய சகல அம்சங்களையும், நரம்புகள், உணர்ச்சிகள் பற்றிய பல இரகசியங்களையும் மனித வர்க்கத்தை எப்படி ஆட்டிப் படைக்க முடியுமோ அப்படிப்பட்ட ஒவ்வொரு மகோன்னதமான



கீதாவை இறுக அணைத்துக்கொண்டார் டாக்டர் சுகுமார்.

முடிவுகள்பற்றியும் இந்தியாவில் பயிற்சிபெற்றபோது படித்திருந்தார்.

கீதாவின் பெண்மை மலர்ந்தபோது அவள் உள்ளத்திலிருந்த பய உணர்ச்சி அத்தனையும் இன்ப லாகிரியில் இறங்கி விட்டது. இணையுள்ள ஜோடியாக டாக்டர் அவளுடைய இன்பத்துக்குக் கிடைத்த போது பூரணத்துவம் அடைந்த ஓர் தாம்பத்திய உறவு நிலையில் அவள் பேசா மடந்தையானாள். அவள் உள்ளத்தில் அப்போது வேறு நினைவேயில்லை. பகல்பொழுது என்ற நினைப்பைக் கூட மறந்து விட்டனர். உணர்வுகள் ஓடு மட்டும் ஓடி ஓய்ந்த போது கீதாவை வெட்கம் பிடுங்கித் தின்றது. டாக்டர், மல்லிகாவிடம் எதை எதை எதிர்பார்த்தாரோ அதை எல்லாம், தான் வாரி வழங்கி விட்டதை எண்ணியபொழுது டாக்டரை தன்னுடையவராக்கிக் கொண்ட பெருமை அவள் உள்ளத்தில் மிளிர்ந்தது.

அன்றைய பகற்பொழுது எப்படிக் கழிந்தது என்றோ, அன்றைய பகல் உணவு கொள்ளவில்லையென்றோ எண்ணம் இல்லை. மதுவுண்ட வண்டாகக்களிப்பில் மூழ்கி இருந்தனர்.

இரவும் வந்து மணி ஏழாகி விட்டது. வேலைக்காரனின் குரல் கேட்ட பின்பே டாக்டர் விழிப்புற்றார். அதன் பின்புதான் அவ்வளவு நேரம் கீதாவுடன் ஐக்கியமாகி விட்டதை எண்ணி விசனப்பட்டார். அப்போதைய நிலையில் கீதா, டாக்டர் என்ன சொன்னாலும் செய்யச் சித்தமாய் இருந்தாள். அவள் கண்கள் சிவந்து போய் ஜொலித்தன.

டாக்டரின் கண்களை நேருக்கு நேர் சந்திக்க வெட்கப்பட்டாளாயினும் அறையில் தெரிந்த வெளிச்சத்தில் அவர் தென்படவில்லை. முன்பக்க ஹோலில் எரிந்து கொண்டிருந்த விளக்கின் ஒளியே அந்த அறையில் தெரிந்தது. டாக்டர் எழுந்து கதவை நோக்கிச் சென்றவர் கீதாவைத் திரும்பிப் பார்த்தார். அவருடைய கண்கள் இரண்டும் இருட்டில் நாய்களின் கண்கள் எப்படி

ஜொலிக்குமோ அதுபோல ஜொலிப்பதைக் கண்டாள். அவளுக்கு அப்போது இருந்த நிலையில் என்னவென்றே கூற முடியாத ஒரு சோர்வு தோன்றிற்று.

இரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டு படுக்கைக்குச் சென்றனர். இரவு பத்து மணி இருக்கும். டாக்டரும் கீதாவுடன் ஒன்றாகவே படுத்திருந்தார். அன்று பகல் பூரா அனுபவித்த இன்ப சுகத்தால் அவர்களிடையே மிகுந்த நெருக்கம் காணப்பட்டது. டாக்டர் அவளை மனைவி ஸ்தானத்தில் வைத்துக் கொண்டார். பல பல இரகசியங்களை எல்லாம் இருவரும் கதைத்துக் கொண்டே இருந்தனர். கதை கேட்டுக் கொண்டே கீதா தூங்கி விட்டாள். நாவாந்துறையிலிருக்கும் மாதா கோயில் மணி ஒலித்தபோது கண் விழித்த கீதா தன்னருகில் டாக்டர் இல்லாதிருப்பதை உணர்ந்தாள். விடியற்காலை ஐந்து மணியிருக்கலாம். டாக்டர் எங்கே போயிருக்கலாம் என்பதை அறியும் ஆவலுடன் எழுந்து வெளியே போகப் புறப்பட்டாள். அறைக் கதவு பூட்டப்பட்டிருந்தது. மற்றும் வேளையாய் இருந்தால் அவள் பயந்து இருப்பாள். ஆனால் அன்று அவள் பயப்படவில்லை. கதவைத் தட்டினாள். சில நிமிடங்களின் பின்பு கதவு திறக்கப்படும் ஒலி கேட்டது. மின் விளக்கின் ஒளியில் டாக்டர் நின்ற நிலையில் அவர் கையில் வைத்திருந்த பொருளும் அவள் உள்ளத்தில் அச்சத்தைத் தோற்றுவித்தன. அவள் ஏதும் பேசாது நிற்கவே டாக்டர் திரும்பி நடந்தார். கீதா அவரைப் பின் தொடர்ந்தாள். அவருடைய பரிசோதனை அறையில் வேலைக்காரக் கிழவனும் நின்றான்.

அங்கே சென்ற டாக்டர் செய்த செயல்களைப் பார்த்த கீதாவுக்கு உடல் நடுங்க ஆரம்பித்தது. உடனே அவள் தனது அறைக்குத் திரும்ப எத்தனித்தாள். பரிசோதனை அறையைக் கடந்ததும் சுருளியப்பன் வருவது தெரிந்தது. அவனுடைய கையில் ஒரு பெட்டி இருந்தது. அந்தப் பெட்டிக்குள் என்ன இருக்குமென்றறிய அவனைப் பின்


தொடர்ந்து பரிசோதனை அறைக்கு வெளியே நின்று அவதானித்தாள். சந்தேகம் இல்லாமல் அவன் கொண்டு வந்து கொடுத்தது ஒரு விஷப் பாம்பு என்று அறிந்து கொண்டாள்.

டாக்டர் பாம்பைத் தூக்கி ஒரு கோப்பையின் அருகில் கொண்டு சென்று, ஒரு ஆயுதத்தை எடுத்து பாம்பின் நச்சுப் பற்களுக்கிடையில் வைத்து தலையில் அமத்தினர். அது விஷம் கக்க ஆரம்பித்தது. அக் கோரக் காட்சியைக் கண்டு கீதாவின் பூவுடல் மீண்டும் நடுங்க ஆரம்பித்தது.

# 20. பாழடைந்த மண்டபம்

டாக்டரும் கீதாவும் காதல் மயக்கத்தில் ஈடுபட்டிருந்த அதே வேளையில், டாக்டரின் வளவிற்குள் பின்புறம் உள்ள காடுபோன்ற பகுதியில் சுருளியன் பாம்பு பிடிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தான். புற்று ஒன்றை ஆழமாக வெட்டினான். அந்தப் புற்றில் பாம்பு இருக்கும் என்ற நம்பிக்கை அவனிடம் இருந்தது. நெற்றியால் வியர்வை வழிந்தது. அவன் முயற்சி வீண் போகவில்லை. சீற்றத்துடன் புற்றைவிட்டு வெளியேறியது பாம்பு. அப்படிப்பட்ட ஒரு நாகத்தை இதுவரை அவன் கண்டதே இல்லை.

அவன் களைத்துப்போய், சோர்வுற்றிருந்தமையால் பாம்பை மடக்கிப் பிடிக்கத் தவறி விட்டான். புல் பூண்டுகள், புதர்கள் நிறைந்த அப்பகுதியில் பாம்பு ஓடத் தொடங்கியதும், அதைப் பின்தொடர்ந்தான். வளைந்து வளைந்து ஓடிய பாம்பு எங்கோ மறைந்து விட்டது. அவன் பாம்பைத் துரத்திச் சென்ற திசையில் ஒரு வாய்க்கால் குறுக்கிட்டது. மழை காலத்தில் கடலுக்கு நீர் செல்லும் வாய்க்கால் அது. நீர் நிறைந்திருந்தது. அதற்கு அப்பால் காட்டுப் பிரதேசம்போல் ஒரே அடர்ந்த மரங்கள். நடுவில் ஒரு பாழடைந்த மண்டபம். இதைப் பார்த்த சுருளியப்பனின் மனதில் பெரும் வியப்பு மேலிட்டது. அதே வேளையில், அந்தப் பாழ் மண்டபத்தில் ஏதாவது பொருட்கள் இருக்கலாம் என்ற ஓர் நப்பாசையும் எழுந்தது. உடனே தண்ணீரைக் கடந்து அக்கரை சென்றான்.



சுருளி கதவைத் திறந்ததும் உள்ளே கண்ட காட்சி
மெய்சிலிர்க்க வைத்தது.

உண்மையில் அந்த இடம் பயங்கரமாகக் காட்சி அளித்தது. கட்டிடம் பார்ப்பதற்கு விகாரமாகத் தோன்றியது. அதற்கு அருகே நின்ற இரண்டு தென்னை மரங்களிலிருந்து பறவைகள் கீச்சிட்டு ஒலித்தன. நான்கு புறத்திலுமிருந்து நானுவித ஒலி எழும்பியது. கொசுக்கடி உயிரையே போக்கிவிடும் போலிருந்தது. புற்களிடையே கருமை நிறைந்த கற்கள், பார்ப்பதற்கே பீதி ஊட்டுவதாய் இருந்தன. அடிமேல் அடி வைத்து கட்டிடத்திற்கு கிட்டச் சமீபித்ததும் வாசலில் இருந்த மணலில் ஒரு கால் அடையாளம் பார்ப்பதற்கே பயங்கரமாக இருந்தது. அந்த அடையாளம் பார்ப்பதற்குக் காலின் தோற்றமாக இருந்தாலும் விரல் அடையாளம் இருக்கவில்லை. ஒரே ஒரு அடையாளம் மட்டும் தென்பட்டதால் அதைப்பற்றி அவன் கவலைப்படவில்லை.

மண்டபத்திற்கு கதவு இருந்தது. கூரைகள் முறிந்து தொங்கிக் கொண்டிருந்தன. அவன் கை வைத்ததும் மேலே இருந்த வௌவால் கீச்சிட்டுப் பறந்தது. அவன் கைகள் கிடுகிடுவென நடுங்கின. மெதுவாகக் கதவைத் தள்ளினுன். உள்ளே அவன் கண்ட காட்சி மெய் சிலிர்க்க வைத்தது. பார்த்ததும் பார்க்காததுமாக வந்த வழியே திரும்பி ஓடலானுன். அவன் ஓடும்பொழுது தன்னை யாரோ துரத்தி வருவது போன்ற உணர்வு ஏற்படவே 'டாக்டர் டாக்டர்' என்று கத்தியவாறே விரைந்து ஓடினுன். தண்ணீர் வாய்க்காலைக் கடந்து தென்னந் தோப்புவரை வந்து விட்டான். வேலைக்காரக் கிழவனை வீட்டுக்கு பின் விருந்தையில் கண்டபோதுதான் அவன் உள்ளத்தில் தெம்பு பிறந்தது. கிழவனைச் சமீபித்ததும் அவன் அப்படியே மூர்ச்சித்து விழுந்தான். அவனுக்கு மூர்ச்சை தெளிவிப்பதற்குள் வெளியே 'ஜீப்' வண்டியின் இரைச்சல் கேட்டது. கிழவன் முன்பக்கம் சென்று பார்த்தான். இன்ஸ்பெக்டர் அருள்நாதனுடன் வேறு இரு கான்ஸ்டபிள்களும் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

கிழவனுக்கு சமீபத்தில் வந்ததும் 'டாக்டர் நிற்கிருரா?' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

'ஆமாங்க' என்று கூறிவிட்டு உள்ளே திரும்பினுன் கிழவன்.

'சே! என்ன மனிதர்கள்! டாக்டராயிருந்தும் இப்படிக் கீழ்த்தரமான வேலை செய்கிருர்களே! இவர்களை விட்டு வைக்கவே கூடாது' என்று இன்ஸ்பெக்டர் கூறியதைக் கிழவன் கேட்டுக் கொண்டே டாக்டரிடம் சென்ருன். ஆனல் இன்ஸ்பெக்டர் கூறியதை அறையிலிருந்து கேட்டவாறே வெளியே வர ஆயத்தமான டாக்டர் தன்னை ஏதோ ஆபத்து எதிர்நோக்குவதாக உணர்ந்து தயங்கினுர்.

## 21. பயங்கர டாக்டர்

இன்ஸ்பெக்டரின் திடீர் வருகை டாக்டருக்குச் சந்தேகமளித்தது. அவர் கூறிய வார்த்தைகள் ஏதோ குற்றச்சாட்டைத் தன் மீது சுமத்துவதற்கு ஆயத்தமாக இருக்கிறார் என்பதையும் உணர வைத்தது. அவற்றை வெளியே காட்டிக் கொள்ளாமல் இன்ஸ்பெக்டரை வரவேற்றார்.

'டாக்டர், அடிக்கடி உங்களுக்குத் தொந்தரவு தருவதற்காக மன்னிக்க வேண்டும். டாக்டர் மோஸஸ்பற்றி சில தகவல்கள் கிடைத்துள்ளன. அதுபற்றி ஆராய்வதற்கு உங்கள் துணை வேண்டியிருக்கிறது' என்று இன்ஸ்பெக்டர் அருள்நாதன் கூறியபோது டாக்டரும், வேலைக்கார கிழவனும் நிம்மதி அடைந்தார்கள்.

'டாக்டர் மோஸஸ்பற்றி உங்களுக்கு என்ன சந்தேகம் ஏற்பட்டது? தீர்த்து வைக்க நான் தயார்' என்றார் சிவகுமார்.

'சந்தேகம் மட்டுமல்ல, டாக்டருடைய உதவியாளனே புகார் செய்துள்ளான். அதாவது எந்நேரமும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் டாக்டர் தன் தீவிர முயற்சியினால் ஒரு புதிய கண்டுபிடிப்பு நடத்தியுள்ளாராம். அதாவது ஒருவருடைய மூளையை எடுத்து மற்றவருக்கு வைக்கும் திறமை பெற்றிருக்கிறாராம். அவரது முயற்சிகளுக்கு இலக்கானவை இரு நாய்களாம். அத்துடன் பல சட்ட விரோதமான காரியங்களுக்கெல்லாம் இவர் திட்டமிட்டாராம். கீதா என்ற பெண்ணை அதாவது சோமசுந்தரத்தின் மகளை ஏதோ மயக்க மருந்து கொடுத்து தமது

திட்டத்தைச் செயல்படுத்த ஆரம்பித்தாராம். அதற்கிடையில் அந்தப் பெண்ணைத் தெய்வாதீனமாகப் பாம்பு கடித்து விட்டதாம். அதுமட்டுமல்ல டாக்டர், இங்கே நடைபெறும் இரத்தப் பிசாசு நாடகங்களுக்கெல்லாம் டாக்டர் மோஸஸ்தான் மூலகர்த்தாவாய் இருக்கலாம் என்றும் ஐயுறுகின்றான். தகுந்த ஆதாரமின்றி டாக்டர் மோஸஸ் அவர்களைக் கைது செய்ய முடியாது. ஆகவே தான் தங்களைக் கலந்து ஆவன செய்யலாம் என நினைக்கிறேன்' என்று கூறினார் அருள்நாதன். டாக்டர் சிவகுமார் எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தார். அவர் இன்ஸ்பெக்டரின் கதையைப் பற்றித்தான் சிந்தித்திருக்க வேண்டும். ஏனெனில் இன்ஸ்பெக்டருடைய கூற்று அவரைச் சிந்திக்க வைத்து விட்டது.

'இன்ஸ்பெக்டர், இதில் ஓரளவு உண்மை இருக்கலாம். மனித உறுப்புக்கள் பலவற்றுக்கு இல்லாத சிறப்புச் சக்தி மூளைக்கு உண்டு. மூளையை மாற்றுவதன் மூலம் ஒருவரின் நடவடிக்கைகளின் செயற்பாட்டை மாற்றி அமைக்க முடியும் என்றே நம்புகிறேன். ஆனால் அந்தத் திறமை டாக்டர் மோஸஸிற்கு உண்டாவென்பதே சந்தேகம்' என்று தனது அறிவியல் விளக்கத்தைக் கூறினார்.

'டாக்டர், உங்கள் சந்தேகம் தவறானது. டாக்டர் மோஸஸ் ரஷ்யாவில் ஐந்து வருடகாலம் மருத்துவப் பயிற்சி பெற்றவர். அப்பொழுது முதல் அவர் ஆராய்ச்சித் துறையிலேயே தனது கவனத்தைச் செலுத்தி வந்திருக்கிறார். அவரது 'லபோறட்டரி'யில் புது விதமான 'அப்பறேற்றஸ்' எல்லாம் இருக்கிறது. இராப் பகல் என்று பாராது இடைவிடாத ஆராய்ச்சி நடத்தி வருகிறார். ஆகவேதான் நானும் அவர் மீது சந்தேகப்படுகிறேன்' என்றார் இன்ஸ்பெக்டர்.

'மிஸ்டர் அருள்நாதன், நாங்கள் ஒருதரம் அங்கே சென்று பார்ப்போம் இரகசியப் பொலிசாரை நிறுத்தி அவரைக் கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்.

வேண்டுமானுல் அவரது லபோறட்டரியில் நடைபெறும் விடயங்களைக் கிரகிப்பதற்கு ஆக வேண்டிய உதவிகளைச் செய்து தருகிறேன்' என்ருர் டாக்டர் சிவகுமார்.

'நான் ரெடி. டாக்டர் மோஸஸ் வீட்டிற்குப் புறப் படுவோமா?' என்று எழுந்தார் இன்ஸ்பெக்டர். அவரைத் தொடர்ந்து டாக்டர் முதலானேரும் சென்றனர்.

அவர்கள் சென்றபின் வேலைக்காரக் கிழவன் பின் விருந் தையில் விழுந்து கிடந்த சுருளியனைப்பற்றி நினைத்தான். அவன் என்ன நிலையில் இருக்கிருன் என்பதை அறியச் சென்ருன். அங்கே கீதாவிடம் சுருளியன் ஏதோ பேசிக் கொண்டிருந்தான். அவன் கூறுவதை மறைந்து நின்று கேட்ட கிழவனின் மனதில் பல்வேறு விதமான உணர்வுகள் தோன்றின. இடுகாட்டில் சந்தித்த எலும்புக் கூட்டைப் பாழ் மண்டபத்தில் அவன் கண்டதாகக் கூறியபோது, வேலைக்காரக் கிழவன் அசந்தே போனுன்.

கீதாவும் அதே எலும்புருவத்தைச் சந்தித்திருக் கிருள். அவ்வெலும்புருவம் தன்னுடன் கதைத்ததையும் அவள் மறக்கவில்லை. அதுவும் தன் தந்தையின் குரலில். சில வேளை தந்தையே தனக்குப் பிசாசு உருவில் உதவி வருவதாக நினைத்தாளோ என்னவோ, நானும் அதைப் பார்த்தேன். இன்று அதைப் பார்க்க வேண்டும் என்று கூறியபோது வேலைக்காரக் கிழவனுக்கு உதறல் எடுத்தது. எங்கே எஜமானி தன்னையும் அழைத்து விடுவாளோ என்று பயந்து அந்த இடத்தை விட்டு ஓடிப்போய் விட் டான்.

சுருளியனுடைய கதையைக் கேட்டபோது, கீதாவின் உள்ளத்தில் ஆவல் தளிர் விட்டது. பயந்த சுபாவமுள்ள கீதாகூட துணிவு பெற்று விட்டாள்!

'சுருளி! நீ கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள். நான் இதோ வந்து விடுகிறேன்' என்று கூறி விட்டு முன்பக்கம் வந்து வேலைக்காரக் கிழவனைத் தேடினுள். கிழவன் எங்கே போயிருப்பான் என்று யோசனையில் ஈடுபட்டவாறே அறையில் கட்டிலில் போய் இருந்தாள்.

கட்டிலில் படுத்திருந்தவளின் மனம் பல்வேறு சிந்தனைகளில் ஈடுபட்டிருந்தது. டாக்டர் உண்மையிலேயே ஒரு புதுவித மனிதர்தான். இல்லையெனில் இத்தகைய துணிகர முயற்சிகளில் ஈடுபட முடியாது என்று எண்ணியபொழுது டாக்டர் மோஸஸின் ஞாபகம் வந்தது. அவள் கண்முன் டாக்டர் மோஸஸ் பயங்கர மனிதனுகத் தோன்றினுர். அவரைப்பற்றி இன்ஸ்பெக்டர் அருள்நாதன் கூறிய விபரங்கள் அவள் உள்ளத்தில் சுழன்று மிதந்தன. மனிதர்கள் மூளையையும் மாற்றி அமைக்கும் வல்லமை உடைய ஒரு டாக்டரையும் கடவுள் மனித உருவில் படைத்து விட்டுள்ளாரே என்று எண்ணியபொழுது அவள் உள்ளத்தில் டாக்டர்கள் கருணை உள்ளவர்கள் என்ற ஞாபகம் தலைதூக்கியது. நல்ல முறையில் உலகம் அவரைப் போற்றித் துதிக்கும். விழாக் கொண்டாடும். பட்டங்கள் வழங்கும். உலகப் புகழ் மேதைகளில் ஒருவராக மோஸஸ் விளங்குவார். ஆனுல் அதே வேளையில் அவர் ஈனத் தொழில் புரிய முயன்ற காரணத்தால் அவரைச் சிறையிலடைக்க இன்ஸ்பெக்டர் ஆயத்தங்கள் செய்வதை எண்ணிப் பரிதாபப்பட்டாள். அதே வேளையில் தன்னையும் அதே திட்டத்திற்குள்ளாக்க மோஸஸ் திட்டமிட்டதை எண்ணிய பொழுது அவள் தலை சுற்றியது. அந்த அறையே சுழன்று கொண்டிருப்பது போன்ற பிரமை ஏற்பட்டது. அந்த சுழற்சியினூடே தாடி, மீசையுடன் பயங்கர மனிதனுக டாக்டர் மோஸஸ் சிரித்துக் கொண்டு நிற்பது தெரிந்தது. தலையைக் கரங்களால் அமத்திப் பிடித்துக்கொண்டே படுத்து விட்டாள் கீதா.

## 22. அசுர உருவம்!

டாக்டர் மோஸஸ் வீட்டிலுள்ள டிஸ்பென்ஸறியில் உட்கார்ந்து 'பைல்' கட்டுகளைப் புரட்டிக் கொண்டிருந்த போது இன்ஸ்பெக்டரும், டாக்டரும் உள் நுழைந்தார்கள். 'உட்காருங்கள்' என்று கூறிவிட்டுத் தாடியை உருவி விட்டபடி ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார், டாக்டர் மோசஸ். நிமிர்ந்து பார்த்து விட்டு தலையை ஆட்டிய படியே 'என்ன காரணம் பொலிசாரும் டாக்டரும் விஜயம் செய்துள்ளீர்கள்?' என்று நகைச்சுவையாகக் கேட்டார்.

'மன்னிக்க வேண்டும் மிஸ்டர் மோஸஸ். உங்களைப் பற்றிப் பல பெட்டிசன்கள் வந்திருக்கின்றன. அதுபற்றி விசாரித்துப் போகலாம் என்று வந்துள்ளோம்' என்ருர் இன்ஸ்பெக்டர்.

'டாக்டர் சிவகுமார் எப்போ பொலிஸில் சேர்ந்தார்' என்று விஷமமாகக் கேட்டார் மோஸஸ்.

'வைத்திய விஷயமாக உங்களைக் கலந்தாலோசிக்கையில் அவரது உதவி எங்களுக்குத் தேவை என்பதால் தான் கூட்டி வந்துள்ளோம்' என்ருர் இன்ஸ்பெக்டர்.

'யெஸ்...யெஸ் அவர் அமெரிக்கா சென்று வந்தவரல்லவா?' என்று மோஸஸ் கூறியபொழுது அதிலே ஒரு ஏளனம் தொனித்தது.

'மிஸ்டர் மோஸஸ், நீங்கள் மூளை மாற்று வித்தை பயின்றவராய் இருக்கலாம். ஆனல், ஒன்றை மறந்துவிடக் கூடாது. உங்களில், உங்களுக்கு நம்பிக்கை இருந்தாலும் பிறர் விடயத்தில் நீங்கள் தவறி விடுகிறீர்கள். எனக்கும் உங்களுக்கும் ஒரு கேஸ் சம்பந்தமான விடயமிருக்கிறது. அதை அறிந்து போக வந்தேன்' என்று சிவகுமார் கூறியதும்

மோஸஸ் அசந்து போய் விட்டார். பின்பு சமாளித்துக் கொண்டே 'முதலில் உங்கள் விடயத்தைக் கூறுங்கள்' என்றார்.

'மிஸ் கீதாஞ்சலி சோமசுந்தரம் இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு அதாவது, புதன்கிழமை மிஸஸ் பார்வதி சோமசுந்தரத்திடம் மூவாயிரம் ரூபாய் வாங்கினீர்களே ஏன்?' என்றார் சிவகுமார்.

மோஸஸ் திகைத்து விட்டார். அப்படியொரு கேள்வியை அவர் எதிர்பார்க்கவில்லை. உடனே அவர் எதுவும் கூற மறுத்து விட்டார். சில நிமிடங்களின் பின்பு, 'மிஸ்டர் சிவகுமார், நான் அவர்களிடம் மூவாயிரம் ரூபா வாங்கவில்லை. ஏன் கீதாவைப் பரிசோதிக்கச் சென்ற பொழுதுகூட 'பீஸ்' வாங்கவில்லை' என்றார்.

'மிஸ்டர் மோஸஸ், நீங்கள் பொய் கூறுகிறீர்கள். நீங்கள் பணம் பெற்றதை நான் நிரூபிக்க முடியும். அந்தப் பணம் நீங்கள் பெற்றுக் கொண்டது மிஸ் கீதாவைக் கொலை செய்வதற்காக என்பதை நான் நிரூபிக்கப் போகிறேன். அதுமட்டுமல்ல, கீதா பாம்பு கடித்து இறக்கவில்லை' என்று அவர் கூறிக் கொண்டிருக்கையில் இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டார்.

'பிளீஸ் இன்ஸ்பெக்டர், முழுவதையும் கேளுங்கள். பாம்பு விஷம், கீதாவின் உடலில் ஏற்றப்பட்டிருக்கலாம். அந்த விஷம், டாக்டர் மோஸஸினால் கீதாவின் உடலில் செலுத்தப்பட்டது. அதற்குக் கூலியே மூவாயிரம் ரூபாய் பணம்'.

'வண்டர்புல் இமாஜினேஷன் மிஸ்டர் சிவகுமார்' என்றார் டாக்டர் மோஸஸ்.

'கற்பனை இல்லை மிஸ்டர் மோசஸ். கீதாவின் உடலைக் கொண்டே நிரூபிக்கப் போகிறேன். இன்ஸ்பெக்டர் இவருடைய டயரியில் நான் குறிப்பிட்ட நாளில் எழுதப்பட்

டிருப்பதை எடுத்துப் பாருங்கள்' என்று டாக்டர் சிவ குமார் கூறியதும், இன்ஸ்பெக்டர் எழுந்தார். அதற்கிடை யில் துள்ளி எழுந்த மோஸஸ் பக்கத்திலிருந்த ஒரு விசையை அமுக்கினர். அடுத்த நிமிடம் அந்த அறையில் நீண்ட பற்களும், வளர்ந்த நகங்களும் கொண்ட ஒரு அசுர உருவம் இன்ஸ்பெக்டர், டாக்டர், சப் இன்ஸ்பெக் டர் ஆகியோர் உட்கார்ந்திருந்த இடம் நோக்கி வந்து கொண்டிருந்தது.


# 23. மர்ம நிழல்!

எதிர்பாராத ஆபத்தில் மாட்டிக்கொண்டுவிட்ட மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர். இன்ஸ்பெக்டர் திருநாவுக்கரசன் கைத் துப்பாக்கியை உருவினார். அதைக் கவனித்த டாக்டர் சிவகுமார் கண்ஜாடை காட்டிவிட்டு, டாக்டர் மோசஸ் நின்ற இடத்திற்குத் தாவினார். அடுத்த கணம் டாக்டர் மோசஸ் முகத்தில் பளீர் என ஒரு அறை விழுந்தது. மோசஸ் தடுமாறியதும், அந்த மின் விசையை அமுக்கித் திருகவும், அக்கணமே அந்த அசுர உருவம் திரும்பி நடக்க ஆரம்பித்தது.

''இன்ஸ்பெக்டர், நில், நில்'' என்று கத்தினார். அடுத்த கணம் 'டுமீல், டுமீல்' என்ற வேட்டுச் சத்தம். அந்த அசுர உருவம் தடால் என நிலத்தில் சாய்ந்தது. டாக்டர் மோசஸ் எப்படியோ மாயமாய் மறைந்து விட்டார். அக்கணமே பொலிஸ் கோஷ்டியினர் சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்தனர்.

''டாக்டர், இதென்ன? கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாய் இருக்கிறதே'' என்றார் அருள்நாதன்.

''டாக்டர் மோசஸின் ஆராய்ச்சியில் இதுவும் ஒன்று. மூளையை மாற்றிய ஆப்பரேஷனில் இதுவும் ஒன்று. இந்த மனிதனுடைய மூளையில், அவன் சிந்திக்கும் பகுதியை எடுத்துவிட்டு, ஏதோ மிருகத்தின் மூளையை வைத்துவிட்டு, மின் விசையால் அவனை அடக்கியாளப் பயிற்றுவித்துள்ளார் போலும்! இவனுடைய உடல் வளர்ச்சிக்கு அவன் எதைப் பற்றியும் சிந்திக்காதிருப்பதே காரணமாயிருக்கலாம். இவனது உடலை இரசாயனப் பகுதிக்கு அனுப்பி வையுங்கள்.



இன்ஸ்பெக்டர், டாக்டர் மோசஸ் மேல் தாவினர்.

இது டாக்டருடைய டிஸ்பென்சரியே தவிர, அவருடைய மறைவிடம் வேறுண்டு. வெகு சீக்கிரத்தில் அதையும் தெரிந்துகொள்ளலாம்'' என்று கூறிவிட்டு எழுந்து நடந்தார் டாக்டர்.

பொலிசாரை டிஸ்பென்சரிக்குக் காவல் போட்டுவிட்டு மற்றவர்களும் கிளம்பினர்.

''டாக்டர் இந்த மர்மமெல்லாம் உங்களுக்கெப்படித் தெரியும்? இதற்கெல்லாம் ஆதாரம் எப்படிக் கிடைத்தன?'' இன்ஸ்பெக்டர் ஆவலுடன் சிவகுமாரை வினவினர்.

''இன்ஸ்பெக்டர்! பலர் பல குற்றங்களைச் செய்து விட்டு, பொலிசாருக்கு மட்டுமன்றி, நீதிக்கும் தப்பி வாழ்கிறார்கள். அவர்கள் நல்லவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கையில், அவர்களால் சீரழிக்கப்பட்ட எத்தனையோ ஜீவன்கள் துடித்துக்கொண்டு வாழ்கின்றன. கீதாவின் சொத்துக்களைச் சூறையாட அவள் சிற்றன்னை சதிசெய்தாள். அபலை கீதா அவர்கள் கொடுமைக்குப் பலியானாள். ஆனால், நீதி தூங்கவில்லை இன்ஸ்பெக்டர். சட்டம் அவர்களுக்கெதிராகத் தன் கரங்களை நீட்டாவிட்டாலும், நீதி பிறர் கண்ணுக்கு அநீதி உருவில் அவர்களோடு விளையாடுகிறது. இருந்து பாருங்களேன். முழு விடயமும் அம்பலமாகப் போகிறது'' என்று கூறிச் சிரித்தார்.

டாக்டர் எப்படிச் சிரித்தாலும் அவருடைய உள்ளத்தின் ஆழ்ந்த கவலை, அவர் முகத்தில் பிரதிபலித்தது.

கட்டிலில் கிடந்த கீதா அங்கு சிவகுமார் வந்ததைக் கூடத் தெரிந்துகொள்ளவில்லை. அவளது கரத்தைப் பற்றியதும், ''டாக்டர்'' என்று பதறியவாறு துடித்தெழுந்தாள்.

''என்ன கீதா? ஏன் பயப்படுகிறாய்?''

''ஒன்றுமில்லை. டாக்டர் மோசஸைப் பற்றி நினைத்தபடியே படுத்திருந்தேன், அதுதான்....''

''பயப்படாதே! டாக்டர் மோசஸ் இனி வெளியே தலைகாட்ட முடியாது. அவருடைய தில்லுமுல்லுகள்

யாவும் வெளியாகிவிட்டன. உன் சொத்துக்கள் யாவும் உன்னை வந்து அடையப்போகின்றன. உன் சித்தியும், தம்பியும் கம்பி எண்ணப்போகின்றனர்'' என்று கூறியதும், கீதா வியப்புடன் டாக்டரைப் பார்த்தாள்.

''என்ன அப்படிப் பார்க்கின்றாய்? உன்னை டாக்டர் மோசஸ் உதவியினால்தான் சாகடித்தாள் உன் சிற்றன்னை. உண்மையிலேயே நீ இறந்து பலநாட்களாகிவிட்டன. ஆனால் நீ இறக்கவில்லை என்பதை ருசுப்படுத்த வேண்டும். அதுதான் கஷ்டமான காரியம் ஆனாலும் பயப்படாதே, விரைவில் முடிவுகாலம் வரும். அதற்கிடையில் இன்னொரு முக்கியமான காரியம் இருக்கிறது'' என்று கூறிவிட்டு, டாக்டர் அலுமாரியைத் திறந்து எதையோ குடைந்து, குடைந்து தேடினார்.

அப்பொழுது. பாழ் மண்டபத்தில் எலும்புருவத்தைச் சுருளியன் பார்த்த விடயம் கீதாவுக்கு நினைவுக்கு வரவே, டாக்டரிடம் கூறினாள். முதலில் திகைத்துவிட்டார் டாக்டர். பின்பு, ''அப்படியானால் போய்ப் பார்த்துவருவோம்'' என்று புறப்பட்டார்.

சுருளியன் கூறியது முற்றிலும் பொய் என்பது அங்கு போன பின்புதான் தெரிந்தது. உள்ளத்தைக் கலக்கும் பயங்கரமான இடந்தான் அந்த மண்டபம். கீதா டாக்டரை அணைத்தபடியே யாவையும் பார்த்தாள். அதே வேளையில் டாக்டர் மனைவியின் ஞாபகம் அவள் மூளையில் நிழலாடியது. ''அது சரி, உங்கள் மனைவி மல்லிகாவை எங்கே வைத்துள்ளீர்கள்?'' என்று ஒரு கேள்வியைக் கீதா கேட்டாளோ இல்லையோ, டாக்டரின் முகம் விகாரமாக மாறிவிட்டது. கீதா பயந்தே போய்விட்டாள், வீடு போகும் வரை இருவரும் ஒன்றும் பேசவில்லை.

டாக்டரின் மனதைப் புண்படுத்திவிட்டோமே என்ற மனவேதனை கீதாவுக்கு. மனைவியின் ஞாபகம் டாக்டருக்கு ஏற்படும் பொழுது, அவர் மனிதனாகவே இருப்பதில்லை. இதை அறிந்து கீதா, டாக்டருடன் எதுவுமே பேசவில்லை,

இரவு கீதாவும், டாக்டரும் படுக்கையில் படுத்த படியே ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக்கொண்டனர். கணவன், மனைவி சண்டை படுக்கையில்தானே சமரச மாகிறது.

★

உடல் யாவும் கறுப்பு அங்கியால் மூடப்பட்ட ஒரு உருவம் இருளோடு இருளாக விரைந்து சென்றுகொண் டிருந்தது. டாக்டர் சிவகுமார் வீட்டின் பின்புறத் தோப் பில் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு சென்ற அவ் வுருவம் பல நாட்கள் பழக்கப்பட்டது மாதிரி விரைந்து சென்றுகொண்டிருந்தது. நீர்க் கால்வாயைக் கடந்து சுருளியன் பார்த்த பாழ் மண்டபத்திற்குச் சென்றது. அங்கே நிலத்தில் பரவப்பட்ட மணலைத் தோண்டி ஒரு பெட்டியை எடுத்துக்கொண்டது. அதன் பின்பு நேரடியாக அப்பெட்டியுடன் டாக்டரின் பரிசோதனை அறைக்குச் சென் றது. அந்த அறையின் பின்புறக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தது. அங்கே ஒரே இருள். அந்த இருளி னூடே உருவம் என்னசெய்ததோ யார் கண்டார்கள்? உரு வம் அந்த அறைக்குள் பிரவேசித்த சொற்ப நேரத்திற்குள் கீதா ஏதோ சத்தம் கேட்டு விழித்துக் கொண்டாள்.

பரிசோதனை அறையில் 'கிறீச் கிறீச்' என்ற ஒலி தெளி வாகக் கேட்டது.

''டாக்டர், அந்த ஒலி என்ன தெரியுமா?'' என்றாள் கீதா.

''என்னவாயிருக்கும்?''

''அதுதான் எலும்புருவம். அது எங்கப்பாவாயிருக்கும் டாக்டர். போய்ப் பார்க்கலாமா?''

''பைத்தியக்காரி, எலும்புக்கூடு உன் அப்பாவா?''

"அன்று என்னுடன் அது பேசிற்றே" என்ருள் கீதா.

"ஏதோ என் அதிர்ஷ்டம் தப்பிக்கொண்டாய்! அலட்டாமல் தூங்கும்" என்று கூறினர் டாக்டர்.

ஆனல், கீதாவுக்கு எப்படியாவது எலும்புருவத்தைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை எழுந்தது. ஏனெனில், "டாக்டர் சிவகுமாரிடம் போ" என்று கூறியது அந்த உருவந்தானே? அவள் தந்தையின் குரலில் கூறியதே. ஆகவே பலரும் பயந்து நடுங்கும் எலும்புக் கூட்டைக் காணக் கீதா துடியாய்த் துடித்தாள்.

சில நிமிடங்களுக்கிடையே டாக்டர் தூங்கிவிட்டார். ஆனலும் எலும்புக்கூட்டைப் பற்றிய நினைவு கீதாவின் உள்ளத்தை விட்டகலவில்லை. அப்போதும் சத்தம் கேட்டுக்கொண்டேயிருந்தது. அடிமேல் அடிவைத்து கதவண்டை சென்றுவிட்டாள் கீதா. அவள் மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு டாக்டரின் பரிசோதனை அறையை நோக்கி நடந்தாள். அறைக் கதவுகள் மட்டுமன்றி, யன்னல்கள் யாவும் நன்கு பூட்டப்பட்டிருந்தன. எப்படிப் பார்ப்பது என்பதே அவள் நினைவு. உள்ளம் படக்படக்கென அடித்துக்கொண்டது.

அறையின் உள்ளே சில நிமிட நேரத்தில் நிசப்தம் நிலவியது. ஆனல் அறையினுள் சிவப்பு நிறத்தில் மங்கலாக வெளிச்சம் தெரிந்தது. அவ்வெளிச்சம் எலும்புருவத்தினல் தான் வந்திருக்குமென எண்ணிய கீதாவுக்கு உள்ளே எப்படிப் பார்ப்பது என்ற பிரச்சினைதான்! அவளுடைய மூளை தீவிரமாக வேலைசெய்தது. உடனே கதவடிக்குச் சென்ருள். கதவிலுள்ள திறப்புத் துவாரத்தினுள் கண்ணை வைத்து உள்ளே நோக்கினள். சிவப்பு நிறமன்றி, வேறு எதுவும் தெரியவில்லை.

சில விநாடிகளின் பின்பு ஏதோ நிழல் அசைவது தெரிந்தது. அந்த நிழலின் அசைவு என்னவாயிருக்கும் என எண்ணிய கீதா விழிகளைக் கூர்மையாக்கிக் கொண்

டாள். அடுத்தகணம், வீரிட்டுக் கதறிய சத்தம் அந்தப் பிராந்தியத்தைக் கிடுகிடுக்க வைத்ததுடன், நித்திரையில் கிடந்த டாக்டரையும் எழுப்பிவிட்டது. டாக்டர் வந்து பார்த்த போது, கீதா கதவடியில் அறிவற்ற நிலையில் பிணம் போலக் காணப்பட்டாள்.


## 24. அழுகிய அழகி கொலை!

**காலை** விடிந்தும் கீதாவுக்கு சுயஉணர்வு வரவில்லை. அவள் அடிக்கடி ஏதோ பிதற்றினாள். டாக்டர் அவள் நிலையைக் கண்டு கண்ணீர் சிந்தினார். அதே வேளையில், சுருளியன் ஓடோடி வந்து கூறிய செய்தியைக் கேட்ட போது, டாக்டரின் உள்ளம் ஒருபுறம் மகிழ்ச்சியையும், மறுபுறம் கவலையையும் அடைந்தது!

சுகுமாரின் வீட்டிற்குள் டாக்டர் மோசஸ் புகுந்து, அவனை விரட்டினாராம். மனைவி, அவள் தாய்வீடு சென்றிருந்தாள். ஆகவே தனித்திருந்த சுகுமாரை மோசஸ் மிரட்டிக் கொண்டிருந்த போது, அங்கே ஏதோ நடக்கக் கூடாதது நடந்துவிட்டதாம். சுகுமாருடன் ஒரு பெண்ணும் சுடப்பட்டு இறந்துவிட்டாளாம். ஆனால், டாக்டர் மோசஸ் எப்படியோ தப்பிக்கொண்டார். இந்தச் செய்தியைப் பல இடங்களில் பலவாறாகக் கேள்விப்பட்டுப் பின் தொகுத்து ஒழுங்காகக் கூறிவிட்டான் சுருளியன்.

அதே வேளை, வேறு ஒரு அறையில் தீவிர சிந்தனையில் ஈடுபட்டிருந்தார் டாக்டர் மோசஸ். அவருடைய உள்ளம் தன்னால் சுடப்பட்ட அப்பெண் மீது லயித்திருந்தது. அவருக்கு அவளைப் பற்றிய சிந்தனையாகவே இருந்தது.

அவள் யார்? எப்படி அங்கு வந்தாள்? அழுகிய உடலுடன் நிர்வாணமாக, பார்க்கவே பயம் தரும் அந்த உருவம்! எப்படி அவளால் தெருவழியே வர முடிந்தது? மோசஸ் பயங்கர ஆராய்ச்சியெல்லாம் செய்தவர். அப்படிப் பெண்ணையோ, ஆணையோ விஞ்ஞான சக்தியால் குறிப்பிட்ட எல்லைக்குள் நடமாட வைக்க முடியுமென்று தெரிந்



விடிந்தும் கீதாவுக்கு சுய உணர்வு திரும்ப வில்லை. சுகுமார் கவலையுற்ருர்.

தவர். ஆனால் அவள் சுகுமாரின் ஆளாக இருக்க முடியாது. அவளைக் கண்டபோது சுகுமாரே நடுங்கினானே. அப்படியானால் அவள்? ? ?

மயக்கம் தீர்ந்து எழுந்த கீதாவை மார்புடன் அணைத்தவாறே விடயத்தை அறிய முற்பட்டார் சிவகுமார். அவள் தான் கண்ட காட்சியைக் கூறினாள். நிர்வாணப் பெண் ஒருத்தி ஆடி அசைந்து வந்ததைக் கண்டுவிட்டே, தான் அப்படி மயங்கியதாகக் கூறினாள். அதே வேளையில் டாக்டருக்குப் போன் அழைப்பு வந்தது.

எதிர்ப்புறமிருந்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் அழைத்திருந்தார்.

''ஹலோ அருள்நாதன்! பெரிய அதிசயமான விடயங்களெல்லாம் நடந்ததாக அறிந்தேன். உண்மைதானா?'' என்றார் டாக்டர்.

''ஆமாம் டாக்டர்! உடனே வாருங்கள். பல விடயங்களை உங்களிடமிருந்து நாங்கள் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது.''

''ஆல் ரைட் இன்ஸ்பெக்டர்'' என்று கூறிப் போனை வைத்துவிட்டுப் புறப்பட ஆயத்தமானார் சிவகுமார்.

பொலிஸ் நிலையத்தில் சிவகுமாரை வரவேற்று நடைபெற்ற விடயங்களைக் கூறிய அருள்நாதன், பொலிஸ் சுப்ரிண்டன் தலைமையில் விசேட பொலிஸ் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவிருப்பதாகக் கூறினார். அத்துடன் டாக்டர் மோசஸின் மோசடிகளை ஒழித்துக்கட்ட அவரை ஒத்துழைக்கும்படியும் வேண்டினார் இன்ஸ்பெக்டர்.

நிர்வாணப் பெண்ணுடையபிரேதமும், சுகுமாரின்பிணமும் பொலிஸ் நிலையப் பரிசோதனை அறையில் வைக்கப்பட்டிருந்தது. அப்பெண் எப்படி இறந்தாள் என அறிய ஆவல்பட்டார் சிவகுமார். அவருடைய விருப்பப்படியே அழைத்துச் சென்றார் இன்ஸ்பெக்டர்.

அவளுடைய கண்களில் குறி தவறாமல் சூடு விழுந்திருக்கிறது. இரு கண்களும் சிதைந்து, முகம் விகாரமாய்க்

காட்சியளித்தது. அந்த உடலில் துர்மணம் வீசிக்கொண்டிருந்தது. கண்களை இறுக மூடிக்கொண்டார்.

''இன்ஸ்பெக்டர்! டாக்டர் மோசஸ் வெளிநாடு புறப்பட ஆயத்தமானாலும் ஆகிவிடுவார். உடனே புறப்படுங்கள். நான் இடத்தைக் காட்டுகிறேன்'' என்றார் டாக்டர்.

ஆயுதம் தாங்கிய பொலிஸ் கோஷ்டியுடன் டாக்டர் சிவகுமாரும், இன்ஸ்பெக்டரும் புறப்பட்டனர். டாக்டர் ரஞ்சிதத்தின் மருத்துவமனையை அடுத்த, ஒரு பழங்காலக் கட்டிடத்திற்கு முன்பாகப் பொலிஸ் வண்டி வந்து நின்றதும், டாக்டர் ரஞ்சிதம் எட்டிப்பார்த்தாள். சிவகுமாரைக் கண்டதும், ரஞ்சிதம் சிரித்தவாறே கண்ணைக் காட்டினாள்.

உடனே பொலிசார் ரஞ்சிதத்தின் மருத்துவ மனைக்குள்ளால் சென்று பின்புறமாகச் சுற்றிவந்து பழைய கட்டடத்தினுள் நுழைந்தனர். அங்கே பொலிசார் சென்றடைந்ததும் வீட்டினுள் ஏதோ பொருட்கள் இரைவதும், பின் வெடிப்பதுமாகச் சத்தம் கேட்டன. கதவைப் பலவந்தமாகத் திறந்துகொண்டு எல்லோரும் உள்ளே சென்றனர். உள்ளே டாக்டர் மோசஸ் குற்றுயிரில் கிடந்தார். திராவகம் நிரம்பிய போத்தல்கள் சில வெடித்துச் சிதறியிருந்தன.

இன்ஸ்பெக்டரை அருகில் அழைத்து, சிவகுமாரையும் வரும்படி அழைத்தார். கீதா எப்படிக் கொலை செய்யப்பட்டாள் என்ற விபரமடங்கிய ஒரு 'பைல்' மேசை லாச்சியில் இருப்பதாகக் கூறிவிட்டு, நிர்வாணப் பெண்ணைப் பற்றிப் பேச்செடுத்ததும், உயிர் அவர் உடலைவிட்டுப் பிரிந்துவிட்டது.

மேசை லாச்சியைத் திறந்து அவர் கூறிய பைல்கட்டை எடுத்தார் இன்ஸ்பெக்டர். ஒவ்வொரு பெயர் குறிக்கப்பட்ட பைல்கள் அதனுள் இருந்தன. அத்தனையும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன. ஆனால், உடனடியாக கீதா

சம்பந்தப்பட்ட விடயத்தைப் படிக்கும்படி வேண்டினார் சிவகுமார்.

கீதா என்ற பெண்ணைக் கொலை செய்தால் ஐயாயிரம் ரூபா தருவதாக திருமதி சோமசுந்தரம் கூறியதும் நான் இணங்கவில்லை. உடனடியாக மூவாயிரம் ரூபா தந்து, எதுவிதமான சந்தேகத்திற்கும் இடமின்றி, அவளைக் கொன்றுவிடவேண்டுமென்று வேண்டினாள். அதற்கு உபாயமாகப் பாம்பு விஷத்தைப் பல்லினால் குற்றி ஏற்றினேன். அன்று அவளுக்கு ஏற்கனவே தேநீருடன் தூக்கமாத்திரை கொடுக்கப்பட்டிருந்தது. ஆகவே, அவள் பாம்பு கடித்து இறந்தாள் எனக் கதையும் கட்டிவிடப்பட்டது. இவ்விடயம் டாக்டர் சிவகுமாருக்குத் தெரிந்துவிட்டதாக நினைக்கிறேன்'' என எழுதப்பட்டிருந்தது.

சிவகுமார், இன்ஸ்பெக்டரைப் பார்த்து சிரித்தார். ''ஏன் டாக்டர் சிரிக்கிறீர்கள்?'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''படித்த மனிதர்களும் சிலவேளை முட்டாள்களாகி விடுவதுண்டல்லவா?''

''அதே போன்று நடந்து கொண்டார் டாக்டர் மோசஸ். பாம்பு விஷமேற்றப்பட்டது நித்திரையில். அதுவும் தூக்க மருந்து கொடுக்கப்பட்ட பின்பு. இதனால் கீதா உயிர் பிழைக்க முடிந்தது'' என்றார்.

''வாட்! வாட் யூ சே! டாக்டர்?'' என்று ஆச்சரியப்பட்டார் இன்ஸ்பெக்டர்.

''ஆமாம் இன்ஸ்பெக்டர். இவர்களுடைய திட்டம் எனக்கு முன்பே தெரிந்துவிட்டது. டாக்டர் மோசஸ், தன் நண்பனான சுகுமாருக்குக் கீதாவைக் கொலை செய்யும் விடயம் பற்றித் தொலைபேசியில் கூறுகையில், ரஞ்சிதம் கேட்டிருக்கிறாள். உடனே எனக்கு அறிவித்தாள். நான் கீதாவைக் காப்பாற்றிவிட்டேன்.''

''டாக்டர்'' என்று அவர் கரங்களைப் பற்றினார் அருள்நாதன். ''நான் சில உண்மைகளை உங்களிடம் கூறப் போகிறேன். ஆனால், நான் செய்த உதவிகளுக்கு நீங்கள்

எனக்கு உதவிசெய்வதாக வாக்களிக்க வேண்டும் இன்ஸ் பெக்டர்'' என்றார் சிவகுமார்.

''உங்களுக்கில்லாத உதவியா டாக்டர்? நீங்கள் பொலிஸ் இலாகாவுக்கே நன்மதிப்புத் தேடித் தந்திருக்கிறீர்கள். உங்களுக்கு வெகுமதிகூடக் கிடைக்கும் டாக்டர்!''

''வெகுமதி வேண்டாம் இன்ஸ்பெக்டர். தொல்லை ஏற்படாதிருந்தால் போதும். நான் தான் கீதாவைக் காப்பாற்றினேன்'' என்று டாக்டர் கூறியபோது, இன்ஸ்பெக்டர் திகைத்துவிட்டார்.

# 25. டாக்டரின் டயறி!

இன்ஸ்பெக்டர், டாக்டர் சிவகுமாரையே பார்த்துக் கொண்டிருந்தார். சிவகுமார் தலையைக் குனிந்துகொண்டு மீண்டும் கூற ஆரம்பித்தார்.

"இன்ஸ்பெக்டர், இந்த விடயத்தில் நான் சட்டத்திற்கு முரணான சில வேலைகளில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால், அது ஒரு உயிரைக் காப்பாற்றுவதற்காகச் செய்ததேயன்றி, வேறு அல்ல. கீதாவை இவர்கள் கொலை செய்யத் திட்டம் போட்டதும், அதில் ஏதும் நடவடிக்கை எடுத்தால் கட்டாயம் கீதா மரணமடைய நேரிடும் என்று எனக்குத் தெரியும். ஆகவே, பாம்பு விஷத்தினால் பாதிக்கப்பட்ட கீதாவுக்கு பாதுகாப்பளிக்க எனக்குத் தெரிந்த முறைகளைக் கையாண்டேன்."

பாம்பு கடித்தவர்கள் விரைவில் இறப்பதில்லை. ஆகவே பிணம் புதைக்கப்பட்ட பின்பு, அப்பிணத்தை எடுத்துச் சிகிச்சையளித்துக் காப்பாற்றினேன். கீதாவின் மரணச் சடங்கிலன்று அவளுக்கு மலர்வளையம் வைத்து, மரியாதை செய்யச் சென்ற ரஞ்சிதத்திடம் ஒரு வகை மூலிகையைக் கொடுத்து, அந்தப் பெட்டிக்குள் ஒருவருக்குந் தெரியாதபடி போட்டுவிடும்படி கூறினேன். அந்த மூலிகை அவளைக் காப்பாற்றிவிட்டது! பின்பு அவள் வீட்டிற்கு அவளை அனுப்பிவைத்தேன். அவளை ஏற்கமறுத்து, ஏதோ பேய், பிசாசுக் கதைகளை எல்லாம் கதைத்தனர்.

அதன் பின் கீதா என்வீட்டிற்கு வந்தாள். அங்கு இன்ஸ்பெக்டர் திருநாவுக்கரசனை அழைத்துச் சென்று விஷயத்தை அம்பலமாக்க எண்ணினேன். ஆனால், நாங்கள்

வீடு சென்ற சமயம் கீதாவைக் காணவில்லை. அந்தக் கதை பிசாசுக் கதையாகவே முடிந்துவிட்டது.

பின்பு கீதா வந்தாள். எப்படி வந்தாள் என்பது எனக்கே தெரியாது. இப்போது என் வீட்டில்தான் இருக்கிறாள். அவள்தான் கீதா என்பதற்கு ஆதாரங்களுமுண்டு. உடனடியாக நடவடிக்கை எடுங்கள் இன்ஸ்பெக்டர். இடு காட்டில் நாங்கள் பிணம் பார்த்தபொழுது காணப்பட்ட பிணம் வேறு. அது வேறு ஒரு புதைகுழியிலிருந்து எடுத்து வைக்கப்பட்டது. ஆனால், அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகள் எப்படி நடந்ததோ இறைவனுக்குத்தான் தெரியும்'' என்று கூறிய டாக்டர், முகத்தைத் துடைத்துக் கொண்டே, ''இன்ஸ்பெக்டர்! கீதாவின் சொத்துக்களை அபகரிக்கவே திருமதி சோமசுந்தரம் இந்தக் கொலைக்குத் திட்டமிட்டாள். ஆனால், இனிக் கீதாவின் சொத்துக்களை அடையாமலிருக்கமாட்டாள். ஆனால், கீதா சொத்துக்களை அடைய விரும்பவும் மாட்டாள். அந்தச் சொத்துக்களை அவள், தன் தங்கைக்கே சென்றடைய உயில் எழுதிவைத்திருக்கிறாள்'' என்று கூறி நிறுத்தினார்.

''ஆல்ரைட் மிஸ்டர் சிவகுமார்! ஆனால், திருமதி சோமசுந்தரத்தின் மீது நடவடிக்கை எடுக்கஆதாரமாகப் போதிய சாட்சியங்களில்லை. மோசஸ் ஆத்திரத்தின் பேரில் இப்படி எழுதிவைத்திருக்க முடியுமல்லவா? என்று கேள்விஎழும். இருப்பினும் நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளுகிறேன்'' என்று கூறினார்.

★

டாக்டர் சிவகுமாரின் வீட்டில் அவர் மனைவி மல்லிகாவையே வெறிக்கப் பார்த்துக்கொண்டு நின்றாள் கீதா. அவளுக்கு உள்ளத்தில் பல்வேறு கேள்விகள் அலைமோதிக் கொண்டிருந்தன. மல்லிகாவின் படத்தைப் பார்த்த பொழுது, முதல் நாள் இரவு தான் கண்ட நிர்வாணப் பெண்ணுக்கும் அந்தப் படத்திற்கும் வித்தியாசம் இருப்ப

தாக அவளுக்குத் தெரியவில்லை. அதை டாக்டரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்று எண்ணிக்கொண்டு நிற்கையில் டாக்டர் அங்கு வந்து சேர்ந்தார். நடந்தவற்றையெல்லாம் டாக்டர் கீதாவிடம் கூறிமுடித்தார். அவர் கூறிமுடித்ததும், "நான் உங்களிடம் ஒன்று கேட்கிறேன், ஒளிக்காது பதில் கூறுங்கள்" என்று கேட்டாள் கீதா.

"கேள் கீதா, கூறுகிறேன்" என்ருர் டாக்டர்,

"உங்கள் மனைவி மல்லிகா உண்மையிலேயே இறந்து விட்டாளா?"

"ஆமாம்!"

"எப்போது?"

"நேற்றிரவு!"

"டாக்டர்!" அந்தரப்பட்டுக் கத்தினுள் கீதா.

"பயப்படாதே கீதா. நேற்று இரவு டாக்டர் மோசஸ் அவர்களால் சுடப்பட்டு இறந்துவிட்டாள்."

"அவள்தான் நிர்வாணப் பெண்ணு?"

"ஆமாம்! அவளைத்தான் நேற்றிரவு நீ கண்டு பயந்திருக்கிருய். உனக்கு நான் கூறிய கதையின் முடிவில் சில மாறுதல்கள் உண்டு. முழுவதும் கூறவேண்டிய கட்டம் நெருங்கிவிட்டது. பொய்யும், மெய்யும் கலந்து உன்னைப் புதைகுழியில் இருந்து மீட்ட கதையை இன்ஸ்பெக்டரிடம் கூறிவிட்டு வந்திருக்கிறேன். நீ மிகுதியையும் தெரிந்து கொள்ளவேண்டிய நிலையிலிருக்கிருய். இதோ..." என்று கூறியவாறு அலுமாரியைத் திறந்தார். அங்கே மறைவிடத்தில் வைக்கப்பட்டிருந்த டயறியை எடுத்துக் கீதாவிடம் நீட்டினுர். கீதா அதைப் பெற்றுக்கொண்டு டாக்டரைப் பார்த்தாள்.

"கீதா! நடைபெற்ற சகல சம்பவங்களும் இந்த டயறியில் உண்டு. படித்து உண்மையைத் தெரிந்து கொள். எனது லட்சியம் நிறைவேறிவிட்டது. என் அன்னையும், சகோதரிகளும் இறக்கக் காரணமாயிருந்தவனைப் பழி வாங்கி, அவன் குடும்பத்தை ஒழிக்க நான் திட்டமிட்டேன்.




டாக்டர் சுகுமார் கொடுத்த டயறியை கீதா ஆவலுடன் படிக்கத் தொடங்கினுள்.

அது நிறைவேறிவிட்டது. இனி நான் சிறை செல்லவும் தயங்கேன். ஆனால் என் எதிரி உனக்கும் எதிரிதான். உன்னை நான் வெறுக்கவில்லை. உன் வாழ்வைக் கெடுத்த சுகுமார் ஒழிந்தான். அவனால்தான் என் குடும்பமே ஒழிந்தது. அவனைப் பழிவாங்க நான் காத்திருந்தேன். ஆனால், அவன் நண்பனான மோசஸ் அவனைப் பழி தீர்த்துவிட்டான். மல்லிகாவும் இறந்தாள். நான் இனி இறந்தாலும் பரவாயில்லை'' என்று கூறிவிட்டு, கதவை இறுகப் பூட்டிவிட்டுக் கட்டிலில் பொத்தென்று விழுந்தார்.

களைப்பின் காரணத்தால் கட்டிலில் விழுந்தவர் அப்படியே படுத்துக்கொண்டார். டயறியைப் படிக்கும் ஆர்வத்தில் டயறியின் இதழ்களைப் புரட்டினாள். 'கீதா' என்ற பெயர் காணப்பட்டது. படிக்க ஆரம்பித்தாள்.

''எனது நண்பர் சோமசுந்தரத்தின் மனைவி தனது மூந்தியதாரத்து மகள் கீதாஞ்சலியைக் கொலை செய்ய டாக்டர் மோசஸின் உதவியை நாடினாள். அவரும் இசைந்தார். தான் எப்படி கொலைசெய்ய உத்தேசித்திருக்கிறார் என்பது பற்றியும், அதற்கான முன்னேற்பாடுகளையும் செய்துள்ளார். அந்த முன்னேற்பாடு எனக்குக் கீதாவைக் காப்பாற்றும் வசதியைத் தந்தது. பாம்பு விஷம் ஏற்றிக் கீதாவைக் கொலை செய்யும் பொருட்டுத் தூக்க மாத்திரை கொடுத்துக் கீதாவைத் தூங்க வைப்பது தான் ஏற்பாடு.

மறுநாள் என்னை அழைக்க அவர்கள் திட்டமிட்டாலும், தூக்கமாத்திரை உண்டவளை விஷத்தை முறிக்க மருந்து கொடுத்தாலும் எழுப்பிவிட முடியாது என நினைத்தனர். ஆனால், நான் முன்னேற்பாடாகக் கொழும்பு செல்வதாகக் கூறியதும், நான் இல்லாத நேரம் தங்கள் வேலையை நடத்தத் திட்டமிட்டிருப்பதாயும் சுகுமாருக்கு டாக்டர் மோசஸ் தொலைபேசியில் கூறியிருக்கிறார். இச்செய்தியை ரஞ்சிதம் எனக்கு அறிவித்தாள்

டாக்டர் ரஞ்சிதத்தை மோசஸின் பழைய வீட்டிற்கு அருகில் குடியிருத்தியது, அவரது நடவடிக்கைகளைக் கண்டறியவே. டாக்டர் மோசஸ் எப்படியும் பணம் சம்பாதிக்க வேணுமென்ற நோக்குடையவர். அவருடைய நண்பனுன சுகுமார் என் தங்கையை ஏமாற்றியவன். அந்த ஒரு காரணத்தால் என் குடும்பமே அழிந்தது. அவன் கீதாவையும் ஏமாற்றியவன். இப்பொழுது கீதாவின் கொலையைப்பற்றி அறிந்ததும், டாக்டரிடம் பங்கு கேட்டானும். ஆகவே, நான் கொழும்பு போவதாகக் கூறிவிட்டு எப்படியும், கீதாவைக் காப்பாற்றத் திட்டமிட்டேன்.''

மறுபக்கத்தைப் புரட்டினுள் கீதா. அவளை அவளாலேயே நம்பமுடியவில்லை.

டயறியைப் படிக்க முற்பட்டாள் கீதா. ''திட்டமிடப்பட்டபடி கீதாவைக் கொலைசெய்துவிட்டு, என்னிடம் ஆள் அனுப்பினர். நான் ஊரில் இல்லை என்றதும் பாம்பு கடித்து கீதா இறந்துவிட்டதாக ஊரை நம்பவைத்தனர். என்னுடைய முன்னேற்பாட்டின்படி கீதாவின் பிணம் இருந்த பெட்டியில் நான் கொடுத்த மூலிகையை ரஞ்சிதம் எப்படியோ போட்டுவிட்டாள். அந்தச் செய்தியை அறிந்ததும் எப்போ இரவு வருமென்று காத்திருந்தேன்.

நான் எதிர்பார்த்திருந்த இரவு வந்தது. ஆனுல், மறுநாளே கீதாவைக் காப்பாற்ற முடிந்தது. நான் வேலையாள் என்று வீட்டில் வைத்திருந்த ராம்சிங், பெயர் பெற்ற மந்திரவாதி. நான் இந்தியாவிற்குச் சென்ற சமயம் அவனிடம் எனது நிலையை அறிவித்து, எனது திட்டம் வென்ருல் பத்தாயிரம் ரூபா தருவதாகக் கூறி அழைத்து வந்தேன்.

இந்தியாவிலிருந்து வந்ததும் வராததுமாக எனக்குத் திருமணப் பேச்சு நடைபெற்று, திருமணமும் நடந்தது. இக்காரணத்தினுல் என் மனத்திலிருந்த பழிவாங்கும் நினைவு குறைவுற்றது. ஆனுல், என் மனைவியே என்னைப் பழிதீர்க்க முனைந்த போது, நான் மிருகமாக மாறினேன். அதன் பய

ளுக நடந்ததே பயங்கரப் பரிசோதனை. அந்தப் பரிசோதனை யில் என் மனைவியை நான் கொல்லவில்லை. ராம்சிங்கின் உதவியுடன் அவளது இயக்கங்களை மருந்துகளின் உதவி யுடன் நிறுத்திவைத்து எனது பயங்கரத் திட்டத்திற்கு உதவியாக்க நினைத்தேன்.

பெரிய பெரிய ரிஷிகளெல்லாம் கந்தமூலங்களையும், மூலிகைகளையும் உண்டு பன்னெடுங்காலம் ஊண், உறக்க மின்றி இருந்ததை நாம் நம்ப முடியாதிருந்த போதும்,அனு பவ ரீதியாக நம்பமுடிகிறது. அப்படியே மல்லிகாவை ஒரு தனி அறையில் அடைத்து வைத்தோம். நாம் இடும் கட் டளைகளை அவள் தடையின்றிச் செய்வாள். அது முடிந்த தும் அவள் இயக்கங்கள் ஓய்ந்துவிடும். நினைத்தவேளை, அவளுருவை மறைக்கவும், வேறு பொருளாக மாற்றவும் ராம்சிங் தனது மந்திர சக்தியை உபயோகித்தார். அவ ருடைய கட்டுப்பாட்டிலேயே மல்லிகாவை விட்டுவைத் தேன். ஆனால் அதற்கிடையில் கீதா விடயத்தில் தலையிட நேர்ந்தது.

கீதா, தாய் தந்தையற்ற பெண். அவளைக் காப்பாற்று வது என் நண்பன் சோமசுந்தரம் எனக்குச் செய்த உதவி களுக்குக் கைமாறு செய்தது போலாகும். அத்துடன் டாக் டர் மோசஸின் திட்டங்களை முறியடிப்பதும் எனது நோக்க மாகும். அப்படியே செய்வதற்காக நான் கீதா இறந்தன்று மறைந்திருந்து, மறுநாள் அவளைப் புதைகுழியிலிருந்து விடுவிக்கும் பொருட்டுச் சென்றேன். என்னுடன் ராம்சிங் கும் வந்திருந்தார்.

ஆனால், எமக்கு முன்பாக ஒருவன் கீதாவின் பிணக்குழி யைத் தோண்டிக்கொண்டிருப்பதைக் கண்டபோது, பெரும் அதிர்ச்சியடைந்தேன். உடனே தெருவிலிருந்த மின்விளக்கை அணைத்துவிட்டு, ஒரு கல்லறையின் பின் இருந்தோம். ராம் சிங் தன் மந்திர ஜால வித்தையை ஆரம்பித்தார்.

உடனேயே வர்ண விளக்குகள் ஒளிவிட அதன் நடுவே எலும்புருவம் நடனமாடும் தந்திரக்காட்சி தெரிந்தது.

இவற்றைக் கண்டு நான் பயப்படவில்லை. ராம்சிங்கின் அதி அற்புத லீலைகளை எல்லாம் நான் மலையாள நாட்டில் கண்டிருந்தேன்.

சற்று நேரத்தின் பின்பு பார்த்தோம். ஒருவன் புதை குழியில் கிடப்பதைக் கண்டோம். அந்த வேலையைச் செய்தவர் மோசஸ் அல்லது சுகுமார் என்று தான் எண்ணினேன். ஆனல் அவன் ஒரு திருடன் என்றதும் உடனே முதல் நாள் புதைக்கப்பட்ட இன்னெரு புதை குழியைத் தோண்டிப் பிணத்தைக் கீதாவின் இடத்தில் வைத்துவிட்டுக் கீதாவைக் கொண்டு சென்று ரஞ்சிதத்திடம் ஒப்படைத்தேன். ஆனல் சுருளியனிடம் அந்தப் பிணம் பேசியதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை,''

அந்தப் பக்கத்தில் விடயம் இத்துடன் முடிவடைந்தது.

அதேவேளையில், ''கீதா'' என்று பயங்கரமாக அலறிக்கொண்டே துள்ளி எழுந்தார் டாக்டர்.

எதிர்பாராத விதமாக டாக்டர் பயங்கரமாகக் கத்தியதும், திகைத்து விட்ட கீதா திரும்பிப்பார்த்தாள். ஏதோ பகற்கனவு கண்டு புலம்பிய டாக்டர் திரும்பவும், தூங்கிக் கொண்டே புரண்டுபடுத்தார். கீதா டயறியின் அடுத்த பக்கத்தைப் புரட்டினள்.

'மயக்கம் நீங்கிய சுருளியன் பிணத்தை மீண்டும் பார்த்த போது, அது அவனை அச் சுறுத்தும் வகையில் பேசியதாம். அது நண்பர் ராம்சிங்கின் தந்திரம் என்று நான் எண்ணுகிறேன். முன்பெல்லாம் ஒருவன் மேல் ஏவற் பேய் ஏவி விட்டு, அவன் பெயரைக் கூறி அழைக்கவோ ஏதும் மிரட்டவோ செய்யலாம் எனச் சிலர் கூறியதை நான் நம்ப மறுத்தேன். ஆனல், ராம்சிங்கின் செய்கைகள் என்னையும் ஒரு பழைய மனிதனக்கியது, அவருக்கு முன்பு நின்று யாரோ நடமாடுவது போலிருக்கும் உருவம் தெரியாது. குரல் கேட்கும் ஆளிருக்காது. இப்படிச் செயலே அதுவும் எனப் பின்பு அறிந்தேன்.

கீதா மயக்கம் நீங்கிய பின் அவள் வீட்டிற்குச் சென்றதும், அங்கே அவர்கள் ஏற்க மறுத்ததும் கீதாவுக்கே தெரியும். இப்படி நடைபெறும் என நான் எதிர்பார்த்தேன். எனவே, கீதாவிற்குத் தெரியாமல் 'ராம்சிங்' அவளைப் பின் தொடர்ந்தார். நான் எதிர்பார்த்தபடியே அங்கு நடைபெற்றது. உண்மையான கீதாவாக இருந்ததை ராஜா அறிந்திருந்தால், அப்போதும் அவர்கள் கீதாவைக் கொல்லத் தயங்கமாட்டார்கள். ஆகவேதான், நான் கூறிபடியே ராம்சிங் நடந்துகொண்டு, ராஜா கதவைத் திறந்ததும், தனது மாயாஜால வித்தையைக் காட்டி இருக்கிறார்.

உண்மையில் யாரும் அந்த மஜிக் காட்சியைக் கண்டதும் நடுக்கமடையவே செய்வர்.' பின்னர் கீதாவின் கூந்தலை வருடியதும், அவளிடம் ஒரு தந்தையைப் போலப் பரிவு காட்டியதும், 'ராம்சிங்' தான். அவள் தன் தந்தையாகவே நினைத்துவிட்டாள். என் வீடு வந்தாள். நான் எதுவும் தெரியாதவன் போல நடந்துகொண்டேன். பின்பு சிறு சிறு நாடகமாடினேன்' என்று எழுதப்பட்டதுடன் அந்தப் பக்கம் முடிவடைந்தது.

மறுபக்கம் புரட்டியதும், ஒரே வியப்பாக விருந்தது' முதல் வரியில், 'இரத்தப் பிசாசு' என எழுதப்பட்டிருந்தது.

கீதாவைப் பற்றி பொலிசாரிடம் கூறிய நான், பொலிசை அழைத்து வந்தபோது, கீதாவைப் பூங்கொத்தாக மாற்றி விட்டார் ராம்சிங் சில கண நேரச் சித்து விளையாட்டில். ராம்சிங்கிற்கு உள்ள திறமையை என்னால் பாராட்டாது இருக்க முடியாது. அவருடைய அந்தச் செயல்களை மறைக்கவே, 'இரத்தப் பிசாசு' கதையை உண்டுபண்ணும்வகையில் இரத்தம் ஊற்றப்பட்டு நரம்புச் சுருள் ஒன்றையும் அதன் மீது வைத்து வந்தார்.

அவ்வப்போது மல்லிகாவின் உடலில் ஒரு பகுதி இரத்தமும், வேறு மிருகங்களின் இரத்தமும், பாம்பு முதலியவற்றின் இரத்தமும் சேர்த்துக் கலந்து, அதற்கு மூலிகைக்

# ஒரு வார்த்தை....

ஈழத்தின் பிரபல நாவலாசிரியர்களின் தரம்மிக்க படைப்புக்கள் ''வீரகேசரி பிரசுர''மாக மாதந்தோறும் வெளிவருகின்றன.

பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் படித்துப் புகழும் வீர கேசரி பிரசுரங்களை நீங்களும் படிக்கிறீர்களா?

இதுவரை படிக்காவிட்டால் இன்றே உள்ளூர் விற்பனை யாளரிடம் சென்று ஒரு ''வீரகேசரி பிரசுர''த்தை வாங் கிப் படித்துப் பாருங்கள்!

அத்துடன் ''வாசகர் பரிசுத் திட்டம்'' உங்களுக்கு இலவச நூல்களை பெற்றுக்கொள்ள உதவுகின்றது.

ஆறு வீரகேசரி பிரசுரங்களை அடுத்து நீங்கள் வாங்கி ஞல் ஏழாவது வீரகேசரி பிரசுரம் உங்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

ஒவ்வொரு வீரகேசரிப் பிரசுரத்திலும் ''வாசகர் பரிசுத் திட்ட'' கூப்பன் உண்டு.

அறிவை விருத்தி செய்யவும், ஆற்றலை வெளிப்படுத் தவும் வீரகேசரி பிரசுரங்களைத் தவருது படியுங்கள்.

குறிப்பிட்டளவு பிரதிகளே வெளிவருவதால், முன்கூட் டியே உள்ளூர் விற்பனையாளரிடம் உங்கள் பிரதிக்கு ஆடர் செய்யுங்கள். அல்லது நிர்வாகி, புத்தக இலாகா, வீரகேசரி, த. பெ. 160, கொழும்பு என்ற விலாசத்திற்கு எழுதுங்கள்.

# ஜன-மித்திரன் வாசகர்களுக்கு மட்டும் இச்சலுகை!

யாவராலும் தரமிக்கவை எனப் போற்றப்படும் 'வீரகேசரி பிரசுரங்களை', ஜன மித்திரன் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கமாக ஈழத்தின் பிரபல நாவலாசிரியர் ரஜனி எழுதிய நவரசக் காவியம் 'ஆஷா' வரலாற்று நவீனத்தை, விற்பனை விலையிலிருந்து ரூபா 1.00 கழித்து, ரூபா 2.90க்கு அளிக்க முன்வருகின்றோம்.

390 பக்கங்கள் கொண்ட சுவையான நவீனம் ஆஷா. பக்கத்திற்குப் பக்கம் திடீர் திருப்பங்கள், விறுவிறுப்பான சம்பவங்கள்; உங்கள் வாழ் நாளில் மறக்க முடியாத நவீனம்!

**அத்துடன் தபாற் செலவு இனும்.**

புத்தகத்தைப் பெறவிரும்புவோர் கீழ்க்காணும் கூப்பனை நிரப்பி, ரூபா 2.90க்கான காசுக்கட்டளையை இணைத்து, நிர்வாகி, புத்தக இலாகா, வீரகேசரி, த. பெ. 160, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

**ஒரு சில பிரதிகளே கைவசமுள்ளன. முந்துங்கள்! 31-12-73 வரை இச்சலுகை அளிக்கப்படும்.**

*(கூப்பன்)*

---

நிர்வாகி,
புத்தக இலாகா,
வீரகேசரி.

திகதி.......................

**சலுகை விலையில் "ஆஷா" நவீனம்**

இத்துடன் இணைத்துள்ள ரூபா 2.90க்கான காசுக் கட்டளையை ஏற்றுக் கொண்டு, 'ஆஷா' நவீனம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பெயர்** ................................................................

**விலாசம்** ...........................................................

.........................................................................

..................................................................

..........................................

**கையொப்பம்.**

(31.12,73 வரை இச்சலுகை அளிக்கப்படும்.)

# நெஞ்சைவிட்டகலா எழுத்தோவியங்கள்!

பல்லாயிரக் கணக்கானோர் படித்துப் புகழ்ந்த இந் நாவல்களை இன்றே எம்மிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

---

* **தூரத்துப் பச்சை** ரூ. 3-40

கோகிலம் சுப்பையா எழுதிய மலையகத்தின் கண்ணீர்க் காவியம். உணர்ச்சிகளைக் கிளறி உள்ளத்தைத் தொடும் அரிய படைப்பு.

---

* **ஆஷா** ரூ. 3·90

பிரபல நாவலாசிரியர் 'ரஜனி'யின் வெற்றிப் படைப்பு. வரிக்குவரி விறுவிறுப்பும் திடீர் திருப்பங்களும் கொண்ட நவரச நவீனம்.

---

* **நிலக்கிளி** ரூ. 2-25

அ. பாலமனோகரனின் வெற்றிப் படைப்பு. ஒரே மூச்சில் படிக்கத் தூண்டும் சுவையான சமூக நாவல். உங்களை ஒரு புதிய அனுபவத்திற்கு அழைத்துச் செல்லும்.

வீரகேசரி
த.பெ. 160
கொழும்பு.

அடுத்து வரும்...



ஜன -
# மித்திரன்
வெளியீடு

வரிக்கு வரி விறுவிறுப்பும், திடீர் திருப் பங்களும், பயங்கரச் சம்பவங்களும் கொண்ட துப்பறியும் மர்ம நவீனம்

# "நிழல் மனிதன்"

பிரபல நாவலாசிரியர்

## "நவம்"

எழுதியது.

● உங்கள் பிரதிக்கு உள்ளூர் விற்பனையாளரிடம் பதிந்துகொள்ளுங்கள்.


இன்றைய
சிந்தனை
நாளைய
சாதனை
இன்றைய இளம் உள்ளங்களில் இழையோடும் ஆழ்ந்த சிந்தனைகள்
நாளைய அவர்களின் வாழ்வுக்கும்
வாழுகின்ற நாட்டிற்கும் பெரும் சாதனைகளாக
உருவெடுத்து புகழ் மிக்கவர்களாக
வாழச்செய்வதுடன் பெற்றார், உற்றார்,
உறவினர்களையும் பெருமையடையச் செய்கின்றன.
சிந்தனை மிக்க இளவல்களுக்கு தேகாரோக்கியம் மிக அவசியம்.
இதற்கு, கலப்படமற்ற நம்பிக்கையான உணவு தேவை.
நம்பிக்கையான உணவுப் பான வகைகளில்
ஒன்றாக, பிரவுண்சன் கோப்பியை
சுகாதார பரிசோதக விற்பன்னர்கள்
தேர்ந்தெடுத்துள்ளார்கள்
எனவே,
நீங்களும் உங்கள் குழந்தைகளும்
பருகச் சிறந்தது
Browson
PURE
INSTANT
coffee
NET WEIGHT
4 OZS
பிரவுண்சன்
கோப்பி